# சொர்ணம்

## மனசு

# சொர்ணம்

அகிலா கோவிந்த்

MITHRAVINDA 007

# சொர்ணம் மனசு சொர்ணம்



## 1

"கண்ணூஞ்சல் ஆடினாள் காஞ்சன மா...லை..." இழுத்தாற் போல் பாடிய பாட்டு கூட சொர்ணத்தை தேவலோகத்திற்கு அழைத்துச் சென்றது. கணவன் அருகில் இருக்க, அவன் ஸ்பரிசம் லேசாக பட்டும் படாமலும் படும் போதெல்லாம் மெய் சிலிர்ப்பு ஏற்பட, வெட்கம், பயம் இன்பத்தின் எல்லைக்கே சென்று கொண்டிருந்தாள் சொர்ணம். சும்மா பாடுகின்ற பாட்டா இது? ஒரு அருமையான நீங்காத சொந்தத்தை ஏற்படுத்திக் கொடுக்க அல்லவா, பாடுகிறார்கள்.

ஊஞ்சலில் அவன் கையை தன் கையில் இணைத்துக் கொண்டு அமர்ந்திருந்த விதம் மனதை குறுகுறுக்க செய்தது. அழகுப் பதுமையாக சொர்ணம். இவன்தான் என் வழித்துணை. வாழ்க்கைத் துணை. என் காலம் முடிகிற வரைக்கும் துணையாக

இருக்கப் போகிறவன் என்ற உணர்வும் தோன்ற. பாடிய ஒவ்வொரு பாட்டுக்கும் பரவசமானாள் சொர்ணா. ஊஞ்சல் முடிந்தது. மாலை மாற்றிக் கொண்டாயிற்று. பார்த்துக் கொண்டிருக்கும் போதே மாங்கல்யதாரணமும் முடிந்து விட்டது. ஒவ்வொரு சடங்கையும் ஆத்மார்த்தத்தோடு இரசிக்கிறாள் சொர்ணம். அவளும் மிஸஸ் மாதவனாகி விட்டாள்.

ஆசீர்வாதம் முடிந்தது. உறவினர் சிலர் கொடுத்ததைத் தவிர. அவளுக்கென்று பெரிதாக எதுவும் வந்து விடவில்லை. ஆனால் அவனுக்கு, கணவனின் சித்தி பெண் ஒருத்தி வர, வர வாங்கி வைத்துக் கொண்டு இருந்தாள். மாமியாரின் தம்பி ஒரு நோட்டு புத்தகத்தில் எழுதிக் கொண்டு இருந்தார். அவனுக்கு வந்தவை, இவளுக்கு செய்த சீர் வரிசையை விட அதிகமாக இருந்தது. எத்தனை விதமான பரிசுகள். எத்தனை விதமான பார்சல்கள். யாரோ ஒருவர் ஸீலிங் ஃபேன் கொடுத்து இருந்தார். கணவனின் அலுவலகத்தில் பணிபுரிபவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கலர் டிவி பரிசளிப்பு. வெள்ளியிலும், தங்கத்திலும் எத்தனை விதமான சாமான்கள். சொர்ணம் மலைத்தாள். தன் கணவன் இத்தனை புகழ் பெற்றவனா? இத்தனை பேருக்கு வேண்டியவனா? பரிசு மலையைப் பார்த்தாலே ஆச்சரியப் படவைக்கிறது!

இப்பேற்பட்டவன் என்னைச் சார்ந்தவன். அந்த எண்ணமே மனதை புளகாங்கிதப் படுத்த சந்தோஷ அலையில் மிதந்தாள் சொர்ணம். ஆசீர்வாதம் முடிந்து தேங்காய் உருட்ட ஆரம்பித்தார்கள். மொத்த சத்திரமே காலியானதைப் போல தோன்றியது. ரொம்ப நெருங்கின பந்துகளைத் தவிர. சத்திரத்தில் யாருமே இல்லே. கணவனின் அத்தை ஒருத்தியும், இவளின் சித்தியைத் தவிர இவர்களின் அருகில் வேறு யாருமே இல்லை. வீட்டிற்குச் செல்பவர்கள் யாரோ அவர்களிடம் சொல்லிக் கொண்டு போக வேண்டும் என்று கூப்பிட அவர்களும் எழுந்து போக, வாத்தியாரும், இவளும், அவனும் தான். ஒருநிமிடம் தன்னையும் மறந்து அவனை நோக்க, கண்களால் அவளையே விழுங்கி விடுவதைப் போல பார்ப்பது தெரிந்தது. இவளுக்கு

MITHRAVINDA 007



வெட்கம் பிடுங்கித் தின்ன, கன்னங்கள் சிவக்க, தலையைக் குனிந்து தேங்காய் உருட்டலானாள். தேங்காயை உருட்டிய பின் இரண்டு பேரும் எல்லோரையும் சேவித்து எழுந்த போது.

"சொர்ணாவா உம் பேரு. சோனான்னு கூப்பிடட்டுமா?" யாரும் அறியாமல் காதில் கிசுகிசுத்த போது. முகமே குப்பென்று சிவந்தது. யாரோ ஒருவர் கோவில் மாலையைக் கொண்டு வர, அதைப் போடும் சாக்கில் கழுத்தில் லேசாக கிள்ளுகிறான். கையைப் பிடிக்கும் போது யாரும் அறியாமல் உள்ளங்கையில் ஒரு சின்ன கிள்ளல். சொர்ணத்திற்கு ஒருபுறம் சந்தோஷமும், வெட்கமும் மாறி, மாறி தாக்கியது.

"ஏன் எங்கூட பேச மாட்டியா? ஏதாவது பேசேன்." மறுபடியும் பிரியாமல் அவன் காதுகளில் முணுமுணுத்தபோது. பேச்சே நின்று விட்ட மாதிரி தோன்றியது. நாக்கே எழும்ப வில்லை. 'உங்களைப் பார்க்கும் பொழுது எனக்கு வாய் எழும்ப வில்லை. ஆனால் என் தலைவனே நீ எப்படி எனக்கு கடைசி வரைக்கும் துணையாக இருக்கப் போகிறாயோ. அதே போல் உன் ஒவ்வொரு காரியத்திலும் நான் தான் உனக்கு தோள் கொடுக்கப் போகிறேன்.' மானசீகமாக பேசுகிறாள். எதிரில் அவனுடன் பேச. அவனைப் பார்க்க வெட்கம் தான். "நாங்க நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து லெட்டர் போடறோம். அப்புறம் தான் எல்லாம்." மாமியார் அழுத்தம் திருத்தமாக சொல்லிவிட்டாள். பாவம் தன் கணவன். திருமண மேடையிலே சும்மா இருக்க முடியவில்லை. சொர்ணத்திற்கு கணவனை நினைத்து சிரிப்பு வந்தது.

அன்று இரவு அம்மாவும், அப்பாவும் சேர்ந்து அவளுக்கு வண்டி, வண்டியாக உபதேசங்கள் செய்தனர்.

"இத பாரும்மா நீ வெறும் பிளஸ் டூ தான் படிச்சிருக்கே. அவரோ எம்.எஸ்.ஸி கோல்ட் மெடலிஸ்ட். அவர் மனதை அறிஞ்சு நடந்துக்கோ. உடம்பிலே ஒரு பயம் இருக்கணும். இனிமே அப்பா, அம்மா, பொறந்தாம் எல்லாத்தையும் மறக்கணும் நீ. உனக்கு அவர் ஒருத்தர் தான்

உண்மையான சொந்தம். "அப்பா மேலும், மேலும் சொல்ல ஆரம்பித்தார்.

"உங்க அம்மாவைப் பாரு பன்னண்டு வயசுல இந்த ஆத்துக்கு வந்தா. இப்ப ஐம்பது வயசாகிறது. இந்த முப்பத்தி எட்டு வருஷத்துல என் மனசு கோணி அவ நடந்ததில்லை. எத்தனையோ தடவை அவளை கோவிச்சுட்டு இருக்கேன். ஏன் அடிக்கக்கூட அடிச்சிருக்கேன். அவ முகத்துல புன் சிரிப்புங்கிறது மறஞ்சதே இல்லை. வாழ்க்கைன்னா அப்படித் தான் இருக்கணும். நல்லதனமா நடந்துண்டு எங்க பேரை காப்பாத்துவியா?" அப்பா சொல்ல, சொல்ல ஏதோ மந்திரங்களைக் கேட்பது போன்ற ஒரு உணர்வு. மௌனமாக தலையை அசைத்தாள். கணவன் இன்னும் நெருங்கி வந்து விட்டதைப் போன்ற ஒரு உணர்வு.

சொர்ணம் அவளின் பெற்றோருக்கு ஒரே பெண். வேறு குழந்தைகள் கிடையாது. திருமணம் முடிந்து எத்தனையோ வருடங்கள் கழித்து தவம் இருந்து பிறந்தவள் சொர்ணம். குழந்தை இல்லையே. இல்லையே என்று ஏங்கி, ஏங்கி பிறக்காதா என்று தவம் இருந்து பிறந்தவள் சொர்ணம். அப்பா, அம்மாவிற்கு சற்று செல்லம்தான். அப்பா வாத்தியார் தொழில். அம்மா, அப்பாவிற்கு அடங்கிய ஆசாரமான மனைவி. சொர்ணத்தை பிளஸ் டூ வரை படிக்க வைத்தார்கள். ஆனால் சொர்ணத்திற்கு அதற்கு மேல் படிப்பு சுத்தமாக ஏறத்தான் இல்லை. பிளஸ் டூவோடு மேலே படிக்க விருப்பமில்லாது படிப்பை நிறுத்திக் கொண்டாள் சொர்ணம். பிளஸ் டூ முடித்து இரண்டு வருடங்கள் அம்மாவோடு இருந்து. வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் கற்றுக் கொண்டாள். எந்த காரியத்தையும் பாங்காகச் செய்வதில் சொர்ணத்திற்கு ஈடு இணை கிடையாது. எந்த கை வேலையாக இருந்தாலும் மிக, மிக அழகாகச் செய்வாள். மணி பின்னுதல், பை போடுதல், பிளாஸ்டிக் கூடை போடுதல், தையல் தைத்தல், கோலம் போடுதல் சமையல் செய்தல் என்று எல்லா வேலையிலும் கெட்டிக்காரி தான் சொர்ணம்.

MITHRAVINDA 007



அது மட்டுமல்ல பார்ப்பதற்கும் மிக, மிக அழகாக இருப்பாள். தந்தம் போன்ற அந்த உடலும், உள்ளத்தை சுண்டி இழுக்கும் கண்களும். சற்று குவிந்த அந்த சிவந்த உதடுகளும் ஒரு முறை பார்ப்பவரை பலமுறை திருப்பி, திருப்பி பார்க்க சொல்லும். இவளுக்கு பார்த்த முதல் வரனே மாதவன் தான். இவள் அழகுக்காகவே இவளை சல்லிக்காசு இல்லாமல் மணம் புரிய வந்தான் மாதவன். அவளுக்கும், மாதவனுக்கும் பத்து வயது வித்தியாசம். மாதவன் ஒரு வங்கியில் அதிகாரியாக பணியாற்றுகிறவன். அவனுக்கு சென்னையின் புறநகர் பகுதியில் சொந்த வீடு ஒன்று உண்டு. அம்மா, தம்பிகளோடு அங்கே தான் வாசம். அப்பா இல்லையாம். கடைசி தம்பி பிறந்த போதே பரலோகம் சென்று விட்டாராம். அம்மாவும் கூடப் பிறந்த இரண்டு சகோதரர்களும் தான் ஒன்றாக இருக்கிறார்களாம். ஆனால் கல்யாணத்திற்கு கூடப் பிறந்தவர்கள் ஏன் வரவில்லை? திருமணத்திற்கு முதல்நாள் மாமியார் தன் சுற்றம் சூழ படையுடன் வந்தபோதே. இவள் மனதில் உதித்த கேள்வி இது. ஒரு வேளை ஊரில் ஏதாவது வேலையா? என்ன வேலையாக இருந்தாலும் இப்படி கல்யாணத்திற்கு கூட யாராவது வராமல் இருப்பார்களா? சொர்ணத்திற்கு அதை நினைக்கையிலே நெருடல் தான். ஒரு வேளை அண்ணன் மேல் வெறுப்பு. அசிகை காரணமாக இருக்குமா? எதுவாயிருந்தாலும் நீங்களும் வந்துதான் ஆகணும்னு மாமியார் சொல்லமாட்டாளா? இப்படி இரண்டு மச்சினர்களுமா வராது இருப்பர். ஆச்சரியம் தான்.

மாதவனுக்கு அடுத்தவனுக்கு சின்ன வயதிலேயே இளம்பிள்ளை வாதம் வந்து கால்கள் சூம்பிக் கொண்டதாம். சரியாக நடக்க வராதாம். நொண்டி, நொண்டி தான் நடை போடுவானாம். அதற்கு அடுத்தவனும் படிக்காமல் வேலை வெட்டிக்குப் போகாமல் இவர்கள் கூடவே இருப்பவனாம். மாதவனின் முதல் இரண்டு தம்பிகளுமே கறுப்பு தானாம். இரண்டு பேருமே அவர்களின் அப்பாவைக் கொண்டிருந் தார்களாம். மாதவன் ஒருவன்தான் சற்று வித்தியாசமாக

வெள்ளைக்கும், மாநிறத்திற்கும் இடைப்பட்ட நிறத்தில் இருக்கிறானாம். சொர்ணாவின் தங்க நிறம் அவனுக்கு இல்லையென்றாலும் அந்த இருபத்து எட்டு வயது இளைஞனுக்கு மாநிறமே மெருகூட்டியது அந்த கம்பீரமும், களையும் ஆளை அசர அடித்தது. சொர்ணாவும் அந்த அழகில் களையில் கம்பீரத்தில் கிறங்கிப் போயிருந்தாள். திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் வேறு அவளின் அதிர்ஷ்டத்தைப் பற்றி மாய்ந்து, மாய்ந்து பேசி புகழ்ந்து தீர்த்தனர்.

“ஏண்டிம்மா உங்காத்துக்காரர் எம்.எஸ்.ஸி கோல்ட் மெடலிஸ்ட்டாமே. கொடுத்து வச்சவ தான்.” என்றனர். “உங்கப்பன் கொடுக்கிற நாலாயிரம் ரூபாய் டௌரிக்கும் பதினைந்து பவுன் நகைக்கும் பேங்க் ஆபீசரா? அதிர்ஷ்டம் தான்” என்றனர். சொர்ணத்திற்கு தலை கால் புரியவில்லை. போதி மரத்தடியிலே ஞானம் பெற்ற புத்தரைப் போல் அப்பாவின் உபதேசத்தில் திளைத்து, கணவனுக்கு கை கொடுக்க காத்து நின்றாள் சொர்ணம். அடுத்த நாள் காலையிலே கிளம்பி விட வேண்டும் என்று மாமியார் சொல்லி விட, எட்டு மணிக்குள் கட்டு சாதக் கூடை ரெடியாயிற்று. இதுவரை அவளருகே வந்து ஒரு வார்த்தை மாமியார் பேசவில்லை. மற்றவர்களை அறிமுகப்படுத்தக் கூட இல்லை. திரட்டு பாலைக் கொடுத்து விட்டு கிண்டலாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள் மாதவனின் தாயார். ஒரு நிமிடம் மாமியாரை நினைத்து பயம் ஏற்பட்டாலும் ‘சீ இவள் என் தாயாருக்கு சமானம். என் கணவனின் தாயார். என் மதிப்பில் மிக உயர்ந்தவர்.’ பயத்தையும், அதனால் ஏற்படப் போகும் தப்பான எண்ணத்தையும் ஒரு சேர அழித்தாள். இனி மேல் தன் கணவன் தான் தனக்கு எல்லாமே. அவனின் தாயார் தனக்கு தெய்வம் மாதிரி. மாமியார் மருமகளை கண்டு கொள்ளவில்லை என்றாலும் இவள் வலியப் போய் புன்னகை செய்தாள். மாமியாரின் கிண்டலையோ, உறுமலையோ லட்சியப் படுத்தாமல் சாதாரணமாகவே மலர்ந்து இருந்தாள் சொர்ணம். எட்டு மணிக்கே கட்டு சாதத்தைக் காரில் ஏற்றினார். சொர்ணா எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டாள். அம்மா தேம்பித்



தேம்பி அழ ஆரம்பித்தாள். அப்பா கூட கண் கலங்கினார். ஆனால் சொர்ணத்தின் கண்களிலிருந்து ஒரு சொட்டு நீர் கூட வரவில்லை. மாறாக சின்னதாக புன்னகைத்து,

“என்னம்மா நீ. ராத்திரி எல்லாம் அத்தனை லெக்சர் அடிச்சே. இப்ப என்னமோ பத்தாம்பசலித்தனமாக, அழுதுண்டு இருக்கியே.” பெண்ணின் பதிலில் அம்மா ஆசுவாசப் படுத்திக் கொண்டாலும், கண்ணீர் திரண்டு வழிந்தது. சொர்ணம் இயல்பாக இருந்தாள். “அம்மா, அம்மா” மாமியாரை மூச்சுக்கு முன்னூறு அம்மா கூப்பிட்டாள். ஆனால் மாமியார் பத்து வார்த்தைக்கு ஒரு வார்த்தை கூட பதில் பேசவில்லை. ‘ரொம்ப பேசும் ரகம் இல்லே போலருக்கு.’ சொர்ணம் மனதை தேற்றிக் கொள்கிறாள். ஒரு வேளை தன் பிள்ளையின் அன்புக்கு போட்டி என்று நினைத்து விட்டாளோ, கல்யாணத்துக்கு முன்னால் அம்மா சொன்னதும் நினைவுக்கு வந்தது.

“த பாருடீ எந்த மாமியாருக்கும் மாட்டுப் பொண்ணை முதல்லே பிடிக்காது தான். அவா அன்புக்கு போட்டின்னு அவா நினைச்சுக்கறா. அதுனாலே முதல்லே என்ன சொன்னாலும், எரிஞ்சு விழுந்தாலும், ஏன் அடிச்சாலும் பெரிசா எடுத்துக்க கூடாது. புரியறதா?” சொர்ணமும் எதையும் பொருட்படுத்த வில்லை. மாமியாரின் அலட்சியத்தையும் ஒரு புன்சிரிப்போடு ஏற்றுக் கொண்டாள்.

தான், மாமியார், கணவன் மூவரும் பின் சீட்டில் டிரைவரோடு மாமியின் தம்பி முன் சீட்டில், மற்றவர்கள் எல்லாம் வேனையும், பஸ்ஸையும் பிடித்து போய் விட்டார்கள். ஒரு புறம் கணவனையும், மறுபுறம் மாமியாரையும் வைத்துக் கொண்டு எப்படி அமருவது? அவளின் தயக்கத்தை புரிந்து கொண்டானோ என்னவோ கணவன் நடுவில் அமர்ந்து கொண்டான். மாமியார் தம்பியோடு பேசப் பேச கணவரின் கைகளும், கால்களும் சில்மிஷத்தில் ஈடுபட, சொர்ணம் தான் தவித்துப் போனாள். அவ்வப்போது மாமியாரின் கண்கள் வேறு தங்கள் செயல்களை, குறிப்பெடுத்துக் கொண்டிருப்பதை பார்க்கும் போது. சொர்ணாவிற்கு பதட்டமாக இருந்தது. ஐயோ

MITHRAVINDA 007

ஏற்கனவே மாமியார் வேறு பிரண்டிலியாக இல்லை. பிள்ளை வேற இப்படி உருகினால் இன்னும் தன் மேல் வெறுப்பு அல்லவா வந்து விடும் நினைக்கையிலே கை, கால்கள் நடுங்கின. அவளின் கைகளை அவசரம் அவசரமாக விலக்குகிறாள். ஆனால் கணவனோ எதையுமே லட்சியம் செய்யவில்லை. தன் காரியத்திலேயே கண்ணாயிருந்தான். 'அம்மா' சொர்ணம் மெல்லிய குரலில் எச்சரிக்கிறாள். அவள் சொல்லியது எதையுமே அவன் இலட்சியம் செய்யவில்லை. மாமா வேறு திரும்பி, திரும்பி பார்க்க 'என்ன மனுஷன் துளி கூட இங்கிதம் தெரியாமல்' முணுமுணுக்கிறாள் சொர்ணம். முதல் முறையாக கணவன் மேல் கோபம் வருகிறது. அதுவரை இருந்த புன்சிரிப்பு, மகிழ்ச்சி எல்லாம் போய் எரிச்சல் வந்தது. முகத்தை வலுக்கட்டாயமாக கடுகடுப்பாக்கிக் கொண்டு சற்று தள்ளியே அமர்ந்தாள். "சும்மா இருங்க" மேலே உரிமையுடன் போட்ட கையைத் தள்ளி விட, மாமியார் முறைத்துப் பார்ப்பது தெரிந்தது. 'முதல் கோணலே முற்றும் கோணலாகி விடும் போலருக்கே. அன்று மதியம் தான் அவர்கள் போய் சேர்ந்தார்கள். இறங்கினவுடன் மாமியார் கூச்சலிட்டாள்.

"டேய் வாசு. ஆரத்தி கரைச்சு எடுத்துண்டு வாடா. ஜடமாட்டம் நிக்கறே." வேலை வெட்டி இல்லாத கடைசி மச்சினன் திபு திபுவென்று ஓடி வந்தான். பக்கத்து வீட்டு ஆட்கள் ஓடி வந்து ஆரத்தி எடுக்க, உள்ளே நுழைந்தார்கள். போய் சேர்ந்ததுமே கட்டு சாதக் கூடையிலிருந்து எடுத்து சாப்பிட்டார்கள். தூரத்திலிருந்து இரண்டு மச்சினர்களும், தன்னை அதிசயமாக பார்ப்பது தெரிந்தது. சாப்பிட்டதுமே சொர்ணாவிற்கு கண்ணை சொக்கியது. அடுத்த அறையில் தன் சாமான்களோடு கட்டு சாத மூட்டைகளும் ஆரோகணித்து இருக்க, அங்கே ஒரு கட்டிலும் தென்பட்டது. கணவனைக் காணவில்லை. சாப்பிட்ட கையோடு எங்கே போனானோ தெரிய வில்லை. அந்த நிமிடத்தில் படுத்தால் தேவலை என்று தோன்ற. அங்கிருந்த கட்டிலில் படுத்து நிம்மதியாக உறங்கலானாள். எத்தனை நேரம் உறங்கியிருப்பாளோ?

MITHRAVINDA 007



"ரொம்ப நல்லா இருக்கு பிரயோசனப்படாத இரண்டு பசங்க. சரி வந்ததாவது நல்லா இருக்கும்னு பார்த்தா விளக்கு வச்சு இத்தனை நேரம் யாராவது தூங்குவாங்களா? நன்னா வந்து வாச்சிருக்கு." மாமியாரின் கூக்குரலில் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள் சொர்ணம்.



## 2

இருளோ என்ற குகை. அந்த குகையின் ஒரு மூலையில் புலி ஒன்று துரத்த ஓடுகிறாள் சொர்ணம். குகையின் ஒரு ஓரத்தில் இருந்த வெளிச்சத்தை நோக்கி ஓடுகிறாள்.' "காப்பாத்துங்க பிளீஸ்" இவள் கதறி மனமுருகி நிற்கையில் ராட்சசன் வேடத்தில் ஒருவன். யாரது? உருவத்தில் தன் கணவனைப் போல் தோற்றம் அளிக்கிறதே. தன் கணவனா? திடுக்கிட்டு விழிப்பதற்குள் மாமியாரின் கூப்பாடு கேட்கவே பதறி அடித்துக் கொண்டு எழுந்தாள்.

"ஏண்டி உங்காத்துலே விளக்கு வைக்கற நேரத்திலே இப்படித்தான் சயனிச்சுகிட்டு இருப்பியா?" மாமியார் முகத்தில் அறைவது போல் நேராகவே கேட்கிறாள். கல்யாணம் முழுவதும் சிடுசிடுவென்று, முகத்தைக் கடுகடுப்பாக வைத்திருந்த மாமியார், பணிவாக பதில் சொல்லியும், லட்சியம் செய்யாமல் ஏளனம் செய்தவள், இன்று முகத்துக்கு நேரே துப்பாக்கியால் சுடுவது போல் கேள்விகளால் துளைத்து எடுத்து விட்டாள்.

இந்த மாமியாரிடம் தன்னால் தாக்குப் பிடிக்க முடியுமா? புதிதாக வந்திருக்கும் மருமகளிடம் இப்படி பேசினால், அவள் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டாளா என்று கூடத் தெரியாத ஒரு ஜன்மமாக இருக்கிறாள். இவளை என்னால் உருக வைக்க

முடியுமா? என் மேல் அன்பு செலுத்துவாள் என்பதே சந்தேகமாக இருக்கிறதே.'

"என்னடி மலங்க, மலங்க முழிக்கறே. புருஷனை கைக்குள்ள போட்டுருக்கோம்னு நினைச்சுகிட்டு இருக்கியா?" உடம்புலே ஒரு பயம் வேணாம். புருஷன் ஆத்துக்கு வந்திருக்கோமே இப்படி தடிமாடு மாதிரி தூங்கறோம்னு தெரிய வேணாம்." இவ் வார்த்தை முள்ளாக குத்த, சட்டென்று அம்மாவின் ஞாபகம் வந்தது. அம்மா வீட்டில் இப்படித் தான் ஒருமுறை தன்னை மறந்து தூங்கியதில் "ஏண்டி சந்தி வேளையில் இப்படி தடிமாடு மாதிரியா தூங்குவே" அம்மா அவளைக் கேட்க, அன்று முழுவதும் தான் அழுத அழுகையும், ரகளையும். அப்பா அம்மாவை நன்றாகவே திட்டினார்.

"குழந்தை ஒரு நாள் தூங்கினா என்ன? இப்படியா பேசுவே?"

"ஆமா நான் பேசினா தப்பாத் தோணும். நாளைக்கு மாமியார் வந்து மூஞ்சியிலே இடிப்பா. அப்ப என்ன பண்ணுவா?"

'அம்மா நீ சொன்னது அப்படியே பலிச்சிடுத்தே ஒருவேளை இப்படித்தான் வரணும்னு நீ எதிர்பார்த்தியா?'

மனதுள் புழுங்க, கண்களின் ஓரத்தில் நீர் திரண்டது.

"என்னடி அழுகையை ஆரம்பிச்சிட்டியா? இந்தக் கதை எல்லாம் இங்க வேண்டாம். போடி போய் மூஞ்சி, கை, கால், எல்லாம் அலம்பிண்டு வா. போ, உன் புருஷனுக்கு இந்த மசமசப்பு பிடிக்காது. பாத்தான்னா உதை தான் படுவே."

மூன்று நாட்களுக்கு முன்பு வரை இப்படியெல்லாம் பேசியிருக்க முடியுமா? ஒரு சின்ன கயிற்றை கழுத்தில் கட்டி விட்டதால் என்ன உரிமை? என்ன திமிர்? என்ன அகங்காரம்?

"அந்த காலத்திலே பத்து வயசுலேயும், எட்டு வயசுலேயும் கல்யாணம் பண்ணுவா. நமக்கு கைக்கு அடங்கியிருக்கும் இப்ப தடியானப்புறம் கல்யாணம். எங்காவது விளங்குமா?"



"ஏண்டா நொண்டிக் கழுதை இன்னுமா சமைக்கறே?" 'தன் கணவனின் முதல் தம்பிக்கு அழைப்பு' என்று தெரிந்தது. வெந்தயக் குழம்பு வாசனை மூக்கைத் துளைத்தது. இருளோ என்றிருந்த பின் கட்டுக்கு மெதுவாகப் போனாள் சொர்ணா. எது பாத்ரூம், எது எந்த அறை, என்று தெரியாமல் ஒரே மலைப்பாக இருந்தது. "என்ன இது? அலாவுதீன் குகை மாதிரி இருக்கு?" பயந்தபடியே தயங்கி நின்றாள். கையில் துண்டும் மாற்றுத் துணிகளும் இருக்கின்றது. குளித்து விட்டு வந்தால் நன்றாக இருக்கும். ஆனால் இருளோ என்று இருக்கும் இடத்தில் எங்கே போவது? மனதில் பயம் தாக்க மறுபடியும் வந்தவழியே போகிறாள். அப்பா.. ஒரு லைட் கூடவா கிடையாது. இத்தனை இருட்டாக இருக்கிறதே. சொர்ணாவின் வீடு கூட ரெண்டு கட்டு வீடு தான். ஊஞ்சல் உள், ரேழி உள் என்று நீண்டு கொண்டே போகும். ஆனால் முன்னாலும் சரி, பின்னாலும் சரி ஒரு சின்ன விடி விளக்காவது எரிந்து கொண்டு தான் இருக்கும். இப்படி இருளோ என்று இருக்கவே இருக்காது. இங்கே கூடத்தில் சமையல் அறையில் வாசலில் தான் விளக்கு. மீதி இடங்களிலெல்லாம் கும்மிருட்டாக இருந்தது. மாமியாரை கேட்கலாமா? வள்ளென்று விழுவாளா? நிச்சயமாய் விழுவாள். தன்னைப் பண்ணிக் கொண்ட மாமியார் ஏன் இப்படி இரக்க மில்லாமல் நடந்து கொள்கிறாள்? யோசிக்கிறாள் சொர்ணம். சொர்ணம் தயங்கி, தயங்கி சமையலறைப் பக்கம் வருகிறாள்.

"வாடியம்மா வா. தூக்கம் விட்டதா? அது என்ன ராட்சசி யாட்டம் சாயரட்சை தூக்கம்." மாமியார் நேரடியாகவே கேட்க, பதில் பேசாது மௌனித்தாள் சொர்ணம். மெல்ல, மனது துவண்டு கொண்டே இருந்தது.

"டேய் காபியைக் கலடா" மாமியார் உத்தரவு போட,

"அம்மா... நான்" ஏதோ சொல்ல ஆரம்பக்கப்போன சொர்ணத்தை அடக்கினாள் மாமியார்.

MITHRAVINDA 007

"கொஞ்சம் வாயை மூடிக்கிறயா?"

ஒரு நிமிடத்தில் நொண்டி மச்சினன் காலை இழுத்து இழுத்து நடந்து வந்து காபியைக் கலந்து கொண்டு வந்து கையில் தர. காப்பியை ஆற்றி சாப்பிட ஆரம்பிக்கிறாள்.

மனம் வேறு பயத்தில் திக், திக்கென்றதும் மாமியார் இன்னும் என்னென்ன சொல்வாளோ? காபி வாயில் இருந்து நெஞ்சில் நிறைந்து ஒரு சுகானுபவத்தை உண்டு பண்ண மாமியார் நக்கலாகக் கேட்கிறாள். "இந்த மாதிரி காபியை எப்பவாவது சாப்பிட்டு இருக்கியா?" ஒரு நிமிடம் ஆடித்தான் போய்விடுகிறாள் சொர்ணம் 'இதென்ன துளிகூட நாகரீகம் இல்லாமல் அல்பத்தனமான ஒரு கேள்வி' தன் வீட்டை விட பணக்காரர்கள் தான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் பணக்காரத்தனம் நெஞ்சில் இல்லையே. பதினெட்டு வயது சொர்ணத்தின் மதிப்பில் மாமியார் வெகுவாக விழுந்து விட்டிருந்தாள். மாமியாரை தன் சொந்தத் தாயாக மதிக்க வேண்டும் என்ற உணர்வு கொஞ்சம். கொஞ்சமாக நழுவிக் கீழே விழுந்துவிடும் போல் தோன்றியது. 'அப்பா என்னென்னவோ அட்வைஸ் பண்ணீங்களே. உங்களுடைய எந்த அட்வைசும் என்னால் பாலோ பண்ண முடியலையே. ஆசையே இல்லாத மாமியாரிடம் அன்பைக் கொடுக்கவும் எடுக்கவும் முடியுமா என்ன? அம்மாவுக்கு பிடிக்காமல் பிள்ளைக்கு மட்டும் என்னை பிடித்து விட்டதா? இதற்காகவா இந்த பாணம்? ஆனால் பிள்ளைக்கும் என்னைப் பிடித்தது போல் தோன்றவில்லையே இல்லையென்றால் வந்தவுடன் அம்போ என்று விட்டுவிட்டு போவாரா? சொர்ணம் கவலையில் ஆழ்ந்தாள். ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டோமோ? பய உணர்வு நெஞ்சை அடைத்தது. அன்று இரவு சாப்பிடும் வரையில் கணவன் வரவில்லை. மாமியார் சாப்பிட்டதும் குரல் கொடுத்தாள்.

"ஏண்டி உனக்கு ஒவ்வொண்ணும் சொல்லணுமா? கொட்டி கிட்டா வேலை ஆகுமில்லே." ஈட்டிகளாக வார்த்தைகள்.

"இன்னும் அவர் வரலியே."

MITHRAVINDA 007



"அவரா? அவன் எப்ப வருவான்னு யாருக்குத் தெரியும்?" அலட்சியமாக சொன்னாள். "எல்லோரும் சாப்பிட்டு விட்டு அவனுக்கு மூடி வச்சுட்டு படுக்கப் போக வேண்டியது தான். எட்டு மணிக்கு மேல தனிபண்ற உள்ளிலே லைட் எரியக் கூடாது புரியறதா?" பெரிய தொண்டையில் மாமியார் மிரட்டுகிற தொனியில் கூற. மௌனமாக சமையல் அறையை நோக்கி செல்கிறாள். அதற்குள் முதல் மச்சினன். சீனு கால் சரியில்லாதவன். மனை போட்டு. கோலம் போட்டு இலையை போட்டு வைத்திருந்தான். தயங்கி நின்றவளை.

"உட்காருங்க பரிமாறுகிறேன்" ஒருவித வெட்கத்துடன் பயத்துடன் மெதுவாக அமர. சீனு பாந்தமாக பரிமாறுகிறான் இதே தன் கணவன் கூட இருந்தால் என்ன ஆகி இருக்கும்? இப்போது தன் கணவன் கூட இருந்தால், இந்த சாப்பாட்டை சிலாகித்து சாப்பிட்டு இருப்பாள். இன்று ஒருவாய் கூட இறங்க மறுத்தது. இலை எடுக்கப் போனவளை. "வேண்டாம் வச்சுடுங்க." சீனு தடுக்க, தடுக்க கேட்காமல் இலையை தானே புழற்கடையில் குப்பைத் தொட்டியில் வீசி விட்டு வந்தாள். முதலில் இருந்த பயம் சற்று குறைந்தது போல் தோன்றியது இவள் கையைக் கழுவி வருமுன் சீனு எச்சிலை சாணியில் எடுத்து துடைத்து விட்டிருந்தான்.

தான் ஏற்கனவே அமர்ந்திருந்த அறையை நோக்கி ஆனந்தம் எல்லாமே வடிந்து விட்டது போல் தோன்றியது. பந்தப்பட்டவன் எங்கு போனானோ தெரியவில்லை. கணவனின் நிழலைக் கூட காணோம். முகமே மறந்து விடும் போல் தோன்றியது. நெருங்கிய உறவினன் காட்டாத நெருக்கத்தை கணவனின் தம்பிகள் காட்டும்போது உள்ளம் நெகிழ்ந்து தான் போனது. இவர்கள் காட்டும் இரக்கத்தை. உதவியை என்னென்று சொல்வது? மனதில் இதையே போட்டு போட்டு உழன்று எப்போது உறங்கினாளோ. அவளுக்குத் தெரியாது. திடீரென்று யாரோ காலை நிமிண்டுவது போல் தோன்ற ஒரு நிமிடம் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். அவளின் ஆசைக் கணவன் மாதவன்.

"எங்கே போயிட்டேன்?" அவளை முடிக்க விடாமல் வாயைப் பொத்துகிறான்.

"ஷ் வா?"

வேறொரு சமயமாக இருந்தால் 'சீ.. இதெல்லாம் தப்பு' என்று சொல்லியிருப்பாள். இப்போது அப்படி இல்லை இவனோடு நிறைய பேச வேண்டும். வீட்டின் நிலையை எடுத்து சொல்ல வேண்டும். யாரும் அறியாமல் அவனை பின் தொடர்ந்தாள். மாமியார் பார்த்து விடுவாளே பயம் வேறு வந்து நெஞ்சை அடைக்க சுற்றும் முற்றும் பார்த்தவாறே அவனின் பின்னே வெளியேறினாள். அவனுடைய படுக்கை அறையைப் பார்த்ததுமே மலைத்தாள்.

இந்த பக்கம் டிரஸ்ஸிங் டேபிள்.. ஆளுயரக் கண்ணாடி ஒரு மூலையில் டி.வி.டேப் ரிகார்டர். ஸ்டீரியோ, ஒரு மினி பிரிஜ் கூட அந்த அறையில் இருந்தது. மலைத்து நின்றவளை, வாரி அணைத்துக் கொண்டான்.

"விடுங்க. என்ன இது?" அவனிடமிருந்து விடுபட முயற்சித்தாள். சற்று வேகமாக தட்டி விட,

"என்னம்மா எம்மேல கோபமா?"

"நான் இங்கே வந்தது பர்சனலா பேசணும்னு. இதுக்காக இங்கேவரலை. இதுக்குன்னு ஒரு நாள், நட்சத்திரம் பார்க்கும் போது அன்னிக்கே வச்சுக்கலாம்."

"நீ பர்சனலா என்ன பேசப் போறேன்னு எனக்குத் தெரியும்?"

"என்னது?"

"எங்கம்மா மோசமானவங்க. தம்பிகளைக் கூட கவனிக்கறதில்லை. உன்னையும் கண்டபடி கேக்கறாங்க. அதானே. அதானே நீ சொல்லப் போறே. கேட்டு கேட்டு காதே புளிச்சு போச்சு."

"நான் இன்னும் சொல்லவே இல்லியே."

MITHRAVINDA 007



"நீ சொல்லலேன்னா என்ன? எல்லோரும் சொல்றது தான். இதபாரு ஒண்ணு புரிஞ்சுக்கோ. எங்கம்மா ரொம்ப பணக்கார குடும்பத்திலே பொறந்தவங்க. அந்த ஆணவம், கர்வம், திமிர் இதெல்லாம் அவுங்களுக்கு பிறக்கும்போதே கூடவே வந்தது. இனிமே மாத்த முடியாது. நாம தான் அட்ஜஸ்ட் பண்ணணும். அவங்க பேசறதை இந்த காதுலே வாங்கி அந்தக் காதுலே விடு." கணவன் சொல்ல, சொல்ல முழுதாக சமாதானம் அடையா விட்டாலும் ஒரு வித குழப்பத்துடன் தலையைப் அசைத்தாள் சொர்ணம். எல்லாவற்றையும் விலாவரியாக சொன்னவன் பேச்சை சற்று மாற்றி பேசுகிறான்.

"இதபாரு நாம் என்ஜாய் பண்ணத்தான் உன்னை இங்கே கூப்பிட்டேன்." என்று அவளை கட்டி அணைக்க முயல.

"இல்லே வேண்டாம் இதெல்லாம் தப்பு. நாள், நட்சத்திரம் எல்லாம் பார்க்கணும்னு அம்மா சொன்னாங்களே. அது வரைக்கும் வெயிட் பண்ணலாமே."

"பயித்தியம் மாதிரி பேசாதே. அதெல்லாம் பொய். அவுங்க பார்க்கவே மாட்டாங்க."

"என்ன சொல்றீங்க?" அதிர்ச்சியோடு சொர்ணம் கேட்க.

"உண்மையைத் தாம்மா சொல்றேன். உங்க வீட்டிலே பணம் இல்லேன்னு. இந்த சம்பந்தம் கூடவே கூடாதுன்னுட்டாங்க. ஆனா உன்னைத் தவிர யாரையும் பண்ணிக்க எம்மனசு இடம் கொடுக்கலை. என்னைப் பொறுத்தவரை நீதான் என் மனைவின்னு உன்னைப் பார்த்த அன்னிக்கே நிச்சயம் பண்ணிட்டேன். நடக்கவே முடியாத காரியத்துக்கு ஏன் அனாவசியமா வெயிட் பண்ணணும்? ஆண்டவன் மேலே பாரத்தை போடுவோம். அவன் பார்த்துக்கட்டும்." கணவன் மனமுருக சொல்லுகிறான்.

"வேண்டாம், வேண்டாம்" என்று மறுத்தாலும், கணவனின் தேனூறும் வார்த்தைகளை ஒதுக்க முடியவில்லை. தவிரவும் மாமியாரை எதிர்கொள்ள, கணவனின் அரவணைப்பு, ரொம்ப

ரொம்ப அவசியம். எதுவாயிருந்தாலும் இவன் என் புருஷன் தானே. கடவுளுக்கு எது இஷ்டமோ அப்படியே நடக்கட்டும்.

அன்றையிலிருந்து ஆரம்பித்தது அவளது தாம்பத்தியம். எல்லோரும் படுக்கப் போனபின் பதினொன்றோ, பன்னிரண்டோ. விடியற் காலையில் நான்கு மணிக்கு யாரும் அறியாமல் தன் அறைக்கு வந்து படுத்துக் கொள்வான். கணவனிடம் மாமியாரைப் பற்றி எதுவுமே பேச முடியவில்லை. ஏதாவது ஆரம்பித்தாலே.

"நல்ல சூழ்நிலையில் கண்டதெல்லாம் பேசிக் கெடுக்காதேம்மா." என்பான்.

அன்று இரவு வெகு நேரம் ஆகி விட்டது. இரவு வெகு நேரம் கண் விழித்ததில், சற்று நேரம் கழித்து எழுந்து விட்டாள். அவசரம் அவசரமாக இறங்கி வரும் போதே. வாசலில் பால்காரன் வரும் சத்தம் கேட்டது மாமியார் வந்து விடுவாளே நடுங்கினாள்.

'நல்லவேளை யாரும் இல்லை.' சுற்றும் முற்றும் நன்றாக பார்த்து விட்டு தன் அறையினுள் புகுந்து கதவை சாத்திக் கொண்ட போது, அறையின் மூலையில் இருந்த கட்டிலில் மாமியார் அமர்ந்திருப்பது தெரிந்தது.



3

**மா**மியாரைப் பார்த்ததும் முகத்தில் ஈயாடவில்லை. ரௌத்காரமாக காளி போல் நிற்கிறாள் மாமியார். "எத்தனை நாளா நடக்கிறது?" மாமியார் பெரிய குரலில் பேச, சொர்ணம் நடுங்கியவாறே வாய் பேசாது நின்றாள்.



"ஏண்டி பேசலே? வாயிலே என்ன கொழுக்கட்டையா? பதில் சொல்லு. நீ இத்தனை மோசமான பொண்ணுன்னு தெரியவே தெரியாதே. உங்க ஆத்திலே இப்படித்தான் வளர்த்திருக்காங்களா? என்ன அவசரம்? தாள முடியலையா?" அடுத்த வார்த்தை கேட்க முடியாமல், தாங்க முடியாமல் சொர்ணம் அழுகிறாள். 'என்னென்ன பேசுகிறாள் இவள். இந்த வார்த்தையை இவள் பிள்ளையை கேட்கக் கூடாதா? புருஷன் வான்னு சொல்ற போது நான் என்ன செய்ய முடியும்?' மாமியார் இன்னும் காது கொடுத்து கேட்கமுடியாத பேச்சுக்களை பேச, கண்களிலிருந்து அருவியாய் பொழிய நின்று கொண்டிருந்தாள் சொர்ணம். "அம்மா..." மாதவன் குரல்கொடுத்துக் கொண்டே இறங்கி வர, அதுவரை காளி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்த மாமியார், பெட்டிப் பாம்பாக அடங்கிப் போனாள். அவசரமாக கதவைத் திறந்தவள் "என்னடா? என்கிறாள். மாமியார் பிள்ளையோடு அவசரம் அவசரமாக சமையல் கட்டுக்கே போக. சொர்ணம் உள்ளேயே அமர்ந்து அழுது கொண்டிருந்தாள். சிறிது நேரம் கழித்து மாமியார் மறுபடியும் வந்து நிற்கிறாள்." "இதபாருடீ இப்படி மசமசன்னு அழுதுகிட்டு நிக்காதே. போய் குளிச்சிட்டு வந்து வேலையைப்பாரு."

குளித்து விட்டு வருவதற்குள் கணவனைக் காணவில்லை வழக்கம் போல் பரபரத்து விட்டு, அடுக்களைக்குள் நுழைகிறாள். கண்ணீரை அழுந்த துடைத்துக் கொண்டு, நெஞ்சை திடமாக்கிக் கொள்கிறாள். நொண்டிச் சீனுவிற்கு அடுக்களையில் வேலை. இன்னொருமகன் வாசுவுக்கு வீட்டை சுத்தம் செய்து. தேங்காய் உரித்து, மாட்டுக்கு தீனி போட்டு, பால் கறந்து ஆகிய வேலைகள். வந்த நாளிலிருந்து சீனு, வாசு இருவருக்குமே எடுத்து, கொடுத்து, கரைத்து என்று எல்லா வேலைகளையும் செய்வாள் சொர்ணம். சீனுக்கு உதவியாக காய்கறி நறுக்கி, புளி கரைத்து, அரைத்துக் கொடுப்பாள். பாத்திரம் தேய்த்து, வாசுவுக்கு உதவியாக ஒட்டடை அடித்து, வீட்டைப் பெருக்கி, சுத்தம் செய்து என்று வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள் சொர்ணம். காலை சாணி தெளித்து, கோலம் போடுவது கூட சொர்ணம் தான். இன்று

MITHRAVINDA 007

ஒரேடியாக மனம் விழுந்து விட்ட நிலையில், வாசலுக்கு போகக்கூட பிடிக்கவில்லை. அவள் சமையலறையில் நுழையும் போதே மாமியார் சீனுவிடம் பேசுவது காதில் விழுந்தது.

"டேய் நொண்டி காபியை கொழ, கொழன்னு தராதே. இதெல்லாம்தரித்திரத்துவேந்து வந்ததுகள். அதற்கு இந்த மாதிரி காபி முதல்லே செரிக்கவே செரிக்காது." காபியில் நன்றாக ஜலம் விட்டு கலந்து காபியைத் தந்தாள் மாமியார்.

"இத பாருடீ முதல்லே மாட்டுக் கொட்டடையிலே சாணியை எடுத்து சுத்தம் பண்ணிட்டு கொட்டாயை கழுவி விட்டு வா." மாமியார் தனக்கு தரும் தண்டனை, தன் புருஷனோடு இருந்து விட்டு வந்ததற்கு தான் அனுபவிக்கும் தண்டனை. சொர்ணத்திற்கு தண்ணீர் காபியை கொடுக்க, குடித்து விட்டு கொட்டகைக்கு போனது வாந்தியை உண்டு பண்ணியது. சற்று தயங்கியவாறே கொட்டகையில் நிற்க, வாசு தான் ஓடி வருகிறான்.

"நீங்க எங்கே வந்தேள் மன்னி? தளிகை வேலை முடிஞ்சிடுத்தா அதுக்குள்ளவா?" இந்த பத்து நாட்களில் ஒருவரோடு, ஒருவர் ஏற்பட்ட இந்த பரிச்சயத்தில், ஒரு அன்னியோன்யம் தெரிந்தது. கணவனிடம் கூட இந்த அன்னியோன்யம் இன்னும் வரவில்லை.

"நீங்க அந்தண்டை தள்ளுங்க மன்னி. நான் சாணி எடுத்து போடறேன். இதெல்லாம் நான் வழக்கமா செய்யற வேலை."

அவன் பேசுவதற்குள் மளமளவென்று சாணியை எடுத்து சுத்தம் செய்த போது, சொர்ணம் பக்கெட்டில் தண்ணீரை எடுத்து வந்து கழுவித் தள்ள ஆரம்பித்தாள்.

"மன்னி நீங்க ஏன் இந்த வேலை எல்லாம் செய்யறேள்." கலவரப்பட்டவனாய் கேட்க, "இருக்கட்டும்" புன்னகை புரிகிறாள்.

"ஏண்டி இன்னுமா வேலை ஆகலை." மாமியார் குரல் கேட்க.

MITHRAVINDA 007



"இதோ வந்துட்டேம்மா." கையை கழுவிக் கொண்டு உள்ளே போக யத்தனித்தவள், சட்டென்று ஏதோ ஞாபகம் வந்தவளாய் நின்றாள். 'இந்த பத்து நாட்களாக கேட்க வேண்டும்' என்று நினைத்து நெஞ்சில் நின்று விட்ட கேள்வி. காலையிலிருந்து வெறும் வயிற்றோடு பதினோரு மணி வரை வேலை செய்கிறான் எல்லோருக்கும் இளையவனான வாசு. பதினோரு மணி வரை உள்ளே கூட வருவதில்லை. மாடு மாதிரி வேலை செய்கிறவனுக்கு, வயிற்றுக்கு ஒன்றும் தரப்படுவதில்லை.

"நீங்க காபி சாப்பிட்டேளா?" அவள் ஆச்சரியப்பட்டது அவன் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது. இத்தனை நாட்கள் யாருமே கேட்காத கேள்வி. சீனு தான் யாருக்கும் தெரியாமல் காபியைக் கொண்டு வந்து தருவான். அதுவும் அம்மா சமையற்கட்டை விட்டு போனபின் தான் வருவான். 'தன்னை சாப்பிட்டாயா என்று விசாரிக்கக் கூட ஆள் இருக்கா?' "கேட்டதுக்கு பதில் இல்லையா?"

"இல்லை மன்னி வேலை எல்லாம் முடிச்சிட்டு வந்து தான் சாப்பிடுவேன். இல்லேன்னா அம்மா கோச்சிப்பா" என்கிறான்.

மணி எட்டரையைத் தாண்டிக் கொண்டு இருந்தது. காபி சாப்பிட்டால் கூட கோபித்துக் கொள்வாளாமே. அதிசயமான தாயாக இருக்கிறாளே. தாய் என்ற சிம்மாசனத்திலிருந்து ஒரு வழியாக மாமியார் வழுக்கிக் கொண்டு கீழே விழுந்தது நன்றாகத் தெரிந்தது. லேசான பொருமுச்சோடும், ஒருவித ஏமாற்றத்தோடும் உள்ளே நுழைய,

"என்னடி ஒவ்வொரு வேலையையும் இப்படித்தான் செய்வியா? சுருக்கச் செய்யவே தெரியாதா? இத்தனை மசமசப்பா?" சொர்ணம் பதில் பேசவில்லை.

"இத பாரு நாளைக்கு தோசைக்கு போட்டிருக்கு. நன்னா வெழுமுணா அரைக்கணும். இது மத்தியானம் டிபனுக்கு அடைக்கு போட்டிருக்கு. அப்புறம் ராத்திரி தொகையலுக்கும் இதுலேயே அரைச்சிட்டு எழுந்திரு." மாமியார் ஹிட்லர்

கணக்காக உத்தரவுகளை போட்டுவிட்டுச் சென்ற போது. "தன் மேல் இத்தனை வன்மமா இவளுக்கு? 'தப்பு செய்த ரெண்டு பேரில் ஒருவர் மட்டும் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பது என்ன நியாயம்?' தன் கணவன் என்ற பிரகுரிதியை வழக்கம் போல் காலையிலிருந்தே காணவில்லை... எங்கே போனார்? காலையிலிருந்து கண்ணிலே படவே இல்லையே எங்கே? போனார்?"

முதலில் தோசைக்கு அரைக்க ஆரம்பித்தாள். பாதி அரைக்கும் போதே முதுகு விட்டுப் போனது. அவர்கள் வீட்டில் அரைக்கும் போதே முதுகு விட்டுப் போனது அவர்கள் வீட்டில் கல்லேரல் எல்லாம் கிடையாது மிக்ஸி தான். இப்படி கல்லைக் கட்டிக் கொண்டு அழுததே இல்லை. தன் வீட்டில் இரண்டு ஆழாக்கு. மூன்றாழுக்கு மேல் அரைத்ததே இல்லை. அதுவும் மிக்ஸி. கிரைண்டர் வந்ததிலிருந்து கையால் அரைக்கும் பழக்கமே விட்டுப் போனது. இன்று மாமியார் அரைப் படிக்கு மேல் நனைத்திருக்கிறாள். அரைத்து முடிக்குமுன் முதுகு தண்டு விட்டுப் போனது. இதை அரைப்பதற்குள் வேர்த்து விறுத்து முதுகெல்லாம் நனைந்து. சீனு சமைத்துக் கொண்டே இந்த வேடிக்கையை பார்த்திருக்க வேண்டும். சொர்ணம் தவிப்பதை கவனித்திருக்க வேண்டும். பரிதாபத்தோடு அருகில் வந்தான்.

"மன்னி சித்த தள்ளுங்க."

"ஏன்?"

"கொஞ்சம் நகருங்கோ. அம்மா இனிமே சாப்பிடறச்சே தான் தலையைக் காட்டுவா. நீங்க நகருங்கோ. நான் அரைக்கறேன்."

"வேண்டாம்" அவள் மறுத்ததை லட்சியம் செய்யாது விந்தி. விந்தி நடந்து வந்து அமர்ந்து அரைக்கத் தொடங்குகிறான். அடைக்கு அரைத்து முடிக்கிறான். பிறகு துவையலுக்கு அரைக்க ஆரம்பிக்கும் போது, "வேண்டாம் நீங்க நகருங்கோ. நான் அரைக்கிறேன்." அவன் கையிலிருந்து குழவியைப் பிடுங்கியவாறே, "தம்பி பாவம், அவருக்கு



காபியைக் கொண்டு தந்துடுங்களேன்." இன்னும் மாட்டிறகு நீவி காட்டி வைக்கோல் போட்டுக் கொண்டிருந்த வாசுவைக் காண்பிக்க. சீனு நெகிழ்ந்து போகிறான், அவசரம் அவசரமாக காபியைக் கலந்து வந்து அவள் கையில் தருகிறான்.

"நீங்களே தந்திடுங்கோ. அம்மா பாக்கப் போறா. பத்திரம்." என்று கிசுகிசுக்கிறாள். சொர்ணாவும் ஓசைப் படாமல் காபியை எடுத்துப் போய் பின்னால் இருக்கும் வாசுவிற்குத் தருகிறாள்.

"ஐயையோ வேண்டாம் மன்னி. நான் பத்து மணிக்கு மேல தான் காபி சாப்பிட்டே வழக்கம்." அவன் புன்னகையாக மறுக்க.

"இல்லை எடுத்துக்கோங்க. எத்தனை நேரம் வெறும் வயத்தோட வேலை செய்யறது?" சொன்னவளை ஆச்சரியத்துடன் பார்த்து விட்டு காபியை விழுங்குகிறான் வாசு. அவளும் சீனுவுமாக ஒரு வழியாக அரைத்து முடித்ததில் பாதி உயிரே போன மாதிரி இருந்தது. பசி வேறு பிடுங்கி எடுத்தது. மாமியார் அப்போது தான் ஆடி அசைந்து வந்தாள்.

"ஏய் எல்லாத்தையும் டேபிள்ளே கொண்டு வந்து வையடீ" சீனுவும் அவளும் சேர்ந்து செய்த சாப்பாட்டை டேபிளில் கொண்டு வந்து வைக்க. அலுத்து சலித்து வந்து அமர்ந்தான் அவள் கணவன். மாமியாரே பார்த்து, பார்த்து பரிமாறுகிறாள். ஒரு நிமிடம் தெரிந்த மாதிரி இவள் புன்னகைக்க. பதில் புன்னகை இவள் கணவனிடமிருந்து எழும்பவே இல்லை.

"ஏண்டா வாத்தியார் வந்துட்டு போனார். வெள்ளிக் கிழமை நாள் நன்னா இருக்கு. அன்னிக்கு வச்சுக்கலாம்னார். நீ என்ன சொல்றே?"

"உங்க இஷ்டம்." பட்டும் படாமல் பேசினான்.

"அப்ப சரி. உன் பெண்டாட்டி கிட்டே சொல்லிடறேன். நீ போய் கட்டில், பீரோ, சோபா, மெத்தை எல்லாத்துக்கும் இங்கயே ஆர்டர் பண்ணிடு. பில்லை உன் மாமனாருக்கு அனுப்பிச்சிடு. அங்க வாங்கி போட்டு மறுபடியும் அங்க இருந்து தூக்கிண்டு வந்தா சார்ஜ் தானே அதிகமாகும். வேஸ்ட் தானே என்ன?"

MITHRAVINDA 007

சொர்ணத்திற்கு சரீல் என்றது. இதெல்லாம் கல்யாணத்துக்கு முன்னால் மாமியார் சொல்லவே இல்லியே. ஆனால் பாவம் அப்பா கஷ்டப்படுகிறாரோ. அப்பா புரோகிதம் செய்பவர்தான். இருந்தாலும் இந்த காலத்து வைதீகர்கள் போல் சாமர்த்தியமும் கிடையாது. சம்பாதிக்கவும் தெரியவில்லை. புரோகிதத்தில் அப்பா பெரிதாக ஒன்றும் சம்பாதித்து விடவில்லை. மற்றவர்க்கு எடுபிடியாகவே வாழ்க்கையைக் கழித்து விட்டார். அதனால் பெரியதாக ஒன்றும் தேறவில்லை. ரொம்ப நாணயமான வைதீகர். பேரில் நாணயம் இருந்தால் கையில் நாணயம் இருக்காது போல் இருக்கிறது. பாவம் அப்பா! அந்த நாலாயிரம் டெளரிக்கும். 15 பவுன் நகைக்கும் லோல் பட்டு கலங்கித் தவித்தவர். இப்போது இன்னும் பதினைந்தாயிரம் ரூபாய் செலவு வைப்பார்கள் போலிருக்கே.

ஒரு வேளை தன் கணவனிடம் பேசிப் பார்க்கலாமா? தனியாக அவனிடம் பேசி அப்பா நிலைமையைப் பற்றிச் சொன்னால் ஏற்றுக் கொள்வானா?

காலையில் மாமியார் திட்டினாலும் அவன் பதில் புன்னகை புரியாமல் இருந்ததற்கும் அவனைப் போய் பார்க்கவே கூடாது என்று நினைத்து கொண்டாள். அப்பாவிற்குத்தொல்லை தரக்கூடாது என்று கேட்பதற்காவாவது போக வேண்டும் நினைத்துக் கொண்டாள். தவிப்பாக இருந்தது.

அன்று முழுவதும் மாமியார் சொன்ன வேலைகளை எல்லாம் செய்துவிட்டு தன் அறைக்கு வந்து படுத்தவள், பாதி ராத்திரியில் 'போகலாமா' என்று யோசிக்கும் போது மாதவன் வந்து அழைத்தான்.

"ஏய் வா" என்று அழைத்தவனிடம், அக்கம் பக்கம் பார்த்து, மாமியார் கவனிக்கிறாளா, என்று கவனித்துவிட்டு மெல்ல படியேறினாள்.

"என்னங்க அம்மா பார்க்கப் போறாங்க."

"இல்லை நீ வா."

MITHRAVINDA 007



அங்கே போனதும் மெதுவாக ஆரம்பித்தாள்.

"அப்பா ரொம்ப பாவம். இதெல்லாம் வேண்டாம்."

"எது சோபா படுக்கை இதெல்லாமா? நீ மொதல்ல மேல வா அப்பறம் பேசலாம்."

சொர்ணம் பயந்தவாறே கீழே திரும்பி திரும்பி பார்த்தவாறே மாடிக்கு போனாள்.

"இத பாரு அம்மா பிடிவாதம் உனக்குத் தெரியாது. அம்மா சொன்ன ஐடம் எதுவும் வரலைன்னா நமக்குள்ளே எந்த உறவும் இருக்காது. இப்படியே பார்த்து, பார்த்து பெருமூச்சு விட்டுக்க வேண்டியது தான்."

இன்னும் அவளை உட்கார வைத்து வேதனையோடு அவன் பேசப்பேச மனதில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. வேதனையோடு லேசான அழுகையும் வந்தது. காலையில் எழுந்து வரும் போதே உடலில் அடித்துப் போட்டது போன்ற அசதி. மனது தடக், தடக் என்று அடித்துக் கொண்டது. மாமியார் கண்டுபிடித்து விடுவாளோ. அவ்வளவு தான் எல்லாமே முடிந்து விடும். 'நேற்றே அத்தனை தூரம் சொன்னேன் இன்றுமா' என்று எதையாவது ஆரம்பித்தால் தாங்காது... அன்று மாமியாரின் முகத்தைப் பார்ப்பதையே தவிர்த்தாள். காரணம் இல்லாமல் ஒரு பயம் வந்து மனதை கப், கப் என்று அடைத்தது. தன் கணவன் தன்னை பயன்படுத்திக் கொள்கிறான் என்று மட்டும் புரிந்தது. அப்படி, இப்படி என்று ஒரு மாதம் ஓடியே போய்விட்டது.

"முதல்லே உங்கப்பனுக்கு ஒரு கடுதாசி போடு." மாமியார் கடிதத்தையும் பேனாவையும் தர, சொர்ணா அதிர்ச்சி அடைந்தாள். இதற்குள் மாதவனும் வந்துவிட அம்மா சொல்வதையே அவனும் சொல்கிறான்.

"எழுது, எழுது" என்கிறான்.

"இதபாரு ஆர்டர் கொடுத்த லிஸ்ட்" அவனிடம் லிஸ்ட் எடுத்துக் கொடுக்க.

"என்னங்க இது?"

"முதல்லே எழுது." என்றவாறே நகர்ந்தான்.

அன்றிரவு அவனை தனியே சந்தித்தபோது புலம்பித் தீர்த்து விட்டாள் சொர்ணா.

"என்னங்க நீங்களே எழுதச் சொல்லிட்டீங்க. பாவங்க எங்க அப்பா, அம்மா."

"அதை விட நான் ரொம்ப பாவம் தெரியுமா? எங்கம்மா சொன்னதைக் கேட்கலைன்னா உன்னையும், என்னையும் பிரிச்சிடுவாங்க. நான் தொலைஞ்சேன்." கணவன் சொல்ல, சொல்ல கணவரின் சுயநலம் புரிந்தது. 'இவன் எனக்கு துணை' என்றல்லவா நினைத்தேன். தன் நலத்தை தவிர எதையுமே சிந்திக்காதவன் என்று புரிந்தது. கடிதம் கிடைத்த சில நாட்களிலேயே அம்மாவும், அப்பாவும் ஓடி வந்து விட்டார்கள்.

"சம்பந்தியம்மா ஒரு லெட்டர் போட்டிருக்கக் கூடாதா?" அம்மா தான் பாவமாகக் கேட்கிறாள். "லெட்டர் போடும் படியாகவா நடந்துகிட்டு இருக்கா உங்க பொண்ணு. ஒரே அவசரம். இதுக்காக காத்துண்டு இருக்கற மாதிரி." வாய் கூசாமல் பேச அம்மாவே அதிர்கிறாள். இன்னும் கொஞ்ச நாட்களில் பணத்தோடு வருகிற மாதிரி அப்பா சொல்லி விட்டு நகர, சொர்ணம் மனதிற்குள் அழுதாள். வருத்தப் பட்டாள். அப்பாவும், அம்மாவும் ஊருக்குப் போய் ஒருமாத காலம் ஆனது. இன்னும் அவர்களிடமிருந்து பதில் இல்லை. பணத்திற்காக என்ன கஷ்டப் படுகிறாரோ நினைந்து, நினைந்து ஏங்கினாள். 'பாவம் அப்பா மனது கஷ்டப் பட்டது அழுகை வந்தது இந்த வீட்டிற்கு வந்து மேலும் ஒரு மாதம் ஓடி விட்டது. சோபா, கட்டில், பெட் என்று அமர்க்களமாய்த்தான் வாங்கி இருந்தான் கணவன். பில்மட்டும் அப்பாவிற்கு பறந்தது அப்பா,' அம்மா வரும் வழியாகத் தெரியவே இல்லை 'ஓயாவேலை' மாமியாரின் எரிச்சல் நிறைந்த பேச்சுக்கள், வசவுகள், கணவனின் அலட்சியம் எல்லாம் சேர்ந்து அவளை கலவரப் படுத்த ஆரம்பித்தது. மாதவன் இப்போ

MITHRAVINDA 007



தெல்லாம் முன்போல் இல்லை. எதற்கெடுத்தாலும் சள்ளென்று விழுகிறான். இரண்டு மாதத்திற்குள் சொர்ணம் அவனுக்கு அலுத்து தான் போனாள்.



4

பிள்ளை மனைவியை அலட்சியம் செய்கிறான் என்று தெரிந்ததுமே கனகுஷியாக மருமகளை உண்டு இல்லை என்று ஆக்க ஆரம்பித்தாள் மாமியார். வாசுவும் சீனுவும் இல்லையென்றால் சொர்ணம் என்ன கதியாகி இருப்பாளோ. தெரியாது. மாமியார் மூச்சு முட்ட, முட்ட வேலை கொடுத்தாலும் சீனு ஓடி வந்து பிடுங்கிக் கொள்வான். பின் பக்கம் வேலைக்குப் போனால் "நீங்க போங்க மன்னி." வாக அவளை தள்ளி விட்டு அம்மாவுக்குத் தெரியாமல் மொத்த வேலையையும் செய்வதிலேயே கண்ணாக இருப்பான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. மாதவன் அபூர்வமாக வீட்டிலிருந்தான். இப்போதெல்லாம் அப்படித்தான் ஆகிப் போனது. மாதவன் எப்போதாவது தான் வீட்டில் இருக்கிறான். முன்பாவது இரவில் அவனைப் பார்க்கலாம். பகலில் வேலைக்குப் போய்விட்டு எங்கெங்கோ சுற்றி விட்டு, இரவாவது வந்து விடுவான். இப்போதெல்லாம் இரண்டு நாளைக்கு ஒரு முறை தான் வீட்டிற்கே வருகிறான். 'வேலை ஒழியவில்லை' என்பான். இரண்டு மாதத்திற்கு முன்பு "சொர்ணா, சொர்ணா" என்று உயிரை விட்டது போல் இப்போது இல்லை. 'என்ன என்றால் என்னதான்.' என்றாவது அபூர்வமாக வீட்டில் இருந்தாலும் அவன் அம்மா அவனை பிடித்துக் கொள்வாள். அவனுக்கு 'அவள் தேவை' என்று வரும் போது யாரையுமே லட்சியம் செய்ததில்லை. சொர்ணம் இந்த பதினெட்டு வயதில்

அறுபது வயது உணர்வைப் பெற்றாள். மனதில் கல்யாணம் என்ற போது அவனோடு துணையாக, அவன் ஒவ்வொரு விஷயத்திலும் உதவியாக, இருக்க வேண்டும் என்று எப்படி எல்லாம் மனக் கோட்டை கட்டினாள். எல்லாமே பொய்த்துப் போய் விட்டது. அவன் சாதாரணமாக மனைவியை எப்படி நடத்துவது என்பதைக் கூட தெரியாதவனாய்த் தான் இருந்தான். அவனைப் பொருத்த வரையில் படுக்கை அறைக்கு மட்டும் தான் மனைவி தேவை. மீதி எந்த விஷயத்திற்கும் மனைவியைக் கூட சேர்க்க விருப்பமில்லாதவனாக இருந்தான். எப்போது போகிறான். எப்போது வருவான். எல்லாமே கேள்விக் குறிதான். 'மாப்பிள்ளை பெரிய வேலையில் இருக்கிறானா' இதை மட்டும் தானே பெற்றோர் பார்த்தனர். கூலி வேலை செய்தாலும் பெண்டாட்டியை பூவைப் போல் வைத்திருப்பவனை தேர்ந்தெடுத்திருக்கக் கூடாது? இது என்ன தாம்பத்தியம்? இந்த குடும்பச் சூழலில் தான் ஏன் இப்படி மாட்டிக் கொண்டு இருக்கிறோம் முன்பெல்லாம் இவன் ஏதாவது பேசினால் பொறுமையாக, பதிவிசாக பேசுவான். இப்போதெல்லாம் அவளைப் பேசவே விடுவதில்லை. ஏதாவது மீறிக் கொண்டு பேசினாலும்.

"சனியனே எப்பவும் பிலாக்கணம் தான்." என்று எரிந்து விழுகிறான். மனது மட்டும் நிம்மதியை இழக்கவில்லை. இப்போதெல்லாம் உடம்பும் பாடாய்ப் படுத்துகிறது. சாப்பாடே பிடிக்காமல் போய்விட்டது. எப்போது பார்த்தாலும் குமட்டல் தான். கண்களில் கருவளையம் கட்டி, முகம் பழைய தேஜஸை இழந்துதான் போயிற்று. போதாத குறைக்கு சரியான சாப்பாடு இன்மை, வேலைப் பளு. முகத்தில் ஒருவித அயர்ச்சியும் தந்து முகமே களை இழந்தது. துக்கமும் சேர்ந்து கொள்ள முகம் கூம்பிப் போய் சோபை இழந்து இருந்தாள் சொர்ணா. முதல் இரவு என்ற சடங்கு இல்லாமலேயே முதல் இரவும் ஆகி, அதற்கு வேண்டிய சாமான்களும் வந்து விட்டன. அவ்வப் போது பணத்திற்கு மாமியார் சொர்ணத்தை இடித்துக் கொண்டிருந்தாள்.

MITHRAVINDA 007



அன்று கணவன் வீட்டிலிருக்கும் போதே மாமியார் ஆரம்பித்தாள். "நீ குளிச்சு ரெண்டு மாசம் ஆயிட்டது போலருக்கே." சொர்ணத்திற்கும் இப்போது தான் ஞாபகத்திற்கு வந்தது. அவள் மௌனமாக தலை அசைக்க.

"நான் நெனச்சேன். இன்னும் சாமானுக்கு ரூபாயே வரலை. அதுக்குள்ளே வயித்தை சாய்ச்சிக்கிட்டாச்சா? ஏண்டாப்பா இவளே இன்னும் செட்டில் ஆகலை. அதற்குள் குழந்தைக்கு என்ன அவசரம்?" அவள் கணவன் முதலில் ஆச்சரியப் பட்டான். பிறகு கோபப்பட்டு கத்த ஆரம்பித்தான்.

"அந்த பிள்ளையும் ஒரு வழியாக அவுங்கப்பனுக்கு அனுப்புடா."

"கண்டிப்பா. இந்த தடவை பணம் வராம இருக்கட்டும் இவளை இவள் அப்பன் வீட்டிற்கே அனுப்பிச்சிடறேன்."

மாதவன் சொல்லி விட்டு போனது மனதே ஆறவில்லை. 'இதென்ன தனக்கு முறையாக பிறக்கப் போகும்' குழந்தையைக் கூட யாராவது அழிக்க நினைப்பார்களா? இந்த மீசையும், முகத்தையும் பார்த்து எத்தனை நல்லவன், கம்பீரமானவன்னு நினைத்தேன். சே, எத்தனை மட்டமானவன். என்ன ஆனாலும் ஆகட்டும். ஆணோ, பெண்ணோ இது என் குழந்தை. இதை அழிக்க யாருக்கும் உரிமை இல்லை. விருப்பமில்லை என்றால் அனுப்பி விடட்டும் என் அப்பா வீட்டில் நிம்மதியாக இருந்து விட்டு போகிறேன்.

இந்தக் குழந்தையை ஒரு நல்ல மனிதனாக வளர்க்கப் போகிறேன். போதும்பா, இனிமே இங்கே ஒரு நிமிடம் இருக்க முடியாது. மனதில் உறுதி கொண்டாள். கணவன் வந்தவுடன் பேச ஆரம்பித்தாள். தான் பணம் வாங்கி வந்தவுடன் கருக் கலைப்பு பற்றி பேசிக் கொள்ளலாம் என்று அவள் சொன்னதை மாதவனும் ஆமோதித்தான்.

"இத பாருடீ ஒரு வழியா பணத்தோட வரதுன்னா வா இல்லேன்னா அங்கயே இருந்துடு." பையன் விட்ட கயிறை

பிடித்துக் கொண்டாள் மாமியார். சொர்ணம் ஊருக்கு செல்ல டிக்கெட் கூட வாங்கி வந்து விட்டான் கணவன். அன்று கிளம்பிய போது 'சே இந்த வீட்டிற்கு இனிமே வரவே கூடாது' மனது சபித்தது. மகள் வந்ததைப் பார்த்து ஒரு பக்கம் சந்தோஷப் பட்டாலும், இன்னொரு பக்கம் அதிர்ந்து தான் போனார்கள் அவளின் பெற்றோர்.

"ஏம்மா கல்யாணக் கடனையே அடைக்க முடியாம அப்பா திண்டாடிகிட்டு இருக்கார். இப்ப வந்து இதையும் செய்யுங்கன்னா என்ன பண்றது? கைல வச்சுகிட்டா செய்ய மாட்டேங்கறோம்." அம்மா புலம்பினாள். அம்மா ஆதங்கப் பட்டு போனாள். அப்பா வருத்தப்பட்டு பேசினார். வருத்தத்தில் கோபமும் வந்திருந்தது. "இத பாரு சொர்ணா நீ ஒரே பெண்ணு தான் இல்லேங்கலே. இதுக்காக எத்தனை செய்ய முடியும்? சம்பாத்தியம் மொத்தமும் உன் கல்யாணத்தில் போட்டுட்டோம். சக்திக்கு மீறின இடம் பார்த்துதான் கல்யாணத்தைப் பண்ணி வச்சோம். அப்பவே உன் மாமியார் கிட்டே உண்மையைச் சொல்லி இருக்கலாம். ஆனா உன் நிலமையை நினைச்சு தான் வேற வழியில்லாம பொய் சொல்ல நேர்ந்தது. உண்மையைச் சொன்னா உன்னை வறுத்து எடுப்பாங்களோங்கற பயம். ஆனது ஆய்ப் போச்சு. உன் புருஷன் உன்னை திட்டினாலும் யாரும் உன்னை கைவிடமாட்டா. கவலையே படாதே. கொஞ்சம் கெடுபிடியே தவிர நல்லவா மாதிரி தான் தோணறது. போன்னா ஆத்துக்கு உடனே புறப்பட்டு வந்துடறதா? நான் ஏன் போகணும்னு கேக்கமாட்டே? இப்படியா இருப்பே. அப்பாவை இப்படியா கஷ்டப்படுத்தறது? உனக்கு கல்யாணத்தை பண்ணியாச்சு. இனிமே உன் சுகம், துக்கம், உன் புருஷன் கூடத்தான் புரிஞ்சுதா? எங்களை எதிலும் கலக்கக் கூடாது."

ஒரு நிமிடம் அதிர்ந்து போனாள். தன் அப்பாவா இப்படி? அம்மாவும் அலுத்த மாதிரி அல்லவா பேசுகிறாள்? இந்த மாதிரியான வரவேற்பை தான் எதிர்பார்க்கவேயில்லையே பணமின்மை, பணத்தேவை அவர்களை இப்படி ஆக்கி விட்டதா? பெண் கஷ்டப்படுகிறாள் என்று தவிப்பார்கள். தன் துக்கத்தில் பங்கு கொள்வார்கள் என்று எதிர்பார்த்த எனக்கு எத்தனை பெரிய ஏமாற்றம். அழுகையாக வந்தது. அடுத்த நாளே அப்பா ஊருக்கு டிக்கட்டுடன் வந்தார் "புருஷனோடு சமரசமா இருந்தா எத்தனை நாட்கள் வேணா வரலாம். ஆனா சண்டை போட்டுக் கொண்டு ஒரு நாள் வந்து நீ தங்கினாக் கூட அது அவமானம்." நானாகவா கோபித்துக் கொண்டு வந்து விட்டேன். விரட்டி அடித்து அல்லவா அனுப்பப்பட்டேன். கண்களில் கண்ணீர் வழிய, புறப்பட்டு போனாள் சொர்ணா. 'தானா சண்டை போட்டுக் கொண்டு வந்தோம் இது என்ன சப்பைக்கட்டு? இவர்கள் செய்ய வேண்டிய சீர் வரிசைகளை சரியாக செய்யவில்லை என்று தானே இந்த பாடுபடுத்து கிறார்கள். 'பாவம் அப்பா' என்று தான் பதறினோமே. அந்த உணர்வு, அவர்களுக்கு இல்லையா? அங்கே திரும்பிப் போனால் வரவேற்பு எப்படி இருக்கும் என்று தெரியும். ஏற்கனவே மாமியார் ஒரு மாதிரி. இதில் சொன்னதைச் செய்யவில்லை என்றால் என்ன ஆகும்? பார்ப்போம். போராடித்தான் பார்க்கணும். இந்த சின்ன வயதில் வாழ்க்கையே வெறுத்தது சொர்ணாவிற்கு. வீட்டில் காலடி வைத்ததுமே, "என்னடி கொடுத்து அனுப்பினாங்களா? செக்கா, கேஷா செக்கா இருந்தா வாங்கிக்க மாட்டோம்" என்றாள் மாமியார். மாதவன் இருக்கும் சுவடே தெரியவில்லை.

"வாங்க மன்னி" அம்மாவைக் கூட பொருட்படுத்தாமல், காபியை கலந்து தந்தான் சீனு.

"மன்னி எப்படி இருக்கேள்?" ஏதோ பார்த்து ரொம்ப நாள் ஆனது போல் ஒடி வந்து விசாரித்தான் இரண்டாவது மச்சினன் வாசு. இந்த வாஞ்சை, ஆசை தன்புருஷனுக்கு இருக்கக் கூடாதா? இருந்தா எத்தனை நன்னா இருக்கும்? மனது ஏங்கியது.

"ஏய் அங்கே என்ன குலாவல்?" மாமியார் எகிறினாள்.

"இங்கே வந்து பேசுடீ"

"இல்லே உங்க பிள்ளை கிட்டே தான் பேசணும்." மாமியார் முறைத்துப் பார்த்தாள்.



MITHRAVINDA 007

"என்னடி அதிகப் பிரசங்கித்தனம். நீ பெரிய இவளா?" ஏதோ ஆரம்பிக்க வெகுண்டாள் சொர்ணா. தலைக்கு மேலே போயாகி விட்டது. இனிமே சாணுக்கு யாராவது பயப்படுவார்களா?

"ஷ். அத்தோடு நிறுத்திக்கோங்க. வரட்டும் பேசிக்கிறேன்." இவள் தொனியில் ஆச்சரியப்பட்டவளாய் மௌனமானாள் மாமியார்.

"வரட்டும் அவன்" மாமியாரின் வாய் முணுமுணுத்தது.

அன்று அதிசயமாக மாதவன் மதியம் வந்த போது கூடவே இன்னொரு பெண்ணும் அவனோடு வந்தது. அழுத்தமான ரோஸ் கவரில் சுடிதார், ஸ்டிக்கர் பொட்டு, குட்டைத் தலைமயிரை கிளிப் போட்டு கட்டி முன் பக்கம் ஹெட் பேண்டு போட்டு, கையில் கிழங்காக இரு வளையல்களும், அழுத்தமான செயினும் காதுகளில் தொங்கட்டானோடு, புதிய மாடல் தோடும், தன் வயது இருக்கலாம். பூரிக்கும் இளமையோடு, மலராமல் நின்றது. பண்ணிக்கொள்ளும் அலங்காரத்தில் வயது பதினைந்தாகக் காட்டியது.

"ஹாய் சீமா வாண்ட் காபி" என்றான். இவள் இருப்பதைப் பார்த்தவன், ஒரு நிமிடம் அதிர்ந்தான். பிறகு சுதாரித்து.

"என்ன உங்கப்பன் பணம் கொடுத்து அனுப்பிச்சானா?" என்றான். சொர்ணம் பதில் பேசாமல் கணவனோடு வந்தவர்களையே அளந்து கொண்டிருந்தாள். 'யார் இவள்? என்ன வேண்டும்? வெறும் பிரண்டா? இல்லை வேற மாதிரி உறவா?'

"திஸ் ஈஸ் சொர்ணா." அவன் சொர்ணாவை அறிமுகப் படுத்த.

"ஓ எனக்கு அப்புறம் வந்தவளா?" என்றாள் அலட்சியமாக. சொர்ணம் அதிர்ந்து போய் நின்றாள்.

'என்னது இவளுக்கு அப்புறமாவா? அப்படீன்னா ஏற்கனவே கல்யாணம் ஆயிடுத்தா என்ன?'

MITHRAVINDA 007



"என்னடி முறைக்கிறே?"

"யாரு இவ?"

"ஏன் அவ சொன்னாளே தெரியலே? இவ தான் என் முதல் பெண்டாட்டி என்ன பண்ணுவே?" வில்லன் சிரிப்பு சிரித்தான் கணவன்.

"பணம் எங்கேடி?" என்றான்.

"எதுக்கு?"

"எதுக்கா" முகத்தில் கோபம் படர்ந்தது. "உங்கப்பன் செய்யறதா சொன்ன சீர் வரிசைகள்."

"எங்கப்பா யாருக்கும் பிராமிஸ் பண்ணலே. மேலும் கல்யாணத்தின் போது இதெல்லாம் பேசவே இல்லை."

"பணம் தாமுடியுமா முடியாதா? வாங்கிட்டு வந்தியா இல்லையா" ஆணித்தரமாக அவன் கேட்க, கேட்க,

"எதுக்கு பணம் இவனோடு கூத்தடிக்கத்தானே வேணும்." சட்டென்று வார்த்தைகள் எகிறின.

"என்னடீ ஓவரா பேசறே?"

"யார் பேசறா? நீங்க தெரிஞ்சு பண்றேளா? இல்லை தெரியாம பண்றேளா? ஒருத்தியை கல்யாணம் பண்ணிண்டுருக்கச்சே இன்னொருத்தியை பண்ணிக்கறது குத்தமில்லே. பாவம் இல்லே, சட்டத்துக்கு பயப்படலேன்னாலும் மனசாட்சிக்கு பயப்படவேண்டாம். உங்களுக்கு மனசாட்சி கூட கிடையாதா? மனசாட்சி இருக்கறவங்க கிட்டேதான் மனசாட்சியைப் பத்தி பேசணும். இதபாருங்க நான் கம்ப்ளைண்டு பண்ணா நீங்க கம்பி எண்ண வேண்டி இருக்கும். உங்க வேலையும் போயிடும்."

"என்னடி பேசிகிட்டே போறே?" சட்டென்று அடிக்க கை ஓங்க, அவன் கையை உடும்பு போல பிடித்துக் கொண்டாள்.

"ஒரு அடி மேலே விழுந்தது நான் பொல்லாதவளா ஆயிடுவேன்." அவன் பதில் பேசுமுன் அவனின் கையை

உதறி விட்டு விறுவிறுவென்று நகர்ந்தாள். சூட்கேஸை எடுத்து வந்து தன் சாமான்களை பேக் செய்தாள்.

"என் நகைகளை, வெள்ளி பாத்திரங்களை கொடுங்க."

"எதுடீ?" மாமியார் அதிகாரத் தொனியில் கேட்க,

"ஏய் என்ன மேலே மேலே ஸீன் காமிக்கறே? உன்னை..."

சட்டென்று மாதவன் அவள் கூந்தலைப் பற்றி இழுத்து சுவற்றில் இடித்தபோது

"அண்ணா வேண்டாண்ணா. மன்னியை ஒண்ணும் பண்ணாதீங்கோ." சீனு ஓடி வந்து தடுத்தான்.

"நொண்டிக் கழுதை. இவளுக்கு சப்போர்ட்டா பண்றே?" தம்பியைக் காலால் எக்கித் தள்ளி விட்டு மறுபடியும் அவள் கூந்தலை பிடித்து இழுத்து சுவற்றில் முட்டினான். நெற்றி இடித்து இரத்தம் வந்தது பின் கட்டிலிருந்து வாசு ஓடி வந்தான்.

"நீ என்ன மனுஷனா? மிருகமா? விடுடா அவளை சொந்த பெண்டாட்டி இருக்கும் போது எவளோ ஒருத்தியைக் கூப்பிட்டு வந்து- உனக்கு வெக்கமாயில்லே."

"பேஷ் என் தம்பிகளை எனக்கு எதிராக தூண்டி விட்டாயா? பலே கைகாரி தான் நீ? என் முன்னாலே ரெண்டு வார்த்தை பேசக் கூட பயப்படறவனுங்க. இன்னிக்கு கேள்வி கேக்கற அளவுக்கு கொண்டு வந்துட்டயா? அதென்ன எனக்கு கூட பரியாம உனக்கு பரியறாங்க? என்ன சொக்கு பொடி போட்டே? நான் இன்னொருத்தியைத் தானே வச்சிருக்கேன். ஆனா நீ எத்தனை பேரடீ?"

வாசுவுக்கு சண்டாள கோபம் வந்தது. அண்ணனின் சட்டையைக் கொத்தாக பிடித்துக் கொண்டான்.

"எதையும் தப்பாவே பார்க்கறவன் நீ. உனக்கு நல்லதும் கெட்டதும் என்ன தெரியும்?"

மாதவன் வாசுவை அடிக்க முற்பட, வாசு முஷ்டியை மடக்கி ஓங்கி ஒரு குத்து விட்டான். மாதவன் தலை அருகிலிருந்த சுவற்றில் இடித்து தலை கிறுகிறுக்க, மயங்கிச் சாய்ந்தான்.

MITHRAVINDA 007





5

**வா**சு ரௌத்கார மூர்த்தியாக நின்றான். மாதவன் கீழே மயங்கிச் சாய்ந்ததும் மாமியார் 'குய்யோ, முய்யோ' என்று கத்த ஆரம்பித்தாள். "அடப்பாவி சொந்த அண்ணனையே அடிச்சிப்போட்டியே. சண்டாளா? நீ நன்னா இருப்பியா?"

"ஏண்டி நீ நன்னா இருப்பியா. கட்டின புருஷனுக்கே துரோகம் பண்ணியே. சொந்த புருஷனையே கொலை பண்ணும்படி தூண்டி விட்டிருக்கியே. நீ நாசமாதான் போவே." வெறி பிடித்தவள் போல் கத்துகிறாள். "அம்மா" கர்ஜிக்கிறான் வாசு. "வாயை மூடு சாவியை மன்னிகிட்டே குடு. எப்ப மன்னியை வேண்டாம்னியோ அப்ப அவ எடுத்துண்டு வந்ததையும் கொடுத்து அனுப்பறது தான் நல்லது. ம்... சாவியைக் கொண்டா."

அதட்டி சாவியைப் பிடுங்கி சொர்ணத்திடம் தர, அவள் உள்ளே சென்று மளமளவென்று பீரோவைத் திறந்து தன் நகைகள் 'வெள்ளிப் பாத்திரங்களை, காண்பித்து விட்டு பெட்டியில் வைத்தாள். 'தன் பொருள்களை எல்லாம் சரியாயிருக்கா' என்று எல்லாவற்றையும் சரி பார்த்தாள். பார்த்தவுடன் பித்தளை. எவர்சில்வர் பாத்திரங்களை ஒரு கோணியில் கட்டினாள்.

"இதை நீங்க ரெண்டு பேரும் வச்சுகோங்க. இந்த நகையும், வெள்ளி பாத்திரமும் நான் என் கால்ல நிக்கற வரைக்கும் எனக்குத் தேவை. இல்லேன்னா இதையும் உங்களண்டை தந்துட்டுப் போய் விடுவேன்." சொர்ணம் கண்கள் கசிய சொல்ல. சொல்ல ரெண்டு பேரும் உணர்ச்சி வசப்பட்டு "மன்னி" என்று கலங்க.

"இந்த ஆத்துலே வந்த நாளாய் நான் சொந்தம்னு நினைச்சது உங்க ரெண்டு பேரைத்தான்." சொல்லும் போதே கண்கள் வழிந்தன.

"என் சொந்த தம்பி இருந்தாக் கூட இத்தனை பாசமா இருப்பானாங்கறது சந்தேகம் தான் இங்கிருந்த நாட்கள்ளே எனக்கு சந்தோஷம்கறது ஒன்னு இருந்தா அது உங்க கூட இருந்த நாட்கள் தான்."

"மன்னி அம்மா ஆத்துக்கு தானே போறேள். ஆறு மணிக்கு தானே வண்டி. மணி நாலு தானே ஆறது." வாசு கேட்க.

"இல்லேப்பா இல்லை. அங்கே போகலை."

"ஏம் மன்னி?" சீனுவும் வாசுவும் பயந்த போய் கேட்டனர்.

"கல்யாணம் ஆயிட்டா கழுத்திலே ஒரு மஞ்சள் கயிறு ஏறிட்டா பொறந்தாத்துலே கூட இடம் இல்லேப்பா."

"என்ன சொல்றேள்?" வாசு பயந்தவனாய் கேட்க.

"அப்ப எங்கே போவேள்?" சீனு நடுங்கிப் போய் கேட்கிறான்.

"தெரியலைப்பா கால் போன போக்கில் போக வேண்டியது தான். உலகத்தையே காப்பாத்தற பெருமாளுக்கு. என்னை காப்பாத்த தெரியாதா? பாரத்தை அவன் மேல் போட்டுட்டு போறேன்." அவளின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் நெஞ்சைப் பிசைய கண்கலங்கிப் போகின்றனர்.

"மன்னி எங்களையும் அழைச்சிண்டு போவியா?" வாசுவும், சீனுவும் அருகில் வந்து கெஞ்சுவது போல் கேட்க, ஒரு நிமிடம் அதிர்ச்சி. 'புருஷனே இல்லைன்னு ஆனப்புறம் இது என்ன உறவு?'

"மன்னி மாட்டேன்னு சொல்லிடாதே. உன்னை அம்மாவா நினைச்சுண்டு இருக்கோம் அம்மா போனா குழந்தைகள் என்ன செய்யும்? நீ வந்தப்புறம் தான் எங்களுக்கு பசின்னு ஒன்னு இருக்குன்னு எங்களுக்கே தெரிஞ்சுது. நாங்களும் மனுஷான்னு உங்ககூட பழகினப்புறம் தான் புரிஞ்சுது. இத்தனை நாள் மாடு

MITHRAVINDA 007



மாதிரி இருந்துட்டோம். கொஞ்ச நாளாவது மனுஷங்களா இருக்கணும்னு ஆசையா இருக்கு. மன்னி எங்களை விட்டுடாதே மன்னி." சட்டென்று அவள் காலில் விழ, தன்னை விட வயதில் பெரியவர்களான சீனுவும் வாசுவும் தன் காலில் விழுந்ததைக் கண்டு பதறிப் போகிறாள். "எழுந்திருப்பா இதெல்லாம் என்ன?"

மனுஷத்தன்மைக்கு உறவு தேவையா என்ன? ஒருவிதத்தில் தாய் இருந்தும், இவர்கள் அனாதை தான். இந்த வீட்டில் ஒரு மனுஷனா கூட அவர்களை நடத்தினதில்லை. அதான் மனம் விண்டு போய் 'வருகிறேன் வருகிறேன்' என்று கெஞ்சுகிறார்கள். "வாங்கோ" ரெண்டு பேரையும் அழைத்துக் கொண்டு வெளியேறுகிறாள் சொர்ணம். சொர்ணத்தின் பாத்திர மூட்டை ஒருவன் தூக்கிக் கொள்ள, கட்டின துணியோடு இருவரும் சொர்ணத்தின் பின்னே கிளம்பினர். வீட்டு ஹால் ஹோ என்று இருக்க மாடியில் மாமியாரும் கணவனின் முதல் சம்சாரமும் முதல் பையனின் மயக்கத்தை தீர்க்க சிசுருஷை செய்து கொண்டு இருப்பது ஒரு நிமிடம் திரும்பிப் பார்த்த சொர்ணாவிற்குத் தெரிய பெருமூச்சு விடுகிறாள். வயிற்றில் சுமை, பக்கத்தில் உறவை முறித்துக் கொண்டவனின் உறவுகள். உலகம் இந்த உறவைப் புரிந்து கொள்ளுமா? ஊரார் ஏற்றுக் கொள்வார்களா? விஷயம் வெளியே பரவினால் என்னென்ன பேசுவார்கள்? அப்பா அம்மாவிற்கு தெரிந்தால் என்ன ஆகும்? எத்தனையோ நீண்ட கேள்விகள் மனதில். எதற்கும் விடை தெரியாமல் எங்கே போகிறோம் என்று தெரியாமலேயே ஏதோ ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்தாயிற்று. நல்லவேளை அப்பா கொடுத்த நூறு ரூபாய் கையில் இருக்க. "இந்த பஸ் லாஸ்ட் எங்கே போகும்? அங்க மூணு டிக்கெட் கொடுங்க." வாங்கினாள். எந்த நம்பிக்கையில் இந்த இரு குழந்தைகளும் என்னை நம்பி வருகிறது. நாங்கள் வெற்றி பெறுவோமா? வெற்றி அடையணும் கணவனின் முன்னால் தலை நிமிர்ந்து நிற்கணும் இந்த காலத்தில் பெண்கள் எத்தனையோ சாதிக்கிறார்கள். நான் மட்டும் ஏன் இப்படி குழம்பித் தவிக்கணும்? முயற்சி பண்ணுவேன் கடவுள்

அனுக்கிரகத்தால் நிச்சயம் வெற்றி பெறுவேன். மனதில் இப்படிப்பட்ட எண்ணம் தோன்றியதும் மனது சற்று சாந்தம் அடைந்தது.

ஆயிற்று புது ஊருக்கு வந்து இரண்டு மாதங்களாகி விட்டன. கிராமமும் இல்லாத டௌனும் இல்லாத அந்த இரண்டுகெட்டான் ஊருக்கு வந்தார்கள். நடந்தது நனவா, கனவா, தெரியாத நிலையில் இருந்தாள் சொர்ணம். பொருளாதார பிரச்சனையை பெரியதாக எடுத்துக்கொண்டு 'போ' என்று சொல்லாமல் சொல்லி விட்டனர் பெற்றோர். எங்கிருந்தோ வந்த பர்வதம் மாமிக்கு மட்டும் இத்தனை மனிதாபிமானம் எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? ஒரு கதவு மூடிக் கொண்டால், இன்னொரு கதவு திறக்கும் என்பார்களே அது இது தானோ. கணவனையும் மாமியாரையும் விட்டுவிட்டு, தன் மைத்துனர்களுடன் தான் இந்த ஊருக்கு வந்தாள். சாமர்த்தியமாக தன் நகை, வெள்ளி பாத்திரங்களை எல்லாவற்றையும் கூடவே கொண்டு வந்திருந்ததால் ஒரு மார்வாடிக் கடையில் எல்லாவற்றையும் விற்றாள். கையில் கணிசமான தொகை வந்ததும் அதை வைத்துக் கொண்டு ஒரு வங்கியில் டெபாசிட் செய்தாள். அந்த மாதத்திற்கான பணத்தை மட்டும் கையில் வைத்துக் கொண்டாள். வீடு தேடி அலைந்த போது தான் பர்வதம் மாமி தென்பட்டாள். இவள் கதையை ஆதூரத்துடன் கேட்டாள்.

“நான் இருக்கிறேன் வா.” என்று அபயம் தந்தாள். 'மனிதர்களிடம் மனிதாபிமானம் கூட உண்டு.' என்று பர்வதம் மாமியைச் சந்தித்த பின் தான் அவளுக்கு புரிந்தது. ஒரு சமையல் அறை. ஒரு ஹால். ஒரு பெட்ரூம் என்று இருந்த அந்த வீட்டிற்கு அட்வான்ஸ் கொடுத்து அந்த வீட்டில் இருக்க ஆரம்பித்தார்கள். நல்ல வேளை தான் பாத்திரம் பண்டம் என்று எடுத்து வந்ததால் எதையும் வாங்கும் அவசரம் ஏற்படவில்லை. மாதம் நானூறு ரூபாயில் சமையல் வேலை கிடைத்தது. காலையில் போனால் பத்து மணிக்கு வந்து விடலாம். இது போதாதென்று, பக்கத்து கடையிலிருந்து ஒயர் கொண்டு வந்து

MITHRAVINDA 007



கொடுத்தாள் மாமி. அதில் பை பின்னிக் கொடுத்தாள் சொர்ணம். இப்படி வந்த கொஞ்ச நாட்களிலேயே வேலையும் குதிர்ந்து பணமும் கணிசமான அளவு வரத் தொடங்கியது.

வழக்கப்படி சீனு சமையல் அறையைக் கவனித்துக் கொள்ள, வாசு வீடு பெருக்கி, பாத்திரம் தேய்த்து, தோட்டம் போட்டு இப்படி வேலைகளை பகிர்ந்து கொண்டார்கள். இந்த இரண்டு மாதங்களும் போனதே தெரியவில்லை. இந்த பதினெட்டு வயதில் கணவனை விட்டு பிரிந்திருப்பது கூட பாதிக்கவில்லை. தன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளோடு, நிம்மதியாக குடும்பம் நடத்துவதாகத் தோன்றியது சொர்ணத்திற்கு. வேலை முடிந்து மன்னி வரும் வரை, காத்து நிற்கும் மைத்துனர்கள். காலை ஆறு மணிக்கு காபியை ஒன்றாக எடுத்துக் கொள்வார்கள். பத்து மணிக்கு மன்னி வந்ததும் ஒன்றாக அமர்ந்து சாப்பாடு. தான் வேலை செய்யும் இடம், நடந்த நிகழ்ச்சிகள் என்று ஏதேனும் அவள் சொல்ல, சொல்ல கேட்டுக் கொண்டே சாப்பிடுவார்கள். இருவருக்கும் தன் சொந்த வீட்டை தன் சொந்த தாயை விட்டுவந்து விட்டோமே என்ற உணர்வே இல்லை. தன் சொந்த தாயிடம் பேசுவது போல், சந்தோஷமாக பேசுவார்கள். மறுபடியும் ஒன்றரை மணிக்கு டிபன் காபி சாப்பிட்டு விட்டு போனால் ஐந்து மணிக்கு வந்து விடுவாள். பிறகு பர்வதம் மாமியோடு வேடிக்கைப் பேச்சு. பிறகு மச்சினன்களோடு அளவளாவல். பக்கத்து வீட்டு மாமி தரும் காலை பேப்பர், பழைய புத்தகங்களில் அவள் மூழ்கி விடுவாள். அதில் படித்த ஜோக்குகளை, நல்ல கதைகளை அவள் சொல்ல, சொல்ல சீனுவும், வாசுவும் சிரித்தபடி ஆர்வமாக கேட்டுக் கொண்டிருப்பார்கள். இங்கே யாருமே தலைவன் இல்லை. எல்லாமே ஒன்று தான். யாரும் உசத்தி இல்லை. இந்த ரீதியில் மச்சினர்களை நடத்த, அவர்கள் மதிப்பில் உச்சாணிக் கொம்புக்கே போய் விட்டாள் சொர்ணம் அம்மாவிடம் இல்லாத தாய்மை உணர்வு, புரிந்து கொள்ளுதல், மனிதத் தன்மை இதெல்லாம் மன்னியிடம் அதிகமாக இருக்க, “மன்னி, மன்னி என்று உயிரை விட்டனர். மன்னி, மன்னி என்று உயிரை

விடுபவர்கள் மன்னிக்கு உடம்பு என்றால் துடித்து விட மாட்டார்களா?"

அன்று வழக்கம் போல் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு வந்த போது தலை சுற்றிக் கீழே விழ, பார்வதம் மாமி ஒரு புறம் பிடிக்க, இன்னொரு புறம் சீனுவும் வாசுவும் பதைபதைத்துப் போய் அமர்ந்திருந்தார்கள். சொர்ணம் கண் விழித்துப்பார்க்க சீனுவும் வாசுவும் அழுதே விட்டனர்.

"மன்னி என்னாச்சு மன்னி? எப்படி இருக்கே மன்னி?" டாக்டரிடம் ஓடினார்கள். டாக்டர் கிளம்பும் போது அவருக்கு காபியைக் கொண்டு வந்து கொடுத்து, கால் மாட்டில் உட்கார்ந்தவர்களை பார்வதம் மாமி அப்புறப்படுத்தி விட்டு மெதுவாக விசாரிக்க ஆரம்பித்தார்.

"எத்தனை மாசம் உனக்கு? டாக்டர் நாலு மாசம் இருக்கும் என்கிறாளே, நெஜமாவா?"

"டாக்டரா?"

"ஆமா உன் மச்சினர்கள் தான் அழைச்சிண்டு வந்தா. இப்பதான் செக் பண்ணிட்டு டாக்டர் போனா."

வயிற்றின் சுமையை அவள் மறந்தே போனாளே எப்படி அது? எதுவுமே ஞாபகமே இல்லை. அன்றாடம் வயிற்றுப் பிரச்சனைக்கு வழி செய்யும் முயற்சியில் இந்த பிரச்சனை இருந்ததே தெரியவில்லை. சாதாரணமாக சந்தோஷப் படவேண்டிய விஷயம் எத்தனை வேதனையைத் தருகிறது

"ஆமாம் மாமி" தலையை மட்டும் ஆட்டினாள்.

"அவன் உறவே வேண்டாம்னு தலை முழுகிட்டு வந்தவ இதையும் கலைச்சிருக்கக் கூடாதா?"

"இதை மறந்தே போயிட்டேன் மாமி."

"சரி ஜட்ஜ் மாமி ஆத்துலே ஒரு வாரம் லீவு கேளு எனக்கு தெரிஞ்ச டாக்டரிடம் போய் சுத்தம் பண்ணிடலாம்."

MITHRAVINDA 007



"என்ன சொல்றேள் மாமி." தீயை மிதித்தவள் போல் அதிர்ச்சியுடன் பார்த்தவளை பார்வதம் மாமி கேட்கிறாள்.

"ஏம்மா என்னாச்சு. நான் ஏதானும் தப்பா சொல்லிட்டேனா என்ன?"

"கொல்லப் படற அளவுக்கு இந்தக் குழந்தை என்ன தப்பு பண்ணித்து?"

"என்ன பேத்தறே நீ? குழந்தைக்கு அப்பாவை விட்டுட்டு வந்தாச்சு. இப்ப இந்தக் குழந்தையை பெத்துக்கறதுலே என்ன புத்திசாலித்தனம் இருக்கு? அசட்டுத் தனமா ஏதானும் பண்ணாதே. வெறும் வாயை மெல்றவாளுக்கு அவல் கிடைத்த மாதிரி ஆயிடும்."

மாமி ஊராரைப் பற்றி பேசும்போது சொர்ணம் சிரித்தாள். "மாமி நான் எப்பவுமே ஊர் உலகத்தைப் பற்றி கவலைப் படறதே இல்லை. எனக்கு எது சரின்னு தோணறதோ, அதை செய்யறதுலே தப்பில்லைன்னு நம்பறவ நான்."

"அசடு மாதிரி பேசாதே. உனக்கு வயசு பதினெட்டு இந்த வயசுலே உன் யோசனை கரெக்டா இருக்கும்னு நம்பறியா?"

"வ்யசுலே என்ன மாமி இருக்கு?"

"இல்லேம்மா இப்ப இல்லேன்னாலும் இன்னும் கொஞ்ச நாள் கழித்து உனக்குன்னு ஒரு வாழ்க்கை வரத்தான் போறது நீ இப்படியேவா இருக்க முடியும்? ஒரு நல்ல பையனா பார்த்து, கல்யாணம் பண்ணிகிட்டு, அவனுடைய குழந்தைகளை சுமக்கறதுதான் புத்திசாலித்தனம். இந்த வேண்டாத சுமை உனக்கு கஷ்டத்தை தான் கொடுக்கும். உன் எதிர்கால வாழ்க்கைக்கு பெரிய முட்டுக்கட்டையா இருக்கும்."

"எனக்கு எதிர்காலமா?"

"என்னடி நூத்துக் கிழவி மாதிரி பேசறே? பதினெட்டு வயசுலே இப்பெல்லாம் வாழ்க்கையே ஆரம்பிக்கிறது கூட

இல்லடி. நீ இன்னும் சின்ன குழந்தையடி குருவி தலையில் பனங்காய் வைக்கற மாதிரி உனக்கு கடவுள் பண்ணிட்டானேன்னு வேதனைப் பட்டுண்டு இருக்கேன்."

"இல்லை மாமி முடியாது."

"அப்ப என்ன பண்ணப் போறே?"

"இந்தக் குழந்தை என் குழந்தை. அதை பெத்து வளர்க்கப் போறேன். சாதாரணமா குடும்பமா வாழ்ந்திருந்தா இந்தக் குழந்தை அழிஞ்சிருக்குமா? ஏதோ என் தலைல அப்படி எழுதி இருக்கு. அதுக்கு என்ன பண்றது? என் குழந்தையை ஒரு நல்ல மனுஷனா வளர்க்கணும். இவனுடைய அப்பா தப்பு செய்தார்னு விலகினேன். ஆனா என் குழந்தை என்ன தப்பு செய்தது? எதுக்காக இந்தக் குழந்தையைக் கொல்லணும். இல்லை மாமி. இந்தக் குழந்தை எனக்கு வேணும்." பதினெட்டு வயதுப் பெண் முப்பது வயதுப் பெண் போல பேசும் மனமுதிர்ச்சியைக் கண்டு ஆச்சரியப்பட்டாள் மாமி.

"உன் நல்ல மனசுக்கு எல்லாமே நல்லபடியா நடக்கும் டி. உன் பிள்ளை உன் பேரைச் சொல்ற அளவிற்கு பெரிசா வருவான் பாரு."

"பிள்ளைன்னு இப்பவே முடிவு பண்ணிட்டேளே."

"பொண்ணா இருந்தா மூஞ்சி களையா ஒரு தனி அழகையே கொடுத்திருக்கும். ரெண்டாவது உன்னைப் பாத்தா எனக்கு என்னவோ பிள்ளைன்னு தோணறது. பெண்ணைக் கொடுத்து கடவுள் உன்னை கண்டிப்பாய் கஷ்டப்படுத்தவே மாட்டார்டி."

மாமியின் ஆதரவு மனசை வருட புன்னகைக்கிறாள் சொர்ணம். அன்று மாலை வேலை முடிந்து வரும்போது அப்பா வெளித்திண்ணையில் அமர்ந்து, வாசலில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

MITHRAVINDA 007





6

"அப்பாவா இது?" மனதில் சந்தோஷ ஊற்று உதயமாயிற்று. ஆயிரம் இருந்தாலும் பெற்றவர் ஆயிற்றே. விட்டுக் கொடுக்க மனது வருமா? எத்தனை இடத்தில் அலைந்து திரிந்து தன் இருப்பிடத்தை கண்டுபிடித்தார்களோ. பாவம். அம்மா வரவில்லையா? பரபரவென்று அவள் உள்ளே நுழைந்த போது அப்பா விட்டேத்தியாக பார்த்தார். அம்மாவும் வாசல் கதவின் அருகிலேயே அமர்ந்திருந்தாள். "அம்மா..." ஏனோ கொஞ்ச நாட்களாக அம்மாவைப் பார்க்க வேண்டும் போல் ஒரு ஏக்கம். அம்மாவை ஓடிப் போய் கட்டிக் கொண்டாள். அம்மாவும் மகளை நெஞ்சார அணைத்துக் கொண்டாள்.

"என்னம்மா இப்படி பண்ணிட்டே?" கண்ணீரோடு கேட்கிறாள்.

"என்னம்மா?" பெண் ஆச்சரியமாகக் கேட்க.

"மாப்பிள்ளை கடிதாசு போட்டிருந்தாரும்மா. எல்லா விவரமும் எழுதியிருந்தார். ஏம்மா நீ படிச்ச பொண்ணு தானே. இப்படி வீட்டை விட்டு வந்தது தப்பு இல்லையா?" சொர்ணம் அம்மாவையே பார்த்தாள்.

"என்னம்மா கேட்ட கேள்விக்கு பதிலையே காணோம்." அப்பா தான் கடினமாகக் கேட்கிறார்.

"என்ன பதில் சொல்றது?"

"என்னது?" என்கிறார் அப்பா.

"போன அன்னிலேந்து என் மாமியார் என் வாழ்க்கையை பிழிஞ்செடுத்துட்டா. அதுவும் போறாதுன்னு பணம் கொண்டுவா.

போராடிண்டு வான்னு ஒரே பிடுங்கல். அதையும் மீறி போராடிண்டு இருக்கச்சே. எனக்கு வாழ்க்கையே இல்லைன்னு ஆயிடுத்து. இனிமேல் அங்கே இருந்து கஷ்டப்படறது அசட்டுத்தனம்னு தோனித்து. வந்துட்டேன்."

"ஓஹோ புருஷன் வேணாம். மச்சினன் வேணுமா?" குத்திக் காண்பித்தார் அப்பா.

"அப்பா..." அவள் பதறுகையில் "இதெல்லாம் என்னடி ஊரே சிரிச்ச போச்சு. ஒருத்தனுக்கு இரண்டு பேரோட... அதுக்கு மேலே பேசவே நாக்கு எழலை." அப்பா சொல்ல, சொல்ல சொர்ணத்திற்கு பற்றிக் கொண்டு வந்தது. பெற்றவர்களேவா இப்படி பேசுவார்கள்? பெண்ணின் வாழ்க்கையே நாசமாகிப் போய்விட்டதே என்று துக்கப்பட காணோம். மாறாக கூசாமல் பழி எப்படி போட முடிகிறது?

"இத பாரு கர்டன் ரைட்டா சொல்லிட்டேன். உம் மச்சினங்களை அழைச்சிண்டு நீயும் வீடு திரும்பு."

"அப்பா அங்க... பிரச்சனை" அவளை முடிக்க விடாமல் கத்துகிறார் அப்பா.

"முதல்லே நான் சொல்றத கேளு. உன் மாமியார் இனிமே வாயைத் திறக்கவே மாட்டா. நானும் என்னால் தரமுடியாதுன்னு கிளீனா சொல்லிட்டேன். பணம் கேட்டது தப்புன்னு உன் மாமியாரே ஒத்துகிட்டா..."

"சரிப்பா அந்த இன்னொரு பொண்ணு."

"அது ஏதோ வேலை செய்யறச்சே லவ்வாம். ரிஜிஸ்டர் பண்ணிகிட்டா போலருக்கு. அவளைக் கூடிய சீக்கிரம் டைவர்ஸ் பண்ணிடறானாம். இத பாரு ஆம்பளை அப்படி. இப்படி இருக்கறது சகஜம் தான் அதுக்காக புருஷனை உதறிட்டா வருவாங்க."

"அப்பா அந்த பொண்ணை டைவர்ஸ் பண்ணா அவ என்ன பண்ணுவாப்பா."

MITHRAVINDA 007



"அதைப்பத்தி நமக்கு என்ன? நான் சொல்லிட்டேன் நல்லா திட்டிட்டு வந்தேன். மாப்பிள்ளையும் ஒத்துகிட்டாரு. அந்தப் பொண்ணு எக்கேடும் கெட்டு போகட்டும். நமக்கு என்ன?" அதற்கு மேல் அப்பா பேச விரும்பவில்லை.

"எப்ப கிளம்பறேன்னு சொல்லு. பெட்டி படுக்கை எல்லாம் எடுத்து வை. சாமானை எல்லாம் மூட்டை கட்டி வை."

அப்பா கட்டளை இட, இட மௌனமாக இருந்தாள் சொர்ணம். இது என்ன புதுக் குழப்பம்? எதுவுமே வேண்டாம் என்று உதறி விட்டு வந்தவளை மறுபடி ஒட்ட வைத்து பார்ப்பது ஏன்? எரிச்சலாக வந்தது. அதுமட்டுமல்ல. இந்த இன்னொரு பெண்ணின் வாழ்க்கையும் பாழாகாதா? பாவம் எந்த நிர்பந்தத்தில், தன் கணவன் என்னைத் திருமணம் செய்ய ஒத்துக் கொண்டாளோ. வேண்டாம் அவளாவது வாழட்டும். என் கதை முடிந்தது முடிந்தது தான். மறுபடியும் ஒட்டும் என்று தோன்றவில்லை.

"அப்பா என்ன மன்னிச்சிடுங்க. நீங்க சொல்றது எதுவுமே நடக்கப் போறதில்லே, என்னால் மறுபடியும் திரும்பிப் போக முடியாது. என்னைப் பொறுத்தவரை நிம்மதியா இருக்கேன் நான் என் நிம்மதியை இழக்க விரும்பவில்லை ."

"என்னடி பேத்தறே. எத்தனை கஷ்டப்பட்டு கல்யாணம் பண்ணி கொடுத்தோம் நாங்க."

"நான் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை, நீங்க பணம் செலவழிச்சதனாலே அந்த ஆத்துலே இருக்கணுமா நான்?"

"என்னடி உளர்றே? அவர் தான் திருந்திட்டார்னு சொல்றேன் இல்லே."

"என்னைப் பத்தி கவலைப்படறியே. அந்தப் பொண்ணை டைவர்ஸ் பண்ணா அவ வாழ்க்கையும் தானே போயிடும். அதை யோசிச்சு பாத்தியா?"

"தப்பு பண்ணவ அவ. அதுனாலே அனுபவிக்கட்டும்."

"தப்பு அவ பண்ணலே அம்மா. தப்பு பண்ணினது உன் மாப்பிள்ளை. அவருக்குத் தண்டனை கிடையாதா?"

"விதண்டாவாதம் பேசி உன் வாழ்க்கையை ஏம்மா கெடுத்துக்கறே."

"உனக்கு பதினெட்டு வயசு தான் ஆறது. நீ வாழ வேண்டாமா?"

"இப்படித்தான் வாழணும்னா எனக்கு அந்த வாழ்க்கை வேண்டாம்மா."

"சரி அதை விடு. நாங்க சொல்றதுக்காகவாவது போய் சேர்ந்து வாழ மாட்டியா?" அப்பாவின் குரல் உயர்ந்தது.

"கேட்க முடியாதுப்பா. பணத்துக்காக உங்க வாசப்படி ஏறினப்போ என்ன சொன்னீங்க? கல்யாணம் ஆயிடுத்துன்னா இனிமே உன் சுகம், துக்கம் உன் புருஷனோடு தான்னு சொல்லலே. எங்களுக்கு உன் பிரச்சனையில் சம்பந்த மில்லைன்னு சொல்லலே. இப்ப எந்த பந்தத்தில் வந்து பேசறீங்க?" அப்பா விழித்துப் பார்க்கிறார். "ஓஹோ இத்தனை திமிரா? அதினால தான் வாழாம இருக்கே." எதிராளியை வீழ்த்து வதற்காக பிரயோகிக்கின்ற அஸ்திரம் இது. சொர்ணம் நெஞ்சை நிமிர்த்திக் கொள்கிறாள். ஆயிரத்தோடு இதுவும் ஒன்று என்ற கணக்குதான். அப்பாவாவது, அம்மாவாவது, பணம் இல்லை என்றால் கடவுள் கூட தொலைவு என்று ஆகி விட்ட நேரத்தில் இவர்கள் உறவு மட்டும் என்ன சாசுதம்?"

"நான் வாழறேனோ வாழலையோ, அது என்னைச் சேர்ந்தவங்க கவலை. உங்களைப் பொறுத்த வரையில் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாச்சு. இனிமே உங்க பொறுப்பு தீர்ந்தது. மதத்தைப் பற்றி கவலைப் படாம நீங்க கிளம்புங்க அப்பா." மகள் சொல்ல, சொல்ல எரிந்தது அவருக்கு.

"இப்ப நான் கூட வேற ஆளா? இவனுங்க தான் வேண்டியவங்களா?" கறுவுகிறார்.

"அப்படித்தான் வச்சுங்களேன். நீங்க பொறுப்பை தட்டி கழிச்சேள். ஆனா அவா ஏத்துகிட்டவா. பொறுப்பை தட்டி

MITHRAVINDA 007



கழிக்கறவாளை விட ஏத்துக்கறவாளை மதிக்கலாம்னு தோணறது."

"ஓஹோ என்னையே எதிர்த்துப் பேசற அளவிற்கு இந்த பயல்கள் உன்னை டிரெய்னிங் பண்ணிட்டாங்களா?" இதற்குள் சீனு காபி கொண்டு வர "போடா" என்று தட்டி விட கொதிக்கும் காபி சீனு மேல் சிதறி, சீனு சின்னதாய் அலற, சொர்ணம் கோபத்தோடு பதறிப்போனாள். பின் கோபத்தோடு கத்தினாள்.

"அப்பா உங்க வேலை முடிஞ்சுது இல்லே, கிளம்பறீங்களா?"

"உன் பெண்ணுக்கு எத்தனை திமிர் பார்த்தியா? இப்படி இருந்தா எந்த ஆம்பளை வச்சுப்பான்? இத பாருடி இப்படி கெட்டு அலையறதுக்கு எங்க ரூபாயை அனாவசியமா செலவழிச்சிருக்க வேணாம்."

"இப்ப கூட உங்க பெண்ணோட வாழ்க்கைய விட பணம் தானே பெரிசா போச்சு உங்களுக்கு."

கேட்டவளுக்கு பதில் சொல்லாமல் சொர்ணாவின் தாயுடன், தந்தையும் இறங்கிப் போனார்கள்.

"பாத்தீங்களா, பெத்தவாளே எத்தனை மோசமா இருக்கா பாருங்க. எப்படி கேவலமா பேசிட்டு போறா பாருங்க."

சொல்லி விட்டு பார்வதம் மாமியின் மடியில் விழுந்து வெகு நேரம் வரை அழுது கொண்டு இருந்தாள் சொர்ணம். அம்மாவும், அப்பாவும் பேசி விட்டு போனது மனதை வெகுவாக காயப்படுத்தி இருந்தது. "உன்னை விட பெரிய தடியன்கள் உனக்கு பிள்ளைகளா? பேஷ் பேஷ்..." அப்பா சொல்லிவிட்டு போனது அடிக்கடி காதில் விழுந்து இவளை கலங்கடித்தது. பார்த்துக் கொண்டிருக்கும்போதே சொர்ணம் ஒரு அழகான குழந்தைக்குத் தாயானாள். இரண்டு மச்சினர்களும், பார்வதம் மாமியும் தான் உதவி. "மன்னி... மன்னி" என்று அவளை அசையவிடாமல் எல்லா வேலைகளையும் தங்கள் தலைமேல் போட்டுக் கொண்டு செய்தனர். சுறுசுறுப்பாக செய்தனர்

சொர்ணத்தின் மைத்துனர்கள் தோட்டித்தில் காய்கறிகள் போட்டு அதை விற்று குடும்ப வருமானத்தை ஓரளவிற்கு சீராக்கினான் வாசு குழந்தை பிறந்த இரண்டு மாதத்திற்கெல்லாம் சொர்ணம் பழையபடி வேலைக்குப் போனாள். நடுவில் கிடைக்கும் வேலைகளையும் செய்ய ஆரம்பித்தாள். சீனுவும், வாசுவும் குழந்தையைத் தாங்க, சொர்ணத்திற்கு குழந்தையைப் பற்றியும் கவலை இல்லை. வேலைப் பளுவும் இல்லை. சம்பாதிப்பதில் ஒரு பகுதியை குழந்தையின் எதிர்காலத்திற்கு என்று போட ஆரம்பித்தாள் சொர்ணம். வாசுவும் சேகரிக்க ஆரம்பித்தான்.

“உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? சொர்ணா ஜட்ஜ் மாமிக்கு சொந்தக்காரா பிளாட் ஒண்ணு தெருக் கோடியில் இருக்காம். அது விலைக்கு வருதாம்.” பர்வதம் மாமி சொன்னதிலிருந்து மனது அதிலேயே உழன்றது. ஜட்ஜ் மாமிக்கு சொந்தக்காரா என்று சொன்னார்களே கேட்டுப் பார்ப்போமா? அந்த இடத்தில் இருந்த ஒட்டு வீடு பாழடைந்து சிதலமாகி இருந்தது. வீடு ஒரு சின்ன பகுதி தான். மற்றபடி வெட்டவெளிதான். இருக்க ஒரு வீடு, ஒரு சின்ன குடிசை போட்டுக் கொண்டால் கூட போதும். பிறகு காய்கறி, பழம் என்று தோட்டம் போட்டாலே எங்கோ போய் விடலாம். வாசுவிடமும் சீனுவிடமும் இதைப்பற்றி பேசினால் “உங்க இஷ்டம் மன்னி, என்றார்.” நம்ம வீடு, நம்ம வாசல்னு இருந்தா வாடகையும் மிச்சம் நாம் போட்ட பணத்தையும் கொஞ்ச நாள்ல எடுத்திடலாம் இல்லையா?” அன்று வேலைக்குப் போனபோது ஜட்ஜ் மாமியிடம் தன் விருப்பத்தை தெரிவித்தபோது.

“அங்க எல்லாம் தண்ணி கிடையாது. சும்மா வெத்துக்கு வச்சண்டு என்ன பண்றது?” என்றாள்.

“ஒரு ஐம்பதாயிரம் ரூபாய் இருந்தால் ஒன்னரை கிரவுண்ட் நிலம் கிடைச்சிடும். அத்தனை ரூபாக்கு நீ என்ன பண்ணுவே?” என்றாள். “இத பாரு பணத்தை கடனா வாங்கிட்டினா கூட அந்த நிலம் வேஸ்ட் தான். இந்தத் தெருக் கோடி போகப் போக மேடு எங்கேயுமே தண்ணி கிடையாது. மழை பேஞ்சாதான் தண்ணி

MITHRAVINDA 007



அதை வாங்கினாலும் பிரயோசனப்படாது. அந்த துட்டை வட்டிக்கு விட்டியானா “பணமாவது கைல புரளும்.” மாமி மட்டுமல்ல, பார்த்தவர்கள் எல்லோருமே சொன்னார்கள். ஏன் நெருங்கிய பர்வதம் மாமி கூட இதற்கு ஒத்துக் கொள்ள வில்லை.”

“அசட்டுத்தனமா ஏதானும் செஞ்சுட்டு முழிக்காதே. பேங்கிலே வட்டி கட்டறதுக்குள்ளே முழி பிதுங்கிடும். இப்ப சாப்பிடற சாப்பாடு கூட கால் வயிறு அரை வயிறாகி விடும்.” எல்லோரும் வேண்டாம், வேண்டாம் என்று சொல்ல, சொல்ல சொர்ணத்தின் மனதில் மட்டும் பிடிவாதம் ம்.. எப்படியும் வாங்கி விட வேண்டும். பாங்க் மேனேஜர் வீட்டிலும் சொர்ணம் தான் சமையல். மெதுவாக பேங்க் மேனேஜரிடம் விஷயத்தை சொன்ன போது.

“சரிம்மா அந்த நிலமே வேஸ்ட்ங்கறா. இத்தனை பணத்தை வாங்கினா எப்படி திருப்ப போறே. முடியுமா?”

“முடியும்னு நம்பிக்கை இருக்கு சார். என்னுடைய டெபாசிட் தொகையிலிருந்து வட்டி வேறே வருதுங்களே.” போட்ட டெபாசிட்டுகளை பேங்கில் அடமானம் வைத்து ஐம்பதாயிரம் ரூபாய் கடன் வாங்கினாள். சொந்தமாக அந்த ஒன்றரை கிரௌண்டு நிலத்தை ஜட்ஜ் மாமியின் உதவியுடன் அவரது சொந்தக்காரரிடம் பேசினாள். தன் மச்சினர்களின் ஒப்புதல் தவிர, வேறு யார் ஒப்புதலையும் அவள் கேட்கவில்லை. நிலம் வாங்குவதற்கு முதல் நாள் மூவரும் சாப்பிட உட்கார்ந்த போது, ‘எல்லோரும் வாங்குவது பைத்தியக்காரத்தனம்’ என்று சொல்லி விட மனதில் கவலையோடு இவள் இருக்க.

“ஏம் மன்னி மூஞ்சி வாட்டமா இருக்கு.” சீனுவும் வாசுவும் கேட்க, பெருமூச்சு விட்டவாறே சொல்கிறாள்.

“நான் வாங்கணும்னு நினைச்சேன். ஆனா ஒருத்தர் கூட சாதகமா சொல்ல மாட்டேங்கறாங்க.”

“மன்னி நீ வாங்கணும்னு முடிவு பண்ணிட்டயா?” வாசு கேட்க.

"எனக்கு என்னமோ அதை வாங்கிட்டா நம்ப லைப்பே மாறிடுனு தோணறது."

"அப்ப மத்தவாள கேட்பானேன். வாங்கிடு."

"எப்படி?"

"உன் பேர்லே டெபாஸிட் இருக்கில்லே அதை வச்சு வாங்கு." வாசுவும் சீனுவும் கொடுத்த தைரியம் தான். என் குழந்தைகளே எனக்கு ஓ.கே சொல்லிட்ட பின், மற்றவர்களைப் பற்றி என்ன கவலை? சொர்ணா துணிந்து வாங்கினாள். வாங்கி விட்டாளே தவிர அந்த நிலத்தில் என்ன செய்வது?

"என்ன மன்னி மறுபடியும் கவலையா?" சீனு கேட்க.

"அதான் சாப்பிடாம வெறிச்சு பார்த்துண்டிருக்காளே தெரியலையா?" என்றான் வாசு.

"ஏம் மன்னி நீ எனக்கு அம்மா மாதிரி; பிள்ளைகள் இருக்கச்சே உன் கவலையை நீ ஏன் நெஞ்சில் சுமக்கறே? சொல்லு" என்றான் சீனு.

"இல்லேப்பா இங்கே தண்ணி கிடையாது. போர் எல்லாம் போட்டு பார்த்துட்டு தண்ணி இங்க இல்லேன்னுட்டாங்க. ஒரு காய்கறி கடை போட்டா கூட போதும், பேங்க் கடனை அடைச்சிடலாம். நாம ரொம்ப கஷ்டப்படாம இருக்கலாம். அதான் யோசிக்கறேன்."

"இதுலே யோசனை என்ன? செய்யுங்க."

"எப்படி?"

"சொல்லிட்டேளோ இல்லையா பேசாம இருங்க."

"இல்லேப்பா அது அத்தனை ஈஸி இல்லை. போட்டு நஷ்டப்பட்டா நாம திண்டாடுவோம்."

"மன்னி எங்காத்துலேயே நான்தான் தோட்டத்திற்கு இன்சார்ஜ் நீ கவலைப் படாதே. ஏற்கனவே இருந்த ஆத்துலே காய்கறித் தோட்டம் போட்டேனே அப்பவே மலை அடிவாரத்தில்

MITHRAVINDA 007



வேலையை ஆரம்பிச்சேன். இப்ப ஒரு நாலஞ்சு வண்டி செம்மண்ணை கொட்டிப் பார்ப்போம். இங்கிருந்து ஒரு நாலு வீடு தள்ளி கிணறு இருக்கு. அவாளண்டை மாசம் ஒரு இருநூறு ரூபா கொடுத்திடறதா சொல்லி தண்ணி கேப்போம். அங்கேந்து கொடத்துலே கொண்டு வந்து ஊத்திண்டா போச்சு."

வாசு சொல்வது பேச்சளவு எளிதாக இருந்தாலும் அதெல்லாம் நடக்குமா? எத்தனை தூரம் செய்ய முடியும்? மலைத்தாள் சொர்ணம். ஆனால் சொன்ன மாதிரியே அடுத்த நாளே ஒரு ஆறு வண்டி செம்மண் கொண்டு வந்து அடித்தான் வாசு. நாலு வீடு தள்ளி கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கொள்ளவும் சம்மதம் வாங்கினான். அவர்களிடம் அட்வான்ஸாக ஒரு இரு நூறு ரூபாய் கொடுத்து விட்டு வந்தான். "மன்னி நாளைலேந்து வேலையை ஆரம்பிச்சிடலாம்." சொர்ணா குதூகலித்துப் போனாள். தான் கண்டது கனவுதான். இப்படிக் கூடவா நிஜமாகி விடும். என்னென்ன செய்ய வேண்டும் இரண்டு பேரும் திட்டம் போட்டுக் கொண்டு இருக்கும் போதுதான் சீனு இல்லாததைக் கவனித்தார்கள். சீனு எங்கே? "நாம் சாப்பிட உட்கார்ந்தாச்சு. சீனு எங்கே?" சொர்ணம் பதறியடி எழுந்து போக, வாசுவும் வீடு முழுக்க தேடினான். சீனு எங்கேயும் தென்படவில்லை சீனுவுக்கு என்னாச்சு? வாசுவும் பதறிப் போகிறான்.

## 7

"என்னம்மா ஆச்சு?" சீனுவின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் சொர்ணமும் அழுகிறாள். "என் குழந்தையை யாரோ ஏதோ தப்பா சொல்லியிருக்கணும். இல்லேன்னா இப்படி

திடமானவன். லேசில் மனது உடையக் கூடியவனே அல்ல. வந்த புதில் அவளைப் பற்றியும், மச்சினர்களைப் பற்றியும், தப்பு, தப்பாக எத்தனையோ பேச்சுக்கள். அதற்கெல்லாம் கூட அசராதவனுக்கு இப்போது என்ன நடந்து விட்டது? யாராவது ஏதாவது சொன்னாளா?"

சீனு இல்லை என்று தலையை ஆட்டுகிறான்.

"பின்னே."

"மன்னி நீ ஆசைப்பட்டதை செய்யறதுக்கு வாசு உனக்கு உறுதுணையா இருக்கான். ஆனா நான் வெத்து வேட்டு தானே. என்னால் என்ன பிரயோசனம்?"

"அப்படின்னு யார் சொன்னா?"

"சொல்லணுமா எனக்கே தெரியாதா? வாசு காய்கறி வித்து துட்டை சேத்து வச்சுட்டான். இதோ மண்ணுக்கும் தண்ணிக்கும் ஏற்பாடு பண்ணியிருக்கான்? ஆனா நானு?"

சொர்ணத்திற்கு சிரிப்பே வந்து விட்டது. "இதென்ன சின்ன குழந்தை மாதிரி, பயித்தியம். நாங்க எல்லாம் துட்டு வாங்கிண்டு சர்வீஸ் பண்ணறவா. ஆனா உன்னுது ரொம்ப நோபிள் சர்வீஸ். யாராவது பிரீ ஆ இத்தனை அனுசரணையா வேலை செய்ய முடியுமா?" சொர்ணம் ஆதரவாகப் பேச.

"என்னடா சீனு இதெல்லாம் நான் வேற நீ வேறயா?" வாசுவும் தழுதழுக்க.

"சீனு உனக்கு ஒரு விஷயம் சொல்லணும்னு நெனச்சேன். மறந்தே போயிட்டேன். இந்த நிலம் லோன் இதுலேயே மனசு இருந்ததுனாலே எனக்கு மறந்தே போச்சு. நீ அன்னிக்கு ஜாங்கிரி பண்ணியா இல்லையா? பேங்க் மேனேஜர் பொண்ணுக்கு ரொம்ப பிடிக்குமேன்னு ஒரு நாலு எடுத்துண்டு போனேன். ஆஹா என்னம்மா புகழ்ந்து தள்ளிட்டார் தெரியுமா? மூணையும் அவரே காலி பண்ணிட்டார். ஐம்பது ஜாங்கிரி வேணுமாம். ஆர்டர் பண்ணி இருக்கார். ஜட்ஜ் மாமி உன் கை முறுக்கை சாப்பிட்டாளோன்னோ அவ பொண்ணுக்கு நூறு முறுக்கு

MITHRAVINDA 007



வேணுமாம். ஆர்டர் பண்ணியிருக்கா. கோடி ஆத்து மாமி பொண்ணு பிரசவத்துக்கு அமெரிக்கா போறா. முந்திரிப் பருப்பு கேக், மிக்சர், அதிரசம் எல்லாம் வேணுமாம். எல்லாம் உன் டிபார்ட்மெண்ட். நாளைக்கே பண்ண ஆரம்பிச்சிடு. ஜட்ஜ் மாமி கூட சொன்னா பேசாம எம் மச்சினனை சமையலுக்கு அனுப்பியிருக்கலாம். நல்ல சாப்பாடாவது சாப்பிட்டு இருப்போம்னா. அதுக்கு நான் என்ன சொன்னேன் தெரியுமா? என் குழந்தை எல்லாத்திலேயும் எக்ஸ்பர்ட். அவனோட கை பக்குவத்திற்கு முன்னாடி யாரும் நிக்க முடியாது. இதைச் சாப்பிடற அதிர்ஷ்டம் எங்களுக்கு மட்டும் தான் உண்டுன்னேன்."

"என்ன மன்னி இது அநியாயம் இப்படி பேசி அவனை கழற்றி விடேறேள். தண்ணி இழுத்து கொட்டி. இதையெல்லாம் நாம் பார்த்துண்டாச்சு. விதை விதைக்கறது. களை பிடுங்கறது எல்லாம் யார் வேலை. அதெல்லாம் அவன்தான் பார்த்தாகணும். என்னால முடியாது." வாசு சொல்ல, சீனு கலங்கிப் போய் வாசுவின் கைகளைப் பிடித்துக் கொள்கிறான்.

"சாரி" என்கிறான்.

"முதல்லே வயத்துலே எலி பிராண்டறது. அதுக்கு ஒரு வழி பண்ணிட்டு அண்ணனும் தம்பியும் டயலாக் பேசுங்க." என்கிறாள் சொர்ணம்.

அடுத்த சில நாட்களிலே வேலை மும்முரமானது. வாசு கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்து கொண்டு வந்து கொட்டினான். சொர்ணமும் வேலை முடிந்தவுடன் வாசு கிணற்றிலிருந்து இழுத்து வைத்தால் தண்ணீரை தூக்கி தூக்கி வந்து கொட்டினாள். நிலத்தை கொத்தி போட்டான் சீனு. மீதி நேரத்தில் முறுக்கு, ஜாங்கிரி, என்று செய்ய ஆரம்பித்தான் சீனு. அதற்கு வந்த காசை சீனுவிடம் சொர்ணம் தர. சீனு மறுக்க, "ரொம்ப அழகாயிருக்கு. நீ சும்மா செய்யறதா இருந்தா நான் ஆர்டர் வாங்கலே." என்று அலுத்துக் கொள்ளவும் பணம் வாங்கிக் கொள்ள ஆரம்பித்தான்.

இதற்கு நடுவில் குழந்தை நாளொரு மேனியும், பொழுது ஒரு வண்ணமுமாக சித்தப்பாவின் அரவணைப்பில் வளர்ந்தது அம்மாவை விட சித்தப்பாக்கள் என்றால் தான் ஆசை அதிகம் வாசு, சீனு, சொர்ணம் மாய்ந்து, மாய்ந்து போட்ட காய்கறித் தோட்டம் மூன்று நான்கு மாதத்திலேயே நல்ல பலனைக் கொடுத்தது. இதுவரை யாரும் சீந்துவாரின்றி இருந்த நிலம் 'நான் ஒன்றும் சோடையல்ல' என்று காண்பிக்கவோ என்னவோ விளைச்சலைக் கொட்டி தீர்த்தது. வாசு வாசலிலேயே காய்கறிக் கடை போட்டுக் கொண்டு காய்கறி விற்கலானான். சீனுவும் காலையில் கூட வந்த காய்கறிகளைப் பறித்து கொடுத்து உதவி செய்வான். சொர்ணம் தன் வேலை நேரம் போக மீதி நேரங்களெல்லாம் தோட்டத்தோடு தோட்டமாக இருந்தாள். பணம் வர வர இதிலிருந்து ஒரு சிறு தொகையைக் கூட எடுத்து வைக்காமல், பேங்குக்கு கட்ட ஆரம்பித்தார்கள். கடன் வெகு சீக்கிரமே அடைந்த போது மூவருக்கும் மலைப்பாக இருந்தது.

"நீ சாதிச்சுட்டேடி" பார்வதம் மாமி, ஜட்ஜ் மாமி எல்லாம் புகழும் போது, "என் குழந்தைகள் தான் சாதிச்சது அதுங்களோட உழைப்புதான் இத்தனை முன்னேற்றத்திற்கும் காரணம்." என்றாள் சொர்ணம் பெருமையாக.

"இந்த இடத்திலே நமக்குன்னு ஒரு வீடு கட்டிண்டா என்ன? பின்னாடி தோட்டத்தை வெச்சுக்கலாமே." அவள் ஆரம்பிக்கு முன்னே.

"நாங்களும் அதையே நினைச்சோம் மன்னி" என்றார்கள் மச்சினர்கள். நிலத்து பத்திரத்தை வைத்து மறுபடியும் லோன் போன தடவை கடனை சீக்கிரமே அடைத்ததில், இம்முறை கடன் தொகை எளிதாக கிடைத்தது. சின்னதாக ஒரு சமையல் அறை, ஒரு ஹால், ஒரு பெட்ரூம்னு கட்ட லோன். இதற்கே இரண்டு லட்சத்திற்கு மேல் ஓடி விடும் போல் தோன்றியது தன் வீட்டை போலவே அதை ஒட்டி இன்னொரு போர்ஷனும் கட்டினாள் சொர்ணம். அதை வாடகைக்கும் விட்டாள்.

MITHRAVINDA 007



இந்த நான்கு வருடங்களில் எத்தனை பெரிய மாறுதல். துணிந்தவனுக்கு துக்கம் இல்லை என்பது எத்தனை நிஜமான உண்மை. தன்னந்தனியாக தன்னை விட வயதில் பெரியதான இரண்டு குழந்தைகளோடு ஏங்கி, அவமானப்பட்டு, அச்சப்பட்டு நின்றிருந்த வாழ்க்கை எங்கே? வீடு, வாசல் என்று கட்டிக் கொண்டு வெறுத்தவர்கள் கூட விரும்பும் வண்ணம் இருக்கும் இந்த வாழ்க்கை எங்கே? இந்த நான்கு வருடங்களில் சொந்த வீட்டில் குடியேறி, கார்ப்பரேஷன் தண்ணீருக்கு எழுதி போட்டு, டாங்க் கட்டி தண்ணீர் பிரச்சனையை தீர்த்து, இன்னொரு போர்ஷன் கட்டி வாடகைக்கு வாடகை, சீனுவின் பட்சணப் பணம், வந்தும் சொர்ணம் தன் வேலையை மட்டும் கை விட வில்லை. அன்று ஜட்ஜ் வீட்டிலிருந்து வந்த போதே பார்வதம் மாமி பிடித்துக் கொண்டாள்.

"சொர்ணம் உன் கிட்டே ஒண்ணு பேசணும்."

"சொல்லுங்க மாமி."

"வந்து... உனக்கு என்ன மிஞ்சிப் போனா ஒரு இருபத்து இரண்டு வயசு இருக்குமா? இந்த காலத்துலே, இந்த வயசுலே இது என்ன துறவி மாதிரி வாழறது? எனக்கு தெரிஞ்ச நல்ல பிள்ளை இருக்கான். நீ சரின்னா நான் முடிச்சுடறேன் உன்னைப் பத்தி எல்லாம் சொல்லி வச்சுருக்கேன். என்ன சொல்றே?"

"நான் மூணு குழந்தைகளோட அம்மா. என்னை யாரு இனிமே பண்ணிப்பா." சொர்ணம் கன்னத்தில் குழி விழ, அழகாக சிரிக்கிறாள்.

"என்னடி இது நூத்துக் கிழவி மாதிரி பேசிண்டு. உன் வாழ்க்கையிலே நடந்தது. நடந்து போச்சு. அதுக்காக தெனாலி ராமன் பூனை மாதிரியா இருக்க முடியும்?"

"இல்லை மாமி. இது சாத்தியமே இல்லை. என்னதான் வீடு வாசல்னு ஆனா கூட பேசற நாக்கு, பேசிண்டு தானே இருக்கு. முன்னெல்லாம் மூஞ்சிக்கு முன்னாடியே பேசுவா. இப்ப பின்னாடி பேசறா."

"அவாளை எல்லாம் விடு உனக்கு சம்மதமா?"

"இல்லை மாமி பெண்ணுக்கு கல்யாணம்ங்கறது அத்தனை முக்கியமா? அது மட்டுமல்ல பண்ணின்டா என் குழந்தைகளை பிரிய வேண்டியிருக்கும். என்ன தான் நீங்க சொன்னாலும் பின்னாடி பிரச்சனை வராதுன்னு எப்படி திடமா சொல்ல முடியும்? பெத்தவாளே புரிஞ்சிக்கலை எங்கிருந்தோ வரவாளுக்கா புரியும்."

"இல்லேம்மா நீ தப்பா புரிஞ்சிண்டு இருக்கே. உலகத்துலே எல்லோருமே ஒரே மாதிரி இல்லைம்மா."

"இல்லை மாமி இந்த கல்யாணம் நான் நெனச்சு பாக்காத ஒன்னு. என்னைப் பொறுத்தவரைக்கும் எனக்கு அது அத்தனை தேவைன்னு எனக்குத் தோணவே இல்லை. என்னை மன்னிச்சிடுங்க."

"தெரியும் நீ இப்படித்தான் சொல்வேன்னு தெரியும். சரி சீனு. வாசுவுக்கு பொண்ணை பார்க்கறது தானே. அவாளுக்கு பார்க்கலையா?"

"பாத்தீங்களா. அவாளை பத்தி நான் நினைக்கவே இல்லையே. எப்படி மறந்து போனேன்? ஒரு நல்ல இடமா இருந்தா சொல்லுங்க மாமி."

அடுத்த வாரத்தில் மாமி ஒரு இடத்திற்கு அவர்களை அழைத்துப் போனாள். பொண்ணுக்கு கை ஊனம். கை விளங்காது. சீனு எத்தனையோ மறுத்தும் சொர்ணா விடாப் பிடியாக அழைத்துக் கொண்டு போனாள்.

"கால் ஒச்சமாக இருந்தாலும் நல்ல வேலை இருந்தா சரி. என்ன வேலை?" என்றனர்.

"எல்லாம் சொல்லியிருக்கிறேன் என்று மாமி சொல்லியும் கேட்கிறார்களே?" சொர்ணம் கூச்சப்பட்டாள்.

'எல்லாம் தெரிந்திருந்தும் ஏன் கேட்கிறார்கள்?'

MITHRAVINDA 007



"மன்னி பேர்ல இருக்கு." சீனு மொழிய.

"ஏம் மன்னி பேர்ல இருக்கு?" கேட்டனர்.

"அதுக்கு என்ன?" என்றான் சீனு. வாசு வர மறந்து வீட்டிலேயே இருந்தான்.

"ஆமா மன்னி பேர்ல இருந்தா பின்னாடி உங்களுக்கு வருமா?" கேட்க, "மன்னி கிளம்பலாமா?" கேட்டுவிட்டு எழுந்தே விட்டான் சீனு. இன்னொரு இடத்தில் "உங்க அண்ணாவோட வாழாத பொண்ணு உங்களுக்கு எப்படி மன்னி யாவா?" என்று இடக்காக கேட்க. அதற்குப் பிறகு சீனு பெண் பார்க்கவும் ஒத்துக் கொள்ளவில்லை. திருமணத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. சரி வாசுவுக்காவது பார்க்கலாம் என்றால் "மன்னி உங்களுக்கு என்ன வயசாறது?"

"இருபத்து இரண்டு."

"உங்களுக்கே ஆகாதபோது எனக்கு என்ன?" சின்ன குழந்தையாக அவன் சொல்லும் போது,

"வாசு என் கதை வேற. இத பாருங்க ஒரு நல்ல பெண்ணா பார்த்து." ஆரம்பித்தவளை முடிக்க விடவில்லை.

"மன்னி சீனுவுக்கு பொண்ணு பார்க்க போனீங்களே என்ன ஆச்சு? இங்கு இருக்கிற சீனுவுக்கு கால் தான் ஊனம். ஆனா இங்கு இருக்கிற மனுஷாளுக்கு மனசே ஊனம். ஊனமில்லாத மனசு இருக்கிற பொண்ணு கிடைக்காது. அப்படியே கிடைச்சாலும் இங்கே இருக்கறவா மனசை ஊனப்படுத்தாம விடமாட்டா. அதனால எனக்கு கல்யாணமே வேண்டாம்."

"இது பயித்தியக்காரத்தனமான முடிவு."

"மன்னி முதன் முதல்லே உங்க வார்த்தையை மீறுகிறேன். என்னை மன்னிச்சிடுங்க. நான் இப்படியே இருந்திடறேன். அண்ணா பிள்ளை என் பிள்ளை தானே. அவனோட முன்னேற்றம் அவனை நல்ல நிலமையில் வைக்கறது மட்டுமே தான் என்னோட வேலை எனக்கு உலகத்திலே வேற எந்த

கொழுந்தன்களையும் பார்த்து, வியந்து பேச்சற்று நின்றாள். இது என்ன பந்தம்? என்ன சொந்தத்தில் இத்தனை பாசமாக இருக்க முடிகிறது? இவள் தான் அசத்துகிறாள் என்றால் கொழுந்தன்கள் இவளுக்கு மேல் போய் விடுகிறார்களே. மலைத்துப் போனாள். இரத்த பந்தம் தான் சொந்தம் என்று யார் சொன்னது? இங்கே கட்டுப் பட்டிருப்பது மனது. மனது மட்டும் தான் அந்த கட்டுப் பாட்டுக்குத் தான் எத்தனை மரியாதை.

ஆண்டுகள் ஓடிப் போயின. சொர்ணத்தின் மைந்தன் கிரி நன்றாகப் படித்தான். விளையாட்டு, படிப்பு, பாட்டு என்று எல்லாவற்றிலுமே அவன்தான் முதல். அம்மா கிழித்த கோட்டை தாண்டாதவனாகவும், ‘சித்தப்பா சித்தப்பா’ என்று சித்தப்பாக்களின் மேல் உயிரை வைத்திருப்பவனாகவும் இருந்தான். நிறம், முகம், உருவம், அமைப்பு இப்படி எல்லாவற்றிலுமே அம்மாவைக் கொண்டிருந்தான். சொர்ணம் இப்போதெல்லாம் தன் வீடு குடும்பம் என்றில்லாமல் வெளி வேலைகளிலும் ஆர்வம் காட்டினாள்.

‘உதவி’ என்று யார் கேட்டாலும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வந்தாள். யாருக்காவது உடம்பு சரியில்லையா? பணத்தேவையா இல்லை வேறேதாவது உதவியா? எதுவாகயிருந்தாலும் தயங்காமல் செய்தாள். இது கூட தற்செயலாக ஆரம்பித்ததுதான். அவர்கள் வீட்டில் குடியிருந் தவர்களின் பெண்ணுக்கு திருமணம் ஆகவில்லை என்று பெற்றோர் வருந்தி அழுதது தெரிந்ததும் தானே துணிந்து மாப்பிள்ளை பார்த்து திருமணத்தை முடித்து வைத்தாள். ஒரு முறை யாரோ ஒரு பையன் பரீட்சைக்கு பணம் கட்ட முடியாமல் தவிக்க, விஷயம் தெரிந்து தன் சம்பளத்தை கொடுத்து பணத்தை கட்டினாள். மற்றவர்களுக்கு உதவி செய்யும்போது அவர்கள் முகத்தில் தெரிந்த ஆறுதல், நிம்மதி இதைப் பார்த்து சொர்ணத்துக்கு மனம் குதூகலப்பட்டது. ஒரு வகையில் பொது காரியங்கள் செய்வதில் அப்போது தான் பிள்ளையார் சுழி போடப்பட்டதோ என்னவோ.

MITHRAVINDA 007



தெரிந்தும் தெரியாமலும் நிறைய பேருக்கு உதவி செய்தாள் சொர்ணம்.

அன்று சொர்ணத்தின் மாமியார் ஊரிலிருந்து யாரோ வந்திருந்தார்கள். தன் கணவன் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டானாம். நல்ல வேளை அவளுக்கு குழந்தை குட்டி என்று எதுவுமே இல்லையாம். சொல்ல, சொல்ல கணவனின் முதல் மனைவிக்காக மனது வருத்தப்பட்டது. புதிதாக வந்தவள் மாமியாரை கொடுமைப் படுத்துகிறாளாம் முக்கியமாக சீனுவும் வாசுவும் போனதிலிருந்து மாமியாருக்கு வேலை நெட்டி வாங்குகிறதாம். ‘மாமியாருக்கு உடல் நலம் வேறு சரியில்லை’ என்று கேள்விப்பட்டவுடன் சொர்ணத்திற்கு குற்ற உணர்வு தாக்கிற்று. அவள் பிள்ளைகளை அழைத்து வந்து எனக்காக உபயோகித்தது சுயநலம். மனசாட்சி இடித்தது ‘மச்சினர்களை அனுப்பிவிட வேண்டும்’ மனது துடித்தது.



## 8

தான் அந்த வீட்டை விட்டு வந்ததுமே வீடு நிர்மூலமாகவும், மாமியார் தலையில் எல்லாமே விழுந்து விட்டதாகவும் கேள்விப் பட்டதிலிருந்து மனம் குழம்பினாள். இரண்டு நாளாக மனசாட்சி குத்த தவித்துப் போனாள். ‘நான் வேண்டுமானால் மருமகள் எங்கிருந்தோ வந்தவள். மாமியாரைப் பற்றி என் உணர்ச்சிகள் வேறாக இருக்கலாம். ஆனால் பிள்ளைகள்? அவர்கள் கேள்விப்பட்டால் என்ன செய்வார்கள்? சொந்தம் ஆயிற்றே. நான் வளர, என் கட்டுக்குள்

அவர்களை வைத்துக் கொண்டது என் தவறு தானே. என்ன தான் வேண்டாத மாமியார் என்றாலும் மனது கஷ்டப் பட்டது. இவர்களைப் பிரித்து அழைத்து வந்தது தவறு. பிராயச்சித்தமாக ஏதாவது செய்யலாமா? மனது தவித்தது. சீனுவிடம் மெதுவாக ஆரம்பித்தாள். அம்மாவைப் பற்றிச்சொன்னாள். "போய்ப் பார்த்து விட்டு வா." என்றாள்.

"அம்மா தான் என் எதிர்லேயே இருக்கே. வேறு யார் எனக்கு அம்மா?" என்பது பதிலாகக் கிடைத்தது.

"சீனு."

"த பாருங்க மன்னி. நீங்க சொல்றது புரியறது. என்னைப் பொறுத்த வரைக்கும் நீங்க தான் அம்மா."

"இதுக்கு மேலே என்ன சொல்றதுன்னு எனக்கு தெரியலே."

"மன்னி இதைப் பத்தி பேசாதீங்க. இப்ப பேசறதுக்கே எனக்கு டைம் இல்லே. கிரி ஸ்கூலுக்கு டைம் ஆயிடுத்து. இன்னும் குழம்பு ஆகலை. எனக்கு வேலை இருக்கு. என்னை விடுங்க." உள்ளே போய் வேலையில் ஆழ்ந்து விட்டான். ஆயிரம் இருந்தாலும் பெற்றவள். இந்த பிள்ளைக்கு இது ஏன் தெரியவில்லை? மனம் நொந்து கொண்டாள் சொர்ணம். வாசவிடம் மெதுவாக பேச்சை ஆரம்பித்தபோது.

"தெரியும் மன்னி பர்வதம் மாமி சொன்னா."

"தெரிஞ்சுமா இப்படி இருக்கே. அவ உங்கம்மா அதுக்காகவாவது போய்ப் பாக்கலையா வாசு?"

"எதுக்காக மன்னி, அவ மனசுலே தாய்மை உணர்வு இருந்திருந்தா இன்னேரம் எனக்காக ஆள் வந்திருக்கும்."

"நாம் எங்கே இருக்கோம்னு தெரியலையோ என்னவோ அதான்.. வாசு."

"சப்பை கட்டு எல்லாம் கட்டாதீங்க. நாம எங்கே இருக்கோம்னு கண்டுபிடிச்சு உங்க அம்மா, அப்பாவிற்கு எழுதி இங்கே அனுப்பிச்சது அவ தான். எனக்கு நன்னா தெரியும்

MITHRAVINDA 007



அவளை அம்மாவா எப்படி நினைக்க முடியும்? பெத்துட்டா மட்டும் தாய்மை உணர்வு வந்துடறதில்லே. அன்பே துளி கூட இல்லாத மனதை தாய் என்று எப்படி சொல்ல முடியும்? எங்க அண்ணான் நன்னா படிச்சான் இல்லேங்கலே. அதுக்காக அவன் எங்களை வச்சு காப்பாத்துவான்னு நினைச்சுகிட்டு. எங்க படிப்பை பாதியிலே நிறுத்தியாச்சு. நாங்க மூணு பேரும் அவ குழந்தைங்க தானே. மூணு குழந்தையிலே ஒண்ணை மட்டும் நேசிக்க எப்படி மன்னி முடியறது? படிப்பு வரலைங்கறதுக்காக குழந்தைகளை வெறுக்க முடியுமா? படிப்பை நிறுத்தினதைக் கூட நான் தப்பு சொல்லலை. ஆனா ஒரு சாதாரணமான மனுஷனுக்கு கிடைக்கற மரியாதை கூட எங்களுக்கு இல்லையே. சதா வேலைக்காரன் மாதிரி வேலை செய்து கொண்டே இருக்கணும். எங்களுக்குன்னு எப்பவுமே ஸ்பெஷல் ஆக எதுவுமே செஞ்சது கிடையாது. மிஞ்சிப் போன சோத்தை தின்னுட்டு வளர்ந்தவங்க நாங்க. நாங்க என்ன தப்பு பண்ணினோம்? சாப்பாடு கூட சரியா போடாத அளவுக்கு என்ன பண்ணிட்டோம்? சதா கால் வயிறு தான் சாப்பாடே இதெல்லாம் ஏன் மன்னி? தெரியலை மன்னி, அம்மாவிற்கு எப்ப ஆக்ரோஷம் வரும்னு சொல்ல முடியாது. யார் மேலேயாவது கோபம் வந்ததுன்னா எங்க ரெண்டு பேரையும் தொடப்ப கட்டையை எடுத்துண்டு மொத்தியிருக்கா. சீனு இன்னும் பாவம். அந்த நொண்டிக் கால்லே சூடு கூட வாங்கியிருக்கான். என்னிக்காவது அண்ணா மனசு வந்து காசு கொடுத்தா சினிமாவுக்கு போவோம். ஆனா அண்ணா வேலைக்கு போறதுக்கு முன்னாடி கூட அவனுக்கு வகை, வகையான பேன்ட் ஷர்ட் எல்லாம் உண்டு. எங்க ரெண்டு பேருக்கும் அவனுடைய மிச்ச ஷர்ட்டுகளும், பழைய வேஷ்டிகளும் தான். அண்ணா காசு கொடுத்தா கூட அம்மா அப்ருவல் தரணும். அப்ருவல் கிடைக்கறதே ரொம்ப கஷ்டம். இத்தனை கஷ்டப்பட்டபுறம் அம்மா பிள்ளைங்கன்னு நினைக்கத் தோணுமா சொல்லுங்க? எங்களுக்கு ஒரே வடிகால் புத்தகம் தான் மன்னி, எங்களுக்கு படிப்புங்கறது இல்லையே. தவிர

நானும், சீனுவும் நிறைய புத்தகங்கள் படித்து எங்கள் அறிவை வளர்த்துண்டு இருக்கோம். டிகிரி வாங்கலைன்னாலும், சுயமா சிந்திக்கற அளவிற்கு மூளை வளர்ந்தது. சிந்தனையை வளர்த்துக்க தெரிஞ்சது. சொந்த தாய்க்கு இப்படி கூட பாசமில்லாம இருக்குமா? சொல்லுங்க, ஒவ்வொரு நாளும் நானும் சீனுவும் புழுங்கி, புழுங்கிச் செத்திருக்கோம்."

"எல்லாம் சரிப்பா. ஆனாலும் நான் உங்களை அழைச்சிண்டு வந்தது என் சுயநலமோன்னு தோணறது நான் தப்பு செய்துட்ட மாதிரி நினைக்கறேன். என் தப்புக்கு பிராயச்சித்தமாவாவது நீங்க பார்த்துட்டு வரலாம் இல்லை?" "நீங்க தப்பு பண்ணேளா? மூச்சு விட முடியும் கஷ்டப் பட்டவனுக்கு மூச்சு விட உதவினது தப்பா? நெஞ்சு பாரமாக வெடிச்சிடுமோன்னு புழுங்கினபோது, பாரத்தை உன் கைகள்ளே ஏத்திண்டது தப்பா? இல்லே மன்னி. நீ தான் தப்பா புரிஞ்சிண்டு இருக்கே. ரெண்டாவது நீ எங்களை கூப்பிடவே இல்லையே. நாங்களே தானே வந்தோம். நீங்க இல்லே எங்க மேலே இரக்கப் பட்டு யாரு ஆதரவு காட்டினாலும் புறப்பட்டு போயிருப்போம். வீணா உங்க மனசை போட்டு குழப்பிக்கா தீங்க. ரெண்டாவது உன் மனசு யாருக்கு வரும்? உன் பந்தமே வேண்டாம்னு தூக்கிப் போட்டுட்டு போகும் போது அந்த பந்தத்துக்கு சொந்தங்களை காப்பாத்தனும்னு எப்படி தோணித்து? உன் மனசு விசாலம் யாருக்கும் வராது மன்னி. கடவுள் எங்களுக்கு தாயை சரியா படைக்கலேன்னு உங்களை அனுப்பிச்சான். சரி மன்னி மனதில் எதையும் போட்டு வேதனைப்படாதீங்க. பேங்க் வரைக்கும் போயிட்டு வரேன் அப்புறம் நாழியாயிடும்."

அவன் கிளம்பவும் சொர்ணம் மறுபடியும் தடுக்கிறாள் "நன்னா சிந்திக்கிற சக்தி இருக்குன்னு சொன்னியே. அது இதுதானா? ஏதோ தெரியாம தப்பு பண்ணிட்டா போனால் போகிறது என்று அதை மன்னித்து விடலாம் இல்லையா? மறந்து விடலாம் இல்லையா? அனாவசியமாக விரோதம்

MITHRAVINDA 007



பாராட்டறதுலே என்ன லாபம்?" சொர்ணம் நிறுத்தாமல் பேசிக் கொண்டிருந்தாள்.

"சாரி மன்னி" வாசு வெளியறி விட்டான். சீனுவும் வாசுவும் திடமானவர்கள். அவர்களை அசைக்க முடியாது என்று தெரிந்தது. சரி நாளே போய்விட்டு வந்தால் என்ன? நான் செய்த தப்புக்கு பிராயச்சித்தமாக இதை செய்யலாமா? சீ... அப்பேற்பட்ட தப்பு நான் என்ன செய்தேன்? மாமியார் என்ற உறவுக்காக போய் வரலாமா? கணவனே இல்லை என்று ஆன பின் மாமியார் என்ற உறவு எங்கிருந்து வந்தது? போக வேண்டும் என்று தோன்றினாலும் மனதை சமாதானப் படுத்தும் படி ஒரு காரணமும் தெரியவில்லை. எத்தனை சமாதானம் கூறினாலும் 'ஏன் போக வேண்டும் எல்லாம் முடிந்த பிறகு இதென்ன புது சொந்தம்?' மனது வேதனைப் பட்டது.

ரொம்ப நேரம் யோசித்ததில் 'ஏன் போகக் கூடாது? இப்பேற்பட்ட ரத்தினங்களை பெற்றவளுக்கு என் அஞ்சலியாக இருக்கட்டுமே. இவர்கள் மட்டும் இல்லையென்றால் என் கதி எனக்கு நெஞ்சுரத்தைக் கூட்டி நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லாமல் சொல்லி, அண்ணன் பிள்ளையை தன் பிள்ளையாக நினைத்து யார் இத்தனை தூரம் செய்வார்கள். இந்த நன்றிக்கு ஒரு தடவை போய் பார்த்து விட்டு வந்தால் என்ன? இப்போது நான் நல்லநிலைமையில் தானே இருக்கறேன். பணம் ஏதாவது வேண்டுமானாலும் கொடுத்து விட்டு வரலாம்.'

அடுத்த நாள் ஜட்ஜ் மாமி வீட்டு வேலையை முடித்துக் கொண்டு வாசுவிடமும், சீனுவிடமும் தான் போகப் போவதாக சொன்ன போது இருவருமே தடுத்தனர்.

"வேண்டாம் மன்னி. வேண்டாம் அம்மா உன்னை என்னிக்குமே மாட்டுப் பெண்ணாக இல்லே ஒரு மனுஷியாகக் கூட மதிச்சதில்லே. வீணாகப் போய் அவமானப் படாதே" இரண்டு பேரும் எத்தனையோ சொல்லியும் கேட்கவில்லை.

அன்றே ஒரு பஸ்ஸைப் பிடித்து தான் புகுந்த ஊருக்குச் சென்று வீட்டை அடைந்த போது கால்கள் உள்ளே போக மறுத்தன. 'மாமியார் எங்காவது தென்படுகிறாளா?' சுற்றும் முற்றும் பார்த்தவாறே கதவில் கையை வைக்க, கதவு திறந்து கொண்டது. மாமியார் உள்ளே எங்கேயும் தட்டுப் படவில்லை. மாதவனோ அவன் மனைவியோ யாரும் காணோம்.

விறுக், விறுக்கென்று பின்னாடி பெருக்கும் சப்தம் வேகமாக ஓடிப் போய் பார்த்தாள். மாமியார் தான் கொட்டகையில் சாணியை எடுத்து விட்டு சுத்தமாக பெருக்கிக் கொண்டிருந்தாள். பூத சரீரமாக இருந்தது. காற்றுப் போன பலூன் மாதிரி சுருங்கி ஒற்றை சரீரமாக ஆகியிருந்தது. முகமெல்லாம் தளர்ந்து அடித்துப் போட்டாற் போல வேதனை கை, கால், முகம் சுருங்கி, தலை இன்னும் நரைத்து, மாமியாரைப் பார்த்து ஸ்தம்பித்தாள். எப்படி இருந்தவள் இந்த மாதிரி ஆகி விட்டாள் மனதிற்குள் பச்சாதாபம் எழுந்தது. 'பாவம் ராணி மாதிரி இருந்தவள் இன்று இப்படி ஆகி விட்டாள்.'

"அம்மா" குரல் எழும்ப மறுக்க சற்று வலுக்கட்டாயமாக கூப்பிடுகிறாள்.

"யாரு" கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தாள் மாமியார். சொர்ணத்தை உண்மையிலேயே அவளுக்கு அடையாளம் தெரியவில்லை.

"யாரு நீங்க யாரு வேணும்?"

"உங்க மாட்டுப் பெண்... சொர்ணம்" என்று ஆரம்பித்த போதே மாமியார் ஓ வென்று கத்தினாள்.

"அந்த தறுதலையைப் பற்றி பேசாதீங்க. நான் இப்படி குட்டிச்சுவர் ஆனது அந்த ராட்சசியால் தான். அந்த ராட்சசிகிட்டே ஜாக்கிரதையாக இருந்திருக்கணும். அலட்சியமா இருந்ததால பிள்ளைகளையும் ஒட்டிகிட்டு போயிட்டா. படுபாவி, நல்லா இருப்பாளா? இப்படின்னு தெரிஞ்சிருந்தா அன்னிக்கே அடிச்சு விரட்டி இருப்பேன். ஒருத்தனுக்கு ரெண்டு

MITHRAVINDA 007



பேரோடையா இருப்பா. பிள்ளைங்க அப்பாவிங்க. படுபாவி எப்படி எல்லாம் உபயோகப் படுத்திக்கறாளோ. சீரழிஞ்சுதான் போயிடுவா."

கைகளை நெட்டி முறித்து சாபம் தருகிறாள். வைது தீர்த்தாள். சொர்ணாவிற்கு பேச்சே எழவில்லை. தன்னைப் பற்றி தப்பாகவே நினைத்துக் கொண்டிருக்கிறாள். என்ன தான் நான் அவளின் வேண்டாத மருமகள் என்றாலும் இப்படியா என்மேல் பழி போடுவது? ராட்சசி, பிசாசு என்று கத்தி கத்தி கதறி தீர்த்துக் கொண்டிருந்தாள். சொர்ணம் வாயைத்திறக்காமலேயே திரும்ப யத்தனித்தாள். வாசு சொன்னது நிஜம். மனசு கோணலாகிப் போனவள் கிட்டே போய் பாசம், பரிவுன்னு எதிர்பார்க்கறது வேஸ்ட். இவளே மாறினாலொழிய இவளை யாரும் திருத்த முடியாது. எதையாவது செய்ய வேண்டும் என்று மனம் துடிக்க, மாமி உங்க பிள்ளை கொடுத்து அனுப்பிச்சார்." சட்டென்று கைப்பையில் இருந்து கத்தை ரூபாய்களை எடுத்து நீட்ட

"நீங்க யாரு பெரியவனா பணம் கொடுத்தான்? புதுசா வந்தவாளா? நீ நன்னா மகராசியா இருடீம்மா அவன் எப்படி இருக்கான்? ஏன் அம்மாவைப் பார்க்கக்கூட வர்றதில்லே." கத்தை நோட்டுகளை ஆசையாக வாங்கியவள் "காபி சாப்பிடறேளா? என்பையன் புதுசா சேர்த்துண்டு இருக்கானே அவாதானே நீங்க? "ஆமா" என்றவள் "நான் வரேன் மாமி" நிற்காமல், எதுவும் பேசாமல் திரும்பித்தான் விட்டாள். வீடும் வாசலும் போட்டது போட்டபடி இருந்தன. என்ன தான் மாமியார் மாய்ந்து மாய்ந்து பெருக்கினாலும் அன்று வாசு வைத்திருந்ததில் ஒரு கால் பங்கு கூட இப்போது இல்லை. அன்று வீடே என்ன நேர்த்தியாகச் சுத்தமாக கண்ணாடி போல் மின்னிக் கொண்டிருந்தது. சீனுவின் கைப்பக்குவம் இல்லாமல் மாமியார் பாதியானது போல் தோன்றியது. அங்கே போய் வந்ததிலிருந்து மனம் இன்னும் வேதனைப்பட்டது.

'ராணி மாதிரி இருந்தவளை நடுத்தெருவுக்கு கொண்டு வந்து விட்டோமே. தான் வெளியேறினது சரி என்றாலும் என்

மச்சினர்களை தன்னோடு அழைத்து வந்தது தவறு தான் அவர்களும் ஒடுக்கப்படாமல் இருந்திருந்தால் வந்திருப்பார்களா என்ன? எதுவாக இருந்தாலும் தெரிந்தோ, தெரியாமலோ தான் அந்த குடும்பம் அழிய காரணமாகி விட்டோம்.' மனதில் பெரிய பாறாங்கல் போட்டு அழுந்துவதைப் போல் உணர்ந்தாள்.

காலங்கள் மாறித்தான் போய்விட்டன. சொர்ணம் முப்பத்திரெண்டு வயதை எட்டிக் கொண்டிருந்தாள். முப்பத்தி ரெண்டாவது வயதில் கை படாத ரோஜவாக மின்னினாள். இன்னும் பதினெட்டு வயது சிறுமியாக கன்னங்கள் குழி விழ பார்ப்பவர்கள் பிரம்மிக்கும் அழகோடு அற்புதமாக இருந்தாள் சொர்ணம்.

சீனுவிற்கு வழக்கம் போல் சமையல் வேலை, வாசுவிற்கு தோட்ட வேலை. சொர்ணம் இன்னும் ஜட்ஜ் வீடு, பேங்க் வீடு என்று சமையலுக்குப்போய்க் கொண்டிருந்தாள். ஓய்வு நேரத்தில் அப்பளம், வத்தல் என்று சொந்தமாக போட்டு விற்பனை. ஊறுகாய், ஜாம், ஜூஸ் என சொர்ணம் கை பட்ட எதுவுமே விற்று விடுகிறது.

இந்த பதினாறு வருடத்தில் ஊரே எப்படி மாறிவிட்டது? ஸ்வீட் காரம் என்று சீனுவுடன் சேர்ந்து செய்து எதையும் விற்றாள் ஆங்காங்கே மழைக்கு முளைத்த காளானைப்போல் கடைகளும், தீப்பெட்டியைப்போல் வீடுகளும் அவள் தெரு என்று நம்பமுடியாத அளவில் கடைகளும், வீடுகளுமாய் அமர்க்களப்பட்டது.

அன்று முதல் கிரிக்கு பத்தாவது பரீட்சை ஆரம்பம். இந்த பதினைந்து நாளாக படித்து படித்து களைத்துப் போயிருந்தான். சீனு தான் பாவம் ராத்திரி எல்லாம் கண் விழித்து டீ போட்டுக்கொடுத்து 'படிடா ராஜா இதுல பர்ஸ்ட் வரணும்'னு ஊக்கப்படுத்திக்கொண்டே இருந்தான். வாசு காய்கறி விற்ற ரூபாயை மன்னியிடம் கொடுத்தது போக தன் செலவுக்கு என்று வைத்திருந்த காசில் ஒரு நல்ல சைக்கிளை கிரிக்கு வாங்கிக் கொடுத்தான்.

MITHRAVINDA 007



அன்று முதல் பரீட்சை ஆரம்பம். படிப்பதற்காக விட்டலீவு மொத்தமும் கண் விழித்து படித்து களைத்திருந்தான் கிரி.

"கிரி பெருமாளை நமஸ்காரம் பண்ணிட்டுப் போ."

"சரிம்மா" அம்மாவைப்போல் சிவப்பு சுறுசுறுப்பு பணிவு அப்பாவைப்போல் படிப்பில் புலி இத்தனையும் கொண்டிருந் தான் கிரி. எது இருக்கிறதோ, இல்லையோ எதனையும் அட்ஜஸ்ட் செய்யும் பாங்கு, பெரியவர்களிடம் மரியாதை, வலிய வந்து உதவி செய்யும் மனப்பான்மை இதெல்லாம் தான் கிரி. படிப்பு விளையாட்டு எல்லாவற்றிலும் இவன் தான் முதல். பெருமாளை சேவித்துவிட்டு அம்மாவின் கால்களில் விழப்போக.

"உன் கண்ணெதிரே இருக்கும் இரண்டு தெய்வங்களின் காலில் விழு. அம்மா கூட அப்புறம் தான்டா" என்றாள். இரண்டு சித்தப்பாக்களின் கால்களில் விழ.

"என்னப்பா இதெல்லாம?" பதறிப் போகிறார்கள்.

"நீங்க ஆசீர்வாதம் பண்ணாத்தான் நன்னா எழுதுவேன்" கண்கள் குளமாக அணைத்துக் கொண்டனர்.

"நன்னா எழுதிட்டு வாடா கண்ணு" பின் அம்மாவின் கால்களிலும் விழ, "நன்னா எழுதிட்டு வாடா" என்கிறாள்.

சிறிது நேரம் அவன் போவதையே வாஞ்சையோடு பார்த்துக் கொண்டிருந்த வாசு மெதுவாக ஆரம்பித்தான்.

"மன்னி நானும் சீனுவும் ஒரு யோசனை பண்ணி வச்சிருக்கோம் அதை உன்னண்டை சொல்லணும்."

"என்னப்பா?"

"இல்லை இப்ப கீழே ஒரு போர்ஷனும் மாடியில ஒரு போர்ஷனும் தான் இருக்கு. இந்த பக்கம் காய்கறி தோட்டத்துக்கு அப்படியே இருக்கட்டும். பின்பக்கம் இன்னும் ரெண்டு போர்ஷனும் மாடியிலே நாலு போர்ஷனும் கட்டினால் என்ன? "ஓ கட்டலாமே" சொர்ணம் சொல்ல.

"என்ன மன்னி விளையாடறேளா? ஆறு போர்ஷன்னா சும்மாவா? எத்தனை லட்சம் எடுத்து வைக்கணும் தெரியுமா?" சீனு கேட்க.

"எனக்கு தெரிஞ்ச கட்டிட மேஸ்திரி ஒருத்தன் இருக்கான். அவனை வச்சண்டா சிக்கனமாகவும் முடிக்கலாம். சீக்கிரமும் முடிக்கலாம். முதல்லே கீழே முடிச்சுரலாம். அப்புறம் மேலே கட்டலாம் என்ன சொல்றேள்?"

சொர்ணம் யோசித்தாள். எப்போதோ கடனை உடனை வாங்கி கட்டிய வீடு இன்று ஆயிரம் ரூபாய் தருகிறது. இவன் சொல்வது போல் கட்டி விட்டால் வருகிற வாடகையை பேங்குலே கட்டி விடலாம். அட்வான்ஸ் வேறு வருமே. கட்டிவிட முடியாதா? ஒருவேளை அகலக்கால் வைக்கிறோமோ. மனதின் ஒரு பகுதியில் லேசான பயம் எழுந்தது. அகலக்கால் வைத்து இருப்பதும் போய்விடுமோ?

9



இந்த முறையும் முதலில் இரண்டு லட்சம் கடன் வாங்கினாள் சொர்ணம். இதை வைத்துக்கொண்டு பின் பக்கத்தை முடித்துவிட்டு பின் மாடியை பார்க்கலாம் என முடிவு செய்தாள் நினைத்த மாத்திரத்தில், நினைத்த நேரத்தில், நினைத்த காரியம் எத்தனை பேருக்கு நடக்கிறது சொர்ணத்திற்கு அதிர்ஷ்டம்தான். மள மள வென்று கீழ் பகுதி எல்லாம் முடிந்து சிமெண்டு கூட யாரோ தெரிந்தவரிடம் கண்ட்ரோல் ரேட்டில் வாங்கி கொடுத்தான் வாசு. வாசு, சீனு இரண்டு பேரும் ஆளுக்கொரு வேலை செய்து சீக்கிரம், சீக்கிரம் என்று

MITHRAVINDA 007



உஷார்படுத்தி கீழ் பகுதி மொத்தமும் முடிந்தது இன்னும் ரெண்டு குடித்தனத்திற்கு வாடகை ஏற்பாடாயிற்று. வருகிற வாடகையை ஒழுங்காக பேங்கில் கட்டி வீட்டிற்கு வாங்கிய அட்வான்ஸ் தொகையையும் ஒழுங்காக பேங்கில் கட்டி அது போதாதென்று இன்னும் அதிக வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து மூன்று பேருமே கடனை அடைக்க பாடுபட்டனர்.

நல்ல காலம் என்று வரும்போது எல்லாமே நல்லதாகத் தானே நடக்கும். கிரி பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதலாவதாகவும் தமிழ் நாட்டிலே மூன்றாவதாகவும் வந்தான். சொர்ணத்திற்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. வாசுவும், சீனுவும் என்னவோ தாங்களே தேர்வில் முதல் வந்தது போல் குதித்தனர். பேப்பரில் பேர் வந்தது. டிவியில், ரேடியோவில் அவன் பேட்டி வந்தது. பேட்டியிலும் தன் முதன்மைக்கு காரணம் தன் தாயும், தன் இருசித்தப்பாக்களும் என்று குறிப்பிட மறக்கவில்லை அவன். சீனுவையும், வாசுவையும் உலகம் மரியாதையோடு பார்த்தது. சில தனியார் டிவிக்கள் அவர்களையும் பேட்டி கண்டது. சொர்ணம் சந்தோஷத்தின் எல்லையில் இருந்தாள். தான் பட்ட கஷ்டத்திற்கெல்லாம் கடவுள் ஒரு வழியைச் சொல்லி விட்டார், விடிவை காட்டி விட்டார். இத்தனை கால கஷ்டத்திற்கும் பலன் கிடைத்தது போன்ற ஒரு உணர்வு. வாசுவை அழைத்துக் கொண்டு போய் பிளஸ் டூவிற்கு அப்ளை செய்து விட்டு வந்தான் கிரி. சீனு உள்ளே இனிப்பு செய்து கொண்டிருக்க, கொல்லைப் புறத்தில் சொர்ணம் துணிகளை அலசி பிழிந்து காயப் போட்டுக் கொண்டிருந்தாள். வாசலில் யாரோ ஒருவர் வந்து நிற்க, ஏதோ பேப்பர்களை புரட்டிக் கொண்டிருந்த கிரி நிமிர்ந்து பார்த்தான்.

"சித்தப்பா வாசு சித்தப்பா... யாரோ வந்திருக்கா." குரல் கொடுத்து விட்டு மறுபடியும் புத்தகத்தில் மேய, வந்தவர் நேராக கிரியிடம் வந்தார்.

"நீ தான் கிரியா?" சட்டென்று அணைத்து தலையில் முத்தமிட, கிரி ஆச்சரியப்பட்டான்.

"தமிழ் நாட்டிலேயே மூன்றாவதாக வந்திருக்கிறயாம்மே. பெருமையாயிருக்கு. பிளஸ் டூவில் பஸ்ட் வரனும்." கன்னத்தை வழித்து, தலையை தடவி முத்தமிட்டு ஒரு நூறு ரூபாயை கையில் தர, வாங்க மறுத்தான்.

"என்னடா கண்ணு. நான் கொடுத்தா வேணாம்னு சொல்றது? இந்தா நான் யார் தெரியுமா?" சொல்ல வாயைத் திறப்பதற்குள் வாசு வந்து நிற்கிறான். வந்தவரைப் பார்த்து திகைத்துப் போய் நிற்கிறான்.

'இவன் எங்கே இங்கே வந்தான்?' மனதில் எண்ணியவாறே "மன்னி மன்னி" என்று கத்துகிறான்.

"என்னடா இப்படி கூச்சல் போடறே? மன்னி பின்னாடி வேலையா இருக்கா. என்ன வேணும்?" இனிப்பை கிளறும் கரண்டியைக் கையில் ஏந்தியவாறே சீனு வருகிறான்.

"என்னடா மூணாம் பேஸ்து அடிச்ச மாதிரி நிக்கறே. என்னாச்சு?" கேட்டுக் கொண்டே வந்தவனின் கண்களில் வந்தவர் மேல் படிய திகைத்துப் போகிறான். குரல் எழும்பாமல் பார்க்கிறான்.

"என்ன கண்ணா பார்க்கறே நான் தான் உங்க அப்பா." என்றவாறே நூறு ரூபாயை கிரியின் சட்டையில் வைக்க கிரி வெறித்துப் பார்க்கிறான்.

"என்னடா குழந்தைக்கு சித்தப்பாக்களைத் தெரியும் அப்பனைத் தெரியாதா? அதைக் கூடவா சொல்லிக் கொடுக்கலை. ரெண்டு பேரும் சேவியர் ஆப் காட் மாதிரி பேட்டி எல்லாம் கொடுத்திருக்கீங்க. ஒருத்தன் கூடவா இவனுக்கு அப்பன் யாருன்னு கேக்கலை? ஆச்சரியமா இருக்கே." வாசு விறுவிறுவென்று பின் கட்டிற்கு ஓடிப் போனான். மன்னியால் தான் இவனை டீல் பண்ண முடியும்.

"உனக்கு என்ன வேணும்? ஏன் இங்கே வந்தே?" அவன் கேட்க, கேட்க.



"இதென்னடா இது கதையா இருக்கு? இத்தனை நாள் என் ரத்தம்னு நினைச்சதை என் கண்ணுலே கூட காட்டலே. இப்ப தானே பையனையே பார்க்கறேன்." சொல்லும் போது லேசாக கண் கலங்குகிறான்.

"உறவு சம்பந்தம்னு பேசிண்டு இங்கே வந்தியான்னா ஒரு கொலை தான் விழும்." சீனு உறும, "என்னடா சப்பாணி, எம் பொண்டாட்டியோட கொழுப்பா உன்னை இப்படி பேச வைக்குது?"

"கொழுப்பா உனக்கா? எனக்கா? பதினெட்டு வயசலே உன்னை நம்பி கழுத்தை நீட்டின பெண்ணை நிராதரவா விட்டது யாரு? வயிறும், பிள்ளையுமா இருந்தவளை அடிச்சு துரத்தாத குறையா துரத்தினது யாரு?" சீனு ஆத்திரத்தில் கொதிக்க.

"ஓ உனக்கு இந்த அளவுக்கு. வாய் கொழுப்பு ஏறிப் போச்சா? அவ இத்தனை இடத்தை கொடுத்து வச்சிருக்காளா?"

"டேய் இத்தனை நேரம் பெரியவங்கன்ங்கறதுனால தான் உங்ககூட பேசினேன். வெளியே போடா." இதற்குள் சொர்ணம் வர, "வாடி என் பெண்டாட்டி.. பின்னாடியே ஒருத்தனா?" வெகு நாள் கழித்துப் பார்க்கும் உறவு இவனை மறுபடியும் சந்திப்போம் என்று கனவிலும் நினைக்கவில்லை.. இவன் எங்கே இங்கே? என்னடி என்னைப் பார்த்தவுடனே மலைச்சிட்டே?"

"எங்கே வந்தீங்க?"

"இதென்ன தமாஷா இருக்கு. சொந்த புருஷனை எங்கே வந்தேன்னு கேக்கறே?" சொர்ணம் தன் கணவனையே உறுத்துப் பார்க்கிறாள். 'என்ன தைரியம். என்ன திமிர். என் வாழ்க்கையையே கெடுத்துட்டு இப்ப எத்தனை அலட்சியமான பேச்சு.'

"என்னடி வாயை அடைச்சுப் போச்சா? கள்ள புருஷனை வச்சகிட்டா அப்படித்தான். சொந்த புருஷனே கையும் களவுமாக கண்டுபிடிக்கும் அவலம் யாருக்காவது வருமா?" அவன் சொல்லி முடிக்கவில்லை 'டேய்' என்று அவன் மேல் பாய்ந்தான்

MITHRAVINDA 007

வாசு. "அன்னிக்கே உன்னைக் கொன்னு போட்டிருக்கனும். மன்னி மூஞ்சிக்காக விட்டேன். இனிமே யாருக்காகவும் கவலை இல்லை." அண்ணனின் சட்டையை கொத்தாக தூக்கி ஒரே குலுக்காக குலுக்க.

"வேண்டாம் வாசு விட்டுடு." சொர்ணம் தடுக்கிறாள்.

"தடுக்காதீங்க மன்னி. இவனை கொன்னாத்தான் என் ஆத்திரமே தீரும். நான் ஜெயிலுக்குப் போனாலும் பரவாயில்லை."

"பாத்தியா உணர்ச்சி வசப்பட்டா பின் விளைவுகளை யோசிக்க முடியுதா? நீ போயிட்டா அப்புறம் என் நிலமை. நீ இல்லாம இருக்க முடியுமா? சாக்கடையிலே கல்லைப் போட்டு பார்த்தா நமக்கு தான் அசிங்கம்."

"என்னடா என்னையே அடிக்கற அளவுக்கு துணிஞ்சிட்டியா? உங்க அழகான மன்னி பேசினாளே இதுக்கு என்ன அர்த்தம் சொல்லு. நீ இல்லாம இருக்க முடியாதா?"

"ஆமாம் உண்மையைத்தானே சொன்னேன். இவா இல்லைன்னா நானும் என் பிள்ளையும் நடை பிணமாயிடுவோம். இவா இல்லாம எங்களாலே ஒரு நாள் கூட வாழமுடியாது. என்ன பண்ணுவேள்?"

"ஏண்டி என் பிள்ளையையும் சேர்த்துக்கறே? உனக்கு மட்டும் இந்த இரண்டு தடியன்களும் தேவைன்னு சொல்லு. ஒருத்தன் பத்தலையா உனக்கு?" ஆண்டாண்டு காலமாக ஆண்கள் சொல்லும் வசனம் தான். ஒரு நிமிடம் கண் கலங்கியது. அடுத்த நிமிடம் ஆணித்தரமாக சொல்லுகிறாள்.

"ஆமாம் எனக்கு ரெண்டு பேரும் வேணும்" அழுத்தம் திருத்தமாக சொல்லுகிறாள். "உன்னாலே என்ன முடியுமோ செய்துக்கோ." என்கிறாள்.

"அடிப்பாவி இந்த வயசுலேயும் இப்படி சீரழிஞ்சு உடம்பை சிக்குன்னு வச்சிருக்கே. அதான் இப்படி துடிக்கறானுங்க."

MITHRAVINDA 007



"மன்னி இங்க ஒரு கொலை விழறதுக்கு முன்னே அவனை வெளியே போகச் சொல்லுங்க." வாசு கத்துகிறான்.

"போறேன் என் குழந்தையை அழைச்சுகிட்டு போறேன். வாடா ராஜா இந்த கேடு கெட்ட வீட்டுலே இருந்தா என் குழந்தை வாழ்க்கைதான் கெட்டுடும்."

"வாடா ராஜா" கிரியின் கையை இழுத்துக் கொண்டு நடக்க.

"விடு" என்றவாறே "அம்மா" என்று அலறுகிறான் கிரி. வாசு, சீனு இருவருமே அண்ணனின் பிடியிலிருந்து கிரியை விடுவிக்க.

"வாசு இவனை அழைச்சுண்டு உள்ளே போ." சொர்ணம் கத்த. வாசு கிரியை அழைத்துக் கொண்டு போகிறான்.

"வெளியே போ" கணவனை வெளியே போகச் சொல்ல.

"என் பையனைக் குடுடி"

"என் பையனா? அதுக்கு நீ அப்பாவா? யார் சொன்னா? வெளியே போ."

"இதுக்கு நீ அனுபவிப்பே." அவன் கத்திவிட்டு வெளியே போக. இடிந்து போய் உட்கார்ந்தாள். சொர்ணம்.

'இத்தனை வருடங்கள் இல்லாத இது என்ன புதிதாக சொந்தம்' 'இத்தனை நாட்கள் இருக்கிறாளா. செத்தாளா என்று பார்க்கவில்லை. இப்போது ஏன் இந்த புது உறவு? தன் மகன் தான் காரணம் சொர்ணத்திற்கு புரிந்தது. அவன் மாநில அளவில் சிறந்த மாணவனாக வந்தது ஒரு காரணம். பேப்பரிலும் டி.வி.யிலும் ரேடியோவிலும் அவன் பேட்டியும் படங்களும் வந்தது இன்னொரு காரணம். பிள்ளை உயர்ந்து விட்டான் என்றதுமே தந்தைக்கு நெஞ்சு அடித்துக் கொள்கிறது போலும். சாதாரணமாக பிள்ளையை பார்த்துவிட்டுப்போனால் அவள் தவறு என்று வாதிக்க மாட்டாள். தன் குழந்தையின் தந்தை அவன். குழந்தையைப் பார்த்துவிட்டோ. பேசிவிட்டோ போகட்டும். ஆனால் அந்த நோக்கத்திலா வந்திருக்கிறான்.

மகனின் பெயரில் தன் பெயர் ஒட்டிக் கொள்ள ஆசை. பையனின் தகப்பனார் என்று பிரபலப்பட வேண்டுமென்றால் பிரபலபட்டுக் கொள்ளட்டுமே அதற்காக தன்னையும் தன் மூத்த குழந்தைளையுமா கொச்சைப்படுத்துவது. சே! எத்தனை கேவலமானவன் இத்தனை நாட்கள் பழகுகிறாள். ஒரு நாள் கூட சீறு வாக, தப்பாக பேசியதாகவோ, பார்த்ததாகவோ தெரிய வில்லை. ஏன் தப்பாக நினைத்தே கூட இருக்க மாட்டார்கள்? கொஞ்சம் கூட கள்ளம் தோன்றாத உள்ளங்கள். அவர்கள் இரத்தம் தானே தன் கணவன் உடலிலும் ஓடுகிறது அவனுக்கு மட்டும் ஏன் இந்த ஈன புத்தி? மனது வேதனைப்பட்டது. எப்படி கூசாமல் சொல்லிவிட்டுப் போகிறான். உழைப்பைத் தவிர வேறு எதுவுமே தெரியாத தம்பிகளிடம் என்ன பேச்சு பேசுகிறான். பாவம். இந்த பேச்சக்களினால் எப்படி எல்லாம் துடிக்கறது களோ? சொந்த அண்ணன் இப்படி சொல்லி விட்டானே என்று இருவருமே துடித்துப் போயிருப்பார்கள். பாவம் சே. அம்மாவும் பிள்ளையுமே ஒரே ரகம். அவளுக்கும் மனசாட்சி இல்லை. பிள்ளைக்கும் இல்லை. அவளும் தன்னைப் பற்றி தரக் குறைவாகத்தான் பேசுகிறாள். பிள்ளையும் அப்படியே தன்னைப் பற்றியாவது பரவாயில்லை. வெறும் இரண்டு மாதம் அவனுடன் வாழ்ந்தவள். அவனின் அன்பை எதிர்பார்க்க முடியாது ஆனால் கூடப் பிறந்த தம்பிகள் அண்ணா. அண்ணா என்று வேலை செய்தவர்கள். 'அண்ணனே உலகம்' என்று வாழ்ந்தவர்கள். தன் தேவைகளை சுருக்கிக் கொண்டு அண்ணனே சுகம் கண்டு விட்டு இன்று பல நாட்களுக்குப் பிறகு பார்க்கும் தம்பிகளை 'எப்படி இருக்கிறாய்?' என்று ஒரு வார்த்தை கேட்கமுடியவில்லை. இவனெல்லாம் என்ன அண்ணன்? பாவம் என்னென்ன வார்த்தைகளை கொட்டி விட்டு போயிருக்கிறான்.

இதனையே நினைத்து, நினைத்து நெஞ்சம் மறுகியது. தம்பிகளை எப்படி இருக்கிறாய்? என்று கேட்கவில்லை. 'தன்னைக் கூட விசாரிக்கவில்லை.' இத்தனை நாட்கள் கட்டிக் காத்த இளமை விழித்துக் கொண்டது போல் ஒரு உணர்வு

MITHRAVINDA 007



பதினெட்டு வயதில் பந்தங்களை ஒரு வைராக்கியத்தோடு வேண்டாம் என்று ஒதுக்கியவள். தான் பெண் என்பதையே மறந்தவள். இப்போது தனக்கும் கணவன் ஒழுங்காக இருந்திருக்கக்கூடாதா? கணவனின் அரவணைப்பு கிடைக்காதா? மனது ஏங்கியது. எத்தனையோ வெற்றி, தோல்விகள் எல்லாம் பார்த்தாகி விட்டது. தோல்வியில் தோளில் விழுந்து அழ ஒரு ஆளில்லை. வெற்றியில் கணவனின் மார்பில் சாய்ந்து கொண்டாட கணவன் இல்லை. கணவன் என்பதன் அர்த்தம் என்ன? எத்தனை ஆசையாக, எத்தனை அனுசரணையாக எத்தனை எதிர்பார்ப்புடன் அவனுக்கு தோள் கொடுக்க வேண்டும் என்றல்லவா தான் துடித்துக் கொண்டு வந்தோம். அவன் விட்ட மூச்சுக் காற்றைக் கூட அல்லவா தான் நேசித்தோம். தன் அன்பு அவனை ஏன் வசப்படுத்தவில்லை? தன் மேல் பாசம் காட்ட ஏன் தோன்றவில்லை? தானும் ஒரு மனுஷி என்று நினைக்க ஏன் மறந்தான்? தன்னுடைய ஆசைக்கும். இச்சைக்கும் அல்லவா அவளை பயன்படுத்திக் கொண்டான். அவனுடைய ஆசையை பூர்த்தி செய்தாளே என்ற பச்சாதாபம் கூட அவனிடம் இல்லை. இரண்டுமாதத்தில் அவள் சுவித்தபோது எப்படி எல்லாம் கேவலமாக நடத்தினான். 'எங்கே போகிறான். எப்போது வருவான்' என்று எப்போதுமே சொன்னதில்லை. மனைவி தனக்காக சாப்பிடாமல் பட்டினி கிடப்பதைப் பார்க்க ஒரு சந்தோஷம். 'ஏன் வரவில்லை? ஏன் வரவில்லை' என்று மனைவி மனதிற்குள் கிடந்து துடிப்பதைப் பார்க்க ஒரு ஆனந்தம். மனைவிதான் அம்மாவின் வாயில் விழுந்து வாங்கும் போது தோன்றும் ஒரு குரூரம். எல்லாவற்றிற்கும் மேல் இவளும் ஒரு பெண், இவளும் ஒரு மனுஷி, இவளுக்கும் மனது என்று ஒன்று இருக்காதா? நினைத்துப் பார்க்க மறந்தவன்.

இனிமேல் அவனுடைய சொந்தத்தையோ. அவனுடைய நிழலைக்கூட தான் தீண்டப் போவதில்லை. இருந்தாலும் இத்தனை வருடங்களாக தோன்றாத நினைப்பு இப்போது தோன்றியது. தான் இழந்து விட்ட வாழ்க்கையை நினைத்து

அழுதாள். கணவனின் துரோகத்தை நினைத்து அழுதாள். கணவனின் வார்த்தைகளால் துடித்துப் போகப் போகும் மச்சினர்களை நினைத்து அழுதாள். என்னை ஏன் ஒரு பெண்ணாக படைத்தாய்? நினைத்து, நினைத்து அழுகிறாள்.

"அம்மா ஏம்மா அழறே?" தன் கண்களை துடைத்தவாறே மகள் கிரி. "ஒண்ணுமில்லேப்பா" என்றவள் கண்ணீரை அழுந்தத் துடைத்துக் கொண்டாள். 'இது என்ன பயித்தியக் காரத்தனம்? நான் ஏன் உணர்ச்சி வசப்பட்டேன்? இத்தனை நாட்கள் இல்லாத இது என்ன புது வழக்கம்?' மனதை சமாதானப் படுத்திக் கொண்டு. "என்ன கண்ணா வேணும்?" என்கிறாள்.

"அம்மா நான் ஒண்ணு கேப்பேன் பதில் சொல்வியா?"

"கேளேன்."

"என் அப்பா யாரும்மா" பையன் கேட்க, அதிர்ந்து போகிறாள்.

10



"ஏம்மா பதில் பேச மாட்டேங்கறே! இங்கே வந்தாரே அவர் தான் அப்பாவா?"

சொர்ணம் மௌனமாக "அவள் கிட்டேதான் இது உங்க பையன் இல்லேன்னு சொன்னியே" சொர்ணம் பெருமூச்சு விட்டாள்.

"அது சும்மா. அவர் தான் உங்க அப்பா." மெதுவாக ஆனால் அழுத்தமாக சொல்கிறாள். பையனிடம் இனிமேல் உண்மையை மறைத்து பிரயோசனம் இல்லை.

MITHRAVINDA 007



"பின்னே ஏம்மா அப்பா இல்லேன்னு சொன்னே?"

"வந்தவர் சண்டை போட்டார் இல்லை. அதான்."

"அதுக்காக ஏம்மா இப்படி சொன்னே?" பிள்ளை முதன்முறையாக தன்னை கேட்கிறது. உள்ளுக்குள் ஒரு நிமிடம் அதிர்ந்து போனாலும், அதிர்ச்சியை வெளியே காண்பித்துக் கொள்ளவில்லை. இதற்குள் வாசு உள்ளே வந்து விட்டான்.

"ஏய் கிரி என்ன இது? அம்மாவண்டை என்னென்னவோ கேட்டுண்டு இருக்கே? இதெல்லாம் தப்பு."

"இல்லை சித்தப்பா."

"நோ. எதையும் கேட்கக் கூடாது. பெரியவா காரணம் இல்லாம யாரும் எதையும் செய்யறதில்லே. அம்மா சொன்னாலும் புரிஞ்சிக்கற பக்குவம் உனக்கு இல்லை. அதுக்கான வயசும் உனக்கு இல்லை. அதுனால இப்ப இந்த டாபிக்கை விடு. என்ன சப்ஜெக்ட் எடுக்கப் போறேன்னு டிசைட் பண்ணிட்டயா? நாளைக்கு போய் அப்ளிகேஷன் இன்னும் இரண்டு ஸ்கூலுக்கு தரணும்."

சொர்ணம் வெகு நேரம் யோசித்தாள். பிள்ளைக்கும் வயதாகி விட்டது. இன்னும் மூடி மறைப்பதினால் பிரயோசனம் இல்லை. அன்று பிள்ளையை அழைத்து பக்கத்தில் உட்கார வைத்தாள். விலாவரியாக ஒன்று விடாமல் தான் நினைத்ததலிருந்து, கிடைத்த வாழ்க்கை வரை இப்போது இருக்கும் நிலமை வரை உண்மையை பிட்டு, பிட்டு வைக்க பிள்ளையின் கண்களிலும் கண்ணீர்.

"அம்மா நான் இருக்கேம்மா. உன்னை விட்டு போகமாட்டேம்மா." அம்மாவின் கண்ணீரை துடைத்தான் வாசு. இரண்டு பேரும் அலுத்துக் கொண்டார்கள். பிள்ளையிடம் சொன்னதில் சற்று மனப் பாரம் குறைந்தது. சற்று நிம்மதி கிடைத்தது சொர்ணத்திற்கு. ஊருக்கு போன கணவன் பிள்ளை தனக்கு வேண்டும் என்று கேஸ் போட்டு விட கேஸ் போட்டு இரண்டு வருடங்கள் ஆகி விட்டது. வாசு தான் அனைத்தையும்

கவனித்துக் கொண்டிருக்கிறான். இன்னும் கோர்ட், கேஸ், வீடு என்று அலைந்து கொண்டிருந்தான் வாசு. கிரி பிளஸ் டூவிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்று டாக்டருக்கு சேர்ந்து விட்டான். உதவிச் சம்பளத்திலேயே படிப்பு படிப்பிற்காக அம்மாவிற்கு ஒரு செலவும் வைக்கவில்லை கிரி. கடன் முக்கால் வாசி அடைந்த போது மறு படியும் லோன் போட்டு வாங்கி மாடி கட்ட ஆரம்பித்தாள் சொர்ணம். கட்டிடம் முடிக்கும் வரை ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பரம்பரையாகச் சுழன்றாள்.

கிரிக்கு ஹாஸ்டலில் இடம் கிடைத்து, கிரியும் ஹாஸ்டலுக்குப் போனான். லீவிற்கு என்று வீட்டிற்கு வரும் கிரி கூட விழுந்து விழுந்து வேலை செய்தான். ஒரு வழியாக மேல் பகுதியில் நான்கு போர்ஷன்களும் முடிந்த போது பூரித்துப் போனாள் சொர்ணம். வாடகையில் இருந்து ஒரு பகுதியைக் கூட தொடாமல் பேங்கில் கட்டி வருகின்றனர். அட்வான்ஸ் தொகையையும் அப்படியே கட்டி ஆகிவிட்டது. இன்னும் கொஞ்சம் வருடங்களாவது கட்டனும். 'அன்னக் காவடி' சொர்ணம் கூட மாடி வீட்டு சொர்ணமாகி விட்டாள். குடித்தனக் காரர்கள் எல்லாம் 'மாமி, மாமி' என்று மரியாதையோடு கூற, மரியாதைப் பட்ட மனுஷியாகிப் போனாள் சொர்ணம்.

பதினெட்டு வயது பெண்ணாக அபலையாக துரத்தப்பட்ட நான் இப்போது இந்த வீட்டின் சொந்தக்காரி. அந்த தெருவிலேயே அழகாக, நன்றாக, காற்றோட்டமாக கட்டப்பட்ட பல போர்ஷன்களை உடையதாக இருந்தது அந்த வீடு. மேல் போர்ஷனுக்கு ஆயிரம் ருபாய் வாங்கினாள் சொர்ணம். நல்ல விசாலமாகவும், இரண்டு, இரண்டு படுக்கை அறைகளோடு விசாலமாக கட்டப்பட்டு இருந்தது. அந்த போர்ஷன்களுக்கு பத்து மாத அட்வான்ஸ் வாங்கி முதல் கட்ட கடனை அடைத்தாள். இப்போது கடனாக வாங்கிய ஆறு இலட்சத்திற்கு வாடகைப்பணம் , தான் சம்பாதிக்கும் பணம் எல்லாவற்றையும் போட்டு கட்டுகிறாள். சீனுவும், வாசுவும் அவரவர்க்கு என்ன முடியுமோ போட்டுக் கட்டிக் கொண்டிருந்தனர். பிள்ளையின் டாக்டர் படிப்பும் ஆரம்பமாயிற்று.



"மன்னி இனிமே வீட்டிற்கு வேண்டிய சாமான்கள் வாங்கிப் போட்டால் என்ன?" சீனு ஆசைப்பட கறுப்பு, வெள்ளை டிவி, கலர் டிவி ஆகியது. கட்டில், மெத்தை என்று ஆளாளுக்கு ஒன்று செய்தார்கள். பிள்ளை வந்தால் படுக்க, படிக்க என்று தனி அறை. சீனு, வாசு, சொர்ணம் மூன்றுபேரில் வாசு வெளி வராண்டாவில் படுத்துக் கொள்வான். சீனு மாடியில் வெட்டவெளியில் தூங்குவான். அவனுக்கு அப்படி படுத்தால் தான் தூக்கம் வரும். சொர்ணம் ஹாலிலேயே ஒரு படுக்கை போட்டுக் கொண்டு உறங்குவாள். அழகான டைனிங் டேபிளும் வந்தது.

"மன்னி நீ கஷ்டப்பட்டது போறும். பேசாம வேலையை விட்டுட்டு நின்னுடேன்." என்றான் சீனு ஒரு நாள்.

"இதெல்லாம் போட்டுக்க மன்னி" ஒரு தடவை வாசு தான் வேலை செய்த பணத்திலிருந்து தங்க வளையல்கள் வாங்கி வர. "இனிமே எனக்கெதுக்கு வாசு?"

"அப்படி இல்லே மன்னி. நாளைக்கே கிரிக்கு கல்யாணம் ஆனா வெறும் கையோட ஒத்த வளையல் போட்டுக்கிட்டா நிப்பே." வாசு சொன்னால் சொன்னதுதான் கேட்கமாட்டான். 'தான் முடியாது, வேண்டாம் என்றால் குழந்தை மனம் சுருண்டு கொள்ளும். சொர்ணம் பதில் பேசாமல் ஒரு அழகிய டப்பாவில் வளையல்களை எடுத்து வைத்து உள்ளே தூக்கி பத்திரப் படுத்தி விட்டாள். பழையபடி பித்தளை வளையல் தான் அவளுக்கு. சிறு சிறு நகைகள் சீட்டு கட்டி வாங்கினாள். புடவை சீட்டு கட்டினாள். வரப் போகும் மருமகளுக்கு சேர்த்து வைத்தாள். அதோடு கூட பொது நலக் காரியங்களிலும் ஈடுபட்டாள். ஏழை பையன்களுக்கு படிப்பிற்கு பணம் கட்டினாள். புத்தகம் இல்லாத குழந்தைகளுக்கு புத்தச்கம் வாங்கி கொடுத்தாள். தீபாவளிக்கு அவள் துணி எடுத்துக் கொள்கிறாளோ, இல்லையோ ஏதானும் ஏழைக்கு நிச்சயமாக துணிமணிகள் உண்டு. இது மட்டுமல்ல, ஏழைப் பெண்களுக்கு மாங்கல்யம் கூட பண்ணிக் கொடுத்திருக்கிறாள் சொர்ணம். இன்னும் என்ன உதவி வேண்டும். செய்வதற்கு காத்துக் கிடந்தாள் சொர்ணம். மாமி என்று வந்து விட்டால் போதும், கேட்டு விட்டால் போதும் வாரி வாரி வழங்கும் வள்ளல்

MITHRAVINDA 007

தான். தன்னால் இயன்ற எல்லாவற்றையுமே செய்தாள். கணவனை விட்டுப் பிரிந்த சொர்ணம், வாழாவெட்டி சொர்ணம் என்ற பெயரே இப்போது இல்லை. 'சொர்ணம் மாமி' என்ற பெயர் நிலைத்துப் பிரபலமானது.

கணவனின் கேஸும் பிசுபிசுத்துப் போனது. இத்தனை நாட்கள் வரை திரும்பிக் கூட பார்க்காதது பற்றி ஜட்ஜ் அவர்கள் சாடு, சாடு என்று சாடி இவளுக்கு ஆதரவாக தீர்ப்பானபோது பர்வதம் மாமி மட்டுமல்ல, அந்த ஊரில் உள்ள எத்தனையோ பேர்கள் மகிழ்ச்சியில் திளைத்துப் போயினர். சொர்ணம் மாமிக்கு ஆதரவாகப் பேசினர்.

"மாமி ஜாதகம் வாங்கித் தாங்கோ." என்று ஒரு கூட்டம்.

"மாமி பையனுக்கு படிப்புக்கு ஏதானும் வழி செய்யுங்கன்னு" ஒரு கூட்டம். இந்த மாதிரி சொர்ணம் மாமியைத் தேடித்தேடி வந்து விடுவார்கள். அவளும் சளைக்காமல் முடிந்த வரை உதவி செய்வாள்.

"ஏம் மன்னி ஏதானும் கட்சி ஆரம்பிக்கப் போறியா என்ன? எங்கே பார்த்தாலும் உன் பேச்சு தான்." வாசு சொல்லி சிரிக்க.

"அப்படி இல்லேப்பா கஷ்டப்படறவா எத்தனையோ பேரு இருக்கா. எனக்கு கிடைச்சமாதிரி இத்தனை ஒசந்த குணமுள்ள உதவி செய்யற மச்சினர்கள் எத்தனை பேருக்கு கிடைக்கும்? ஒவ்வொருத்தரும் எத்தனையோ அடிபட்டு, மிதிபட்டு தானே மேலே வரணும். இப்ப நாம நல்ல நிலமையிலே இருக்கோம். அவா கஷ்டத்தை மொத்தமா தீர்க்க முடியலேன்னாலும் கை கொடுக்கறதுலே என்ன தப்பு? முதல்லே நம்ம தேவையை பூர்த்தி பண்ணிகிட்டோம். இனிமே அடுத்தவா தேவையையும் பூர்த்தி பண்ணலாமே. இதுலே நாம் என்ன கொறைஞ்சு போயிடப் போறோம்." சொர்ணம் சொல்ல, சொல்ல "மன்னி நெஜமாகவே நீ அம்மாவாக இருக்கத்தான் லாயக்கு. எத்தனை விசாலமான மனசு உனக்கு." சீனு மெய் மறந்து மகிழ்கிறான்.

"எதுக்குப்பா இந்த ஐஸ்?" சொல்லி சிரிக்கிறாள் சொர்ணம்.

MITHRAVINDA 007



பிள்ளை டாக்டர் படிப்பை முடிக்கப் போகிறான். இன்னும் இரண்டு வருடங்கள் மேற்படிப்பு படித்தால் அவனுடைய வாழ்க்கையும் நன்றாக ஓடிப் போய்விடும். அன்று தான் ஊரிலிருந்து வந்திருந்தான் கிரி. ஏதோ பறி கொடுத்தால் போன்று ஒரு தோற்றம். "என்னடா இது?" சொர்ணம் விசாரிக்க.

"ஒண்ணுமில்லைம்மா..." எதையோ மறைக்கிறான்.

"என்னடா?" மறைப்பதற்கு கூட விஷயம் இருக்கிறதா? மனதில் லேசான வருத்தம். பிள்ளை தன்னை யாரோ என்று எண்ணி ஏன் மறைக்க வேண்டும்? என்னவாக இருக்கும்?

"மன்னி கிரி ஏன் டல்லா இருக்கான்?" சீனு தான் கேட்கிறான். வாசுவும் சேர்ந்து கொள்ள, "என்னவோ கிரி டல்லா இருக்கிற மாதிரி தோணறது. கேட்டா மழுப்பறான். முன்னே இருந்த மாதிரி தோணலை. உங்களுக்கு எப்படி தோணறது?" வாசு சீனுவிடம் சொர்ணம் பொறிந்து தள்ள.

"அடாடா ஏம் மன்னி விஷயத்தை பெரிசாக்கறேள்? அவன் குழந்தைதானே. சில விஷயங்கள் நம்ம கிட்டே பேச வெட்கப் பட்டிருக்கலாம்."

அன்று மாலையே வாசு ஓடி வருகிறான். "அவனோட மாற்றத்திற்கு காரணம் நான் கண்டுபிடிச்சாச்சு."

"என்ன" என்றாள் சொர்ணம்.

"த. பாருங்க" ஒரு பெண்ணின் படத்தை காண்பிக்க, அதிர்ந்து போகிறாள் சொர்ணம்.

"பிள்ளை பெரியவன் ஆகிவிட்டான்னு இப்பத்தான் தெரியறது." என்கிறாள்.

"நீயே மத்ததையும் விசாரித்து சொல்விடு." சொர்ணம் சொல்ல.

"எல்லாமே ஆச்சு." என்கிறான் வாசு.

"எப்படி?" ஆச்சரியப்பட்டாள் சொர்ணா.

"நேத்து வாசு ரூமை கொடைஞ்சு போட்டோவை எடுத்து அவனை மிரட்ட எல்லாத்தையும் கொட்டிடுத்து" சீனு

சொல்கிறான். "சித்தப்பா நீதான் கல்யாணத்தை நடத்தி வைக்கணும்னு கால்ல விழுந்தானாம். மன்னி மாட்டுப் பெண் வரவேளை ஆச்சு. வாயைக்காண்பிங்க. சர்க்கரை போடறேன். அப்புறமா ஸ்வீட் சாப்பிடலாம்." சொர்ணத்திற்கு மலைப்பாக இருந்தது. நேற்று தான் கல்யாணம் முடிந்தது போல் இருக்கு அதற்குள் பிள்ளைக்கு கல்யாணமா?

என்ன தான் பிள்ளைக்கு கல்யாணம் ஆகப் போகிறது என்ற சந்தோஷப் பட்டாலும் பிள்ளை காதலிப்பதை தன்னிடம் ஏன் மறைக்க வேண்டும்? இதில் மறைப்பதற்கு என்ன இருக்கிறது? தான் அவனை வெறும் பிள்ளையாகவா நடத்துகிறேன். நண்பனாக அல்லவா நடத்துகிறேன். இருந்தும் என்னிடம் என்ன தயக்கம்? வாசுவிற்கும் சீனுவிற்கும் தன்னிடம் உள்ள நெருக்கம் கூட பிள்ளைக்கு தன்னிடம் இல்லை என்று முதல் முறையாகத் தோன்றியது.



## 11

அடுத்த ஒரு வாரத்திற்குள் போய் பெண்ணை பார்த்து விட்டு வந்து அடுத்த மாதத்தில் கல்யாணத்தையும் வைத்து விட்டாள் சொர்ணம். சொர்ணத்தின் அளவு நிறம் இல்லை. மா நிறம் தான். ஒரே பெண். எக்கச்சக்க சொத்து. பெண்ணைப் பெற்றவர்கள் இவர்களை விழுந்து, விழுந்து உபசரித்து அமர்க்களப் படுத்தி விட்டனர். பெண் பி.எஸ்.ஸி படித்திருந்தது. தன் விருப்பம், வெறுப்பு எதையும் சொர்ணம் லட்சியம் செய்யவில்லை. பிள்ளைக்கு பிடித்தால் ஓ.கே. பிள்ளை ஹௌஸ் சர்ஜன் முடித்து விட்டு தற்காலிகமாக பக்கத்தில் இருக்கும் கிளினிக்கில் வேலை செய்து கொண்டிருந்தான்.

MITHRAVINDA 007



மருமகள் வந்து ஒரு மாதம் ஆகி விட்டது. திருமணத்திற்கு கூட பிள்ளையின் அப்பாவைக் கூப்பிடவில்லை சொர்ணம். கிரி முதலிலேயே தன்னைப் பற்றி சொல்லியிருந்ததால் யாருமே தந்தை வராததை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

"இனிமே எதுக்கும்மா சமையல் வேலை. வேலையை விட்டுடும்மா." என்கிறான் கிரி அம்மாவிடம். "போடா ஓடி, ஆடி வேலை செஞ்ச உடம்பு சும்மா இருக்காது." என்கிறாள். ஆனால் பிள்ளை விடாது வற்புறுத்தவே வெளியே போகும் வேலைகளை விட்டு, விட்டு வீட்டிலிருந்தபடியே கடைகளுக்கு பொடிகள், இனிப்பு, காரம் என வேலைகளை ஆரம்பித்தாள் சொர்ணம். ஆறு லட்சம் கடன் வாங்கி கட்டியதில் இன்னும் மூன்று லட்சம் கடனுக்கு கட்ட வேண்டும். மருமகளுக்கு புடவை நகை என்று போட்டதில் பாங்க் லோன் அடிபட்டு போனது கொஞ்ச நாட்களாகவே வட்டி கட்டவே இல்லை. பெண்ணுக்கு இரண்டு வடம் செயின், வளையல் கொடி திருமாங்கல்யம், நெக்லஸ் என்று போட்டு இருந்தாள் சொர்ணம். இனிமே தான் பாங்க் கடனை கட்டணும்.

வருடங்கள் ஏற முதுமையும் வரத்தானே செய்யும். கொஞ்ச நாட்களாகவே மூச்சு விடுவதில் எதேதோ தகராறு சொர்ணத்திற்கு. இந்த சின்ன வயதிலேயே என்னவோ தள்ளாமை, முடியாமை. அடிக்கடி சோர்ந்து விடுகிறாள். வாசுவும், சீனுவும் "மன்னி, மன்னி" என்று உருகி, உருகி செய்கிறார்கள். இரண்டு நாட்களாக ஜுரம் வேறு அடிக்க கிழிந்த நார் போலக் கிடந்தாள் சொர்ணம்.

புதிய மருமகள் சுகுணா அப்படி ஒன்றும் மாமியார் மேல் பற்றுதல் கொண்டவளாக இல்லை. என்ன என்றால் என்ன தான். சொர்ணம் வாஞ்சையைக் காண்பித்தாலும் அவள் ஒரு அடி தள்ளியேதான் நிற்கிறாள், மாமியாருக்கு உடல் நிலை சரியில்லை என்றதும் அந்த அறைப்பக்கம் வரவே தயங்கினாள் சுகுணா. 'இது ஏதானும் வைரஸ் பீவரா இருந்து தொத்திண்டுடுத்துன்னா.' பயம் அவளுக்கு. என்ன தான் மாமியார் என்ற மரியாதை

இருந்தாலும் அதை ஒரு அளவிற்கு மேல் அவளால் தரமுடியவில்லை. தன் வீட்டு தரத்தோடு ஒப்பிட்டு பார்க்கும் போது இந்த வீடு எங்கோ இருக்கிறது. நல்ல மார்பிளில் இழைத்த பங்களா அப்பாவினுடையது. சதா போனும், காரும் வந்து போய்க் கொண்டிருக்கிற இடம். அப்பாவிற்கு சதா பார்ட்டி, டின்னர். அம்மா லேடீஸ் கிளப்புக்கு போய் விடுவாள். சமையற்கார பாட்டி ஒன்று வீட்டிலேயே இருந்தது. வேலைக்காரன் இருந்தான். வீட்டிலே தோட்டக்காரன், டிரைவர் என்று வேலை செய்பவர்களின் பட்டாளமே ஏராளம். குளிக்கும் அறையில் பாத்ரூம் டப்பில் அமர்ந்து மணிக்கணக்கில் குளித்துப் பழக்கம். இந்த வீடே கொஞ்சம் கூட ஒத்துக் கொள்ளவில்லை. சுகுணா வந்ததிலிருந்து ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போட்டதில்லை. தன் வீட்டில் தன் வேலைகளைக் கவனிக்கவே எக்கச்சக்க வேலைக்காரர்கள். வழக்கப்படி சீனுவும், வேலைக்குப் போகாததால் சொர்ணமும் வேலைகளை பகிர்ந்து கொண்டு கவனித்துக் கொள்கின்றனர். தான் மருமகளாக பட்டதெல்லாம் தன் மருமகள் படக்கூடாது. மருமகள் அவள் எனக்கு இப்படித்தான் ஆசையாக, வாஞ்சையாக பழகுகிறாள் சொர்ணம். பிள்ளை தினமும் ஆஸ்பத்திரியிலிருந்து வந்ததும் பெண்டாட்டியை அழைத்துக் கொண்டு எங்காவது கிளம்புவான். ஒரு நாள் அழைத்துப் போகாவிட்டாலும்.

"பாவம்டா. சின்னப் பொண்ணு. அழைச்சிண்டு போ." என்பாள் சொர்ணம். வேளாவேளைக்கு சாப்பாடு. தூக்கம் பின் டிரஸ் பண்ணிக் கொள்கிறேன் என்று அறையில் மணிக்கணக்காக வாசம். தன் மருமகளை நன்றாக வைத்துக் கொள்ள ஆசைப்பட்டது என்னவோ நிஜம். ஆனால் இப்படி இருக்கும் மருமகளை என்ன செய்வது? மனதில் புழுங்கினாலும் சொர்ணம் வாயே திறப்பதில்லை.

மருமகள் சதா சுடிதாரில் இருந்தது. பேண்ட், ஜீன்ஸ், பனியன் மாட்டிக் கொள்ளும். மாலை நேரங்களில் ஸீ துரு நைட்டியில் தான் பார்க்கலாம். காலை எட்டு மணிக்கு எழுந்து வந்தாலும்

MITHRAVINDA 007



பத்தரை மணி வரை அந்த நைட்டியிலே அலைந்து கொண்டு இருப்பாள். சீனுவும், வாசுவும் தேவையில்லாமல் மருமகள் முன் வருவதையே தவிர்த்தார்கள். பக்கத்து வீட்டு பார்வதம் மாமி கூட பொறுக்காமல் சொல்லி விட்டாள். "ஏண்டிம்மா நாலு குடித்தனம் இருக்கிற வீட்டுலே இது என்ன அசிங்கமா ஒரு டிரஸ்."

அன்றையிலிருந்து மருமகளுக்கு பார்வதம்மாளைக் கண்டாலே பிடிக்காது. தன் மாமியார் அவளோடு பேசுவது கொஞ்சமும் பிடிக்காது. மாமியாருடைய பிரண்ட் பார்வதம் மாமி என்பதால் மாமியாரிடமும் பேசுவதையே தவிர்த்தாள். ஒரு வார்த்தை, அரை வார்த்தை தான் பேச்சே.

தான் பட்ட கொடிய அனுபவமோ, என்னவோ சொர்ணத்திற்கு யாரையும் மறந்தும் தப்பாக கூடப் பேசத் தோன்றவில்லை. தான் மட்டுமல்ல வாசுவும் சீனுவும் கூட மருமகளின் போக்கை நினைத்து உள்ளுக்குள் வருத்தப் படுவது தெரிந்தது.

"மன்னி நல்ல மனசுக்கு உனக்கு நல்ல பொண்ணா வந்திருக்கக்கூடாதா?" அவர்கள் உள்ளுக்குள் புலம்புவது தெரிந்தது. அந்த வேதனையில் உடம்பு சரியில்லாமல் போனது.

"என்ன பொண்ணோ? டிரஸ் கூடவா ஒழுங்காக போடக் கூடாது. கிரி தான் சொல்லணும். அவன் பெண்டாட்டியைப் பத்தி பேசிட்டோம்னு தப்பா நினைச்சுகிட்டா, எங்களுக்கே சங்கடமா இருக்கு." வாசுவும் சங்கடப் படுகிறான்.

"உனக்கு மேல் எனக்குதான் சங்கடம். போய் நேரே பேசக் கூட கஷ்டமா இருக்கு. கிரி அவசரப்பட்டு இருக்க வேணாம்." சீனு அங்கலாய்க்கிறான்.

இது சொர்ணத்தின் காதில் விழ, சொர்ணத்திற்கே கஷ்டமாகத்தான் இருந்தது. டிரஸ் மோசமாக அணிகிறாள் என்பது மட்டுமல்ல, பெரியவர், சின்னவர் மரியாதையே தெரியவில்லை. எத்தனையோ முறை சீனுவையும் வாசுவையும் எத்தனையோ வேலை வாங்கி இருக்கிறாள். யாராவது வந்து

விட்டால் போதும் "காபி" என்று ஹோட்டலில் குரல் கொடுப்பதைப் போல சொல்வாள். இதெல்லாம் மகன் காதில் போடலாமா? வேண்டாமா? புரியாமல் விழித்தாள் சொர்ணம். மூச்சுத் திணறல், ஜுரம் என்று படுத்தவள் அன்று தான் சற்று எழுந்தாள். பிள்ளை ஆஸ்பத்திரிக்குப் போய் வந்து சிரத்தையாக கவனித்து மருந்து கொடுத்து பார்த்துக் கொண்டான்.

"அம்மா கம்பிளீட் ரெஸ்ட் எடுத்துக்கோ. இனிமே வேலை, வெட்டி எதுவும் வேணாம்." பிள்ளை வாஞ்சையாக கவனித்தாலும் மருமகள் தாமரை இலைத் தண்ணீர் போல் ஒட்டாமல் இருந்தாள். மாமியாரிடம் ரொம்ப வைத்துக் கொள்ளவில்லை. மாமியார் ரூமிற்குக் கூட போக மாட்டாள்.

அன்று ஜுரம் சற்று தேவலை. எழுந்து அமர்ந்திருந்தாள். சிரகம், மிளகு சேர்த்து ரசம் அற்புதமாகச் செய்திருந்தான் சீனு.

"மன்னி எழுந்து ஒரு வாய் சாப்பிட்டு விட்டு படு." என்கிறான் சீனு. கை, கால், முகம் துடைத்துக் கொள்ள தண்ணீரை இங்கயே கொண்டு வந்து விட்டான் சீனு.

"என்னப்பா இது?"

"என்னவா? வீடு முழுக்க மாஞ்சு மாஞ்சு நடந்து உம் பேச்ச இதெல்லாம் இல்லாம இந்த ஒரு வாரமா எங்களாலே இருக்கவே முடியலே. வா. மூஞ்சியெல்லாம் அலம்பிண்டு பழையபடி நடமாடு வா."

இவர்கள் பேசப் பேச ஏனோ அழுகையே வந்தது சொர்ணாவிற்கு.

"ஏம் மன்னி அழறே? உடம்பு வலிக்கிறதா? முடியலையா? சொல்லு மன்னி. உனக்கு என்ன வேணும்னாலும் நாங்க செய்யறோம்." 'தன் வயிற்றிலா பிறந்ததுகள். தானா வளர்த்தோம். இது என்ன மாதிரியான பந்தம்? இப்படி உயிரா இருக்கத் தோணறது?'

அன்று சீனு மன்னிக்கும் ரசம் சாதம் கரைத்துக் கொண்டிருக்கும் போதே

MITHRAVINDA 007



"சீனு அங்கிள்" என்றபடி வந்தாள் மருமகள்.

"என்னம்மா?"

"கொஞ்சம் உருளைக் கிழங்கு போண்டா, நிறைய முந்திரி, திராட்சை போட்டு ப்ரூட் கேசரி, நல்ல காபி. இதெல்லாம் ரெடி பண்ணுங்க. எம் பிரண்ட்ஸ் வராங்க."

வேறு ஒரு சமயமாக இருந்தால் மருமகள் சொல்லிவிட்டாளே என்று மாய்ந்து, மாய்ந்து செய்து தருவான், இன்று ஏனோ மனது சரியில்லை. மன்னிக்கு உடம்பு என்றதுமே விண்டு போனது போதாக் குறைக்கு இன்று அவள் கண்களில் இருந்து கண்ணீர். இத்தனை நாட்களில் மன்னி அழுததை பார்த்ததே இல்லை. ஏனிப்படி? மாமியாருக்கு உடம்பு சரியில்லை என்று ஒரு டம்ளர் சுடு தண்ணீர் கூட கொடுக்க வில்லை. விருந்தாம் விருந்து. கிரியின் மனைவி போண்டா, ஸ்வீட் என்று வேளை நேரம் தெரியாமல் கேட்டது எரிச்சலைத் தந்தது.

"இல்லேம்மா எனக்கே தலைவலி. போய் படுத்துக்கப் போறேன். முடியலே," என்றவன் "மன்னி இதை சீக்கிரம் சாப்பிடுங்கோ." பேசவும் மருமகளின் முகம் மாறியது. அப்போது தான் மன்னிக்கு மருந்து, மாத்திரை என்று வாங்கி வந்த வாசுவை பிடித்துக் கொண்டாள் மருமகள். காலையில் காய்கறி மொத்தமாக நல்ல விலையில் வாங்குகிறார்கள் என்று கேட்டு பேசப் போனவன். இப்போது தான் வருகிறான். சாப்பிடக் கூட இல்லை. கேட்கிறாள் சொர்ணம்.

"இல்லை மன்னி ஹோல் சேல் கடை பஸ் ஸ்டாண்டை விட்டு எங்கயோ இருக்கு. மொத்த நேரமும் பேசிட்டு இப்ப தான் வரேன். பசி தாங்கலை மன்னி."

"சீனு தட்டைப் போடுப்பா" சொர்ணம் சொல்ல, சீனு தட்டைப் போட மருமகள் குறுக்கே வருகிறாள்.

"வாசு அங்கிள் என் பிரண்ட்ஸ் வராங்க அதனால பாதாங்கீர், தோசை, இடியாப்பம், காபி எல்லாம் வாங்கிண்டு வந்திடுங்க. அப்புறமா சாப்பிடலாம்."

"எம்மா.." ஏதோ கேட்க வந்த வாசுவை கேட்க விடவில்லை அவள். "சீனு அங்கிளுக்கு செய்ய முடியதாம். அதான்." மொட்டையாக சொன்னதும் தூக்கி வாரிப்போட்டது சொர்ணத்திற்கு.

"இத பாரும்மா அவன் இப்பதான் வந்திருக்கான். சாப்பிட்டடும். அப்புறம் போகலாம். காலையிலிருந்து வெறும் வயத்தோட இருக்கான்." சொர்ணம் சொல்ல, சொல்ல சொர்ணத்தையே வெறிக்கிறாள் மருமகள்.

"ஓ நான் சொன்னா செய்யக் கூடாதா?"

"என்னம்மா இப்படிப் பேசறே. அவனும் மனுஷன் தான். காலைலேந்து லோல் பட்டுட்டு வரான். சாப்பிட வேணாமா?"

"எனக்கு பிரண்ட்ஸ் வரப் போறாங்க. எம் மேரேஜைப் பற்றி விசாரிக்க வராங்க. அவங்களுக்கு ஏதானும் செய்து தர வேணாமா? அவர் என்னால முடியலேன்னு சொன்னவுடன் கடையிலேர்ந்து வாங்கிட்டு வாங்கன்னு தானே சொல்றேன். எம் வீட்டுக்கு முதல்முதல் வரவங்க தண்ணி கூட சாப்பிடாம தான் போகணுமா? இதே தன் வீடா இருந்தா இப்படியா இருக்கும்?"

"ரைட்டும்மா. நீ சொல்றது சரிதான். இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு வாங்கிட்டு வரட்டும்."

"அது அவுங்க சொல்லட்டும் நீங்க என்ன...? அவளை முடிக்க விடவில்லை சொர்ணம்."

"அவங்க ரெண்டு பேரும் வேலைக்காரங்க இல்லே. உனக்கு சின்ன மாமனார். மாமனார் ஸ்தானம்." வாசு கிளம்ப யத்தனிக்கையில்.

"வேண்டாம் வாசு கிளம்பாதே." தடுக்கிறாள். "மொதல்லே சாப்பிடு. அப்புறம் போகலாம். கொஞ்சம் மனுஷத்தன்மையோடு நடந்துக்கம்மா." அவளையும் மீறி வார்த்தைகள் வாயில் வந்து விடுகிறது.

"உங்க மனுஷத்தன்மை தான் தெரியறதே. அதான் புருஷனை விட்டு

MITHRAVINDA 007



அடிபட்டவள் போல் சுருண்டு போனாள் சொர்ணம். மாமியார் தான் அப்படி என்றால் மருமகளாவது புரிந்து கொள்ளக் கூடியவளாக வரக்கூடாதா? மனம் சுருண்டது.

"இதோ பாரும்மா மன்னியை ஏதானும் தப்பா பேசினா நான் கொலைகாரனாகவே மாறிவிடுவேன். பத்திரம் நல்லதை மட்டும் யோசி. கீழ்த்தரமா யோசிக்கறதை விட்டுடு." வாசு உறும, சீனு முறைக்கிறான், ஏற்கனவே மாறிய மருமகளின் இருண்ட முகம் பின்னும் மாறியது.

"எனக்கு இப்ப ஸ்வீட், காரம் செய்தாகணும் வருமா? இல்லையா?" கத்துகிறாள் சுகுணா.

"கை, கால் இல்லே செய்துக்கோ. இல்லே கோடில தான் கடை இருக்கு வாங்கிக்க." கத்துகிறான் சீனு.

"சமையல் பண்றவனுக்கு இத்தனை வாயா?" சுகுணா கத்த, சொர்ணத்திற்கு பற்றிக் கொண்டு வந்தது.

"என்னடி சொன்னே? யாரைப் பார்த்து சமையல் பண்றவன்னு சொன்னே." நிமிட நேரத்தில் பட்டென்று அவள் கன்னத்தில் அறைந்தாள்.

"மாமனார்னு மரியாதை இருக்கணும். ரெண்டு பேரும் என்ன வேலைக்காரங்கன்னு நெனச்சியா? இன்னிக்கு உம் புருஷன் டாக்டர்னு மார் தட்டிக்கறதுக்கு காரணமே இவா தான். நன்றி மறந்தியானா நல்ல கதிக்கு போக மாட்டே" சொர்ணம் கத்துகிறாள். வெறி பிடித்தவள் போல் கத்துகிறாள். வாயில்லா பூச்சியான சொர்ணம் அடக்கமான சொர்ணம், மற்றவர்களை மதிக்கும் சொர்ணம், இன்று தன் நிலை மறந்து கத்துகிறாள். சொர்ணமா இப்படி கத்துகிறாள். சொர்ணமா அப்படி. சீனு கூட அதிர்ச்சியோடு பார்க்கிறான் 'மன்னியா இப்படி? மன்னியின் இந்த ரூபத்தைப் பார்த்ததே இல்லையே. தங்களின் மேல் இத்தனை வாஞ்சையா? ஒரு வேளை போன ஜன்மத்து பந்தமாக இருக்குமோ. போன ஜன்மத்தில் இவள் என் தாயாக இருந்திருப்பாளோ? வாசுவும். சீனுவும் மலைத்துப் போய் பார்க்க, சொர்ணம் ஆவேசம் அடங்கியவளாய் கண்களில் நீரோடு

நிற்கிறாள். மருமகள் மடமடவென்று மாடி ஏறிப் போனது தெரிந்தது. பேசக்கூடத் தோன்றாமல் மூன்று பேரும் பிரமை பிடித்தாற் போன்று நின்றிருந்தனர். சிறிது நேரம் கழித்து சீனு ஆரம்பிக்கிறான்.'

"மன்னி.. என்ன மன்னி இப்படி பண்ணிட்டீங்க?"

"ஏம் மன்னி இத்தனை உணர்ச்சி வசப்பட்டுட்டீங்க?" வாசு மென்மையாக கேட்கிறான்.

தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விடுகிறாள் சொர்ணம். 'நான் ஏன் இப்படி செய்தேன்? எனக்கு ஏன் இத்தனை கோபம் வந்தது? அவள் சின்ன பெண் தானே என்று பேசாமல் இருந்திருக்கலாமோ. இருந்தாலும் என்ன கேட்பது என்ற விவஸ்தை இல்லாமல் கேட்பதா? பாவம் சீனுவும், வாசுவும். நான் தான் உலகம் என்று வாழ்ந்தவர்கள். எத்தனை உழைத்திருப்பார்கள். எத்தனை விசுவாசமாய் இருந்திருப்பார்கள். அதற்கு பலன் இது தானா? நேற்று வந்த அவள் சீனுவை சமையற்காரனாக நினைத்து அவமானப்படுத்துவதை எப்படி பொறுத்துக் கொள்வது? நான் செய்தது தவறா?'

அன்று இரவு கிரி வந்ததும் எதுவும் நடக்கவில்லை. ஒரு வேளை தன் மருமகள் புரிந்து கொண்டு விட்டாளோ. இல்லையே விருட்டென்று போனாளே. ஒரு வேளை மகன் புரிய வைத்திருப்பானோ. சீனு, வாசு இருவர் முகத்திலும் ஈயாடவில்லை. ஏதோ ஒரு வகை சோகத்தில் மாட்டியது போல் தோன்றினர். இரவு வந்தாலும் கிரி அம்மாவை ஒரு நிமிடம் பார்க்காமல் இருந்ததில்லை. காலையில் புறப்படும் போதும் அம்மாவிடம் சொல்லாமல் சென்றதில்லை. இப்போது இரண்டு நாட்களாக அம்மா இருக்கிறாளா, இல்லையா என்பதே மகனுக்கு தெரியவில்லை போலிருக்கிறது. அம்மாவின் முகத்தைக் கூட பார்க்கவில்லை அவன் எப்போது வருகிறான் எப்போது போகிறான் என்பதே தெரியவில்லை. இரண்டு நாட்களாக வேலையே எந்திர கதிதான். அவரவர் அவரவர் கூட்டுக்குள் ஒடுங்குவது போல் ஒடுங்கி இருந்தனர்.

MITHRAVINDA 007



"மன்னி" சீனு தான் மெதுவாக வந்து ஆரம்பிக்கிறான்.

"என்னப்பா?"

"வந்து கிரியைப் பார்த்தே இரண்டு நாளாகிறது. கிச்சனுக்கு கூட வரலை. அவனைப் பார்க்கலாம்னு போனா பார்க்க முடியலை. ஒரு வேளை நம்பளை தப்பா புரிஞ்சிண்டானோ என்னவோ. பேசிப் பார்க்கலாமா?"

"வேண்டாம்பா."

சிறிது நேரத்தில் வாசுவும் ஓடி வந்தான்.

"மன்னி கிரி பேசவே இல்லை. இரண்டு நாளா பேசலே. நான் போய் பேசியும் பதிலே இல்லே. தலையை திருப்பிண்டு போயிட்டான்."

மனம் வேதனைப் பட்டது. 'அம்மா..அம்மா' என்று சுற்றிய தன் பிள்ளையா இப்படி? இந்த குழந்தை வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, இதை என்னவோ உலகத்துலே சிறந்த வாரிசாக நினைத்து சுமந்தது தன் தவறா? பார்ப்போம். தன்முன் நிழலாட நிமிர்ந்து பார்க்கிறாள். கிரி தான் நின்று கொண்டிருந்தான். என்ன கேட்கப் போகிறான்' அவனையே உறுத்துப் பார்க்கிறாள் சொர்ணம்.



## 12

"என்னடா" கேட்டுவிட்டு அவனையே பார்க்கிறாள்.

"ஆமாம் இந்த வீட்டு மேலே எத்தனை கடன் வச்சிருக்கே?"

"ஏண்டா கேட்கிறே?" ஒரு வேளை பணக்கார மாமனார் தயவிலே கடனை அடைத்து விடுவானோ? அம்மா நீ பட்ட

கஷ்டம் போதும் என்பானோ. அவன் பெண்டாட்டியை அடித்தது பற்றி ஒன்றுமே கேட்கவில்லையே.

"இன்னும் கொஞ்சம் கடன் இருக்கு. இன்னும் மூணு இலட்சம் கட்டணும். கொஞ்ச நாள் வட்டி கட்ட முடியலே. நகை, அதுக்கு, இதுக்குன்னு செலவழிச்சாச்சு." சற்று ஆசுவாசப் படுத்திக் கொண்டாள் சொர்ணம். சட்டென்று ஞாபகம் வந்தது. "பர்வதம் மாமிக்கு இருநூறு ருபாய் வேண்டுமாம். வழக்கமாக வந்து கொண்டிருந்த வருமானம் நின்று விட்டதாம். நேற்று மாமியின் தம்பி தான் யாருக்கும் தெரியாமல் சொல்லி விட்டுப் போனான். மாமி மூச்சே விடவில்லை. பிள்ளையிடமே கொடுத்து அனுப்பலாம்.

"டேய் நீ ஆஸ்பத்திரிக்கு எப்ப போவே? எனக்கு உடம்பே முடியலே. நீ போறச்சே பர்வதம் மாமி கிட்டே இதை கொடுத்திடு. பாவம் ரொம்ப மானஸ்தி. வாயைத் திறந்து கஷ்டம்னு சொல்லலை."

"ஏம்மா பேங்க் கடனுக்கு வட்டி கட்ட முடியலே. இந்த தண்ட செலவெல்லாம் தேவையா?"

"என்னடா பேசறே?" சொர்ணம் அதிசயமாக மகனையே பார்க்கிறாள். பிள்ளை இப்படி எல்லாம் பேசக்கூடியவனே இல்லை. மிஞ்சிப் போனால் பெண்டாட்டியை அடித்தது பற்றி கேட்பான் என்று நினைத்தாள்.

"என்னம்மா பிள்ளை வாயில்லா பூச்சின்னு நினைப்பா? நீ என்ன சொன்னாலும் ரைட் ரைட்னு தலையை ஆட்டறாங்களே சித்தப்பா, அவுங்கன்னு நினைச்சியா? நீ பாட்டுக்கு கடனை வச்சிட்டு போயிடுவே. யார் கட்டறது? இத்தனையும் என் தலைல தானே விடியும்."

"என்னடா பேசறே நீ?" சொர்ணத்தால் எதையும் நம்ப முடியவில்லை.

"இதபாரும்மா நாம நிஜத்தை மட்டும் இப்ப பேசுவோம். நீ பாட்டுக்கு இருக்கறதெல்லாம் அவுத்துவிட்டுகிட்டே

MITHRAVINDA 007



இருந்தியானா அப்புறம் என் லைப்புக்கு என்ன பண்றது? இத்தனை கடனை எப்படி அடைக்கறது சொல்லு?"

சொர்ணத்திற்கு சிரிப்பு தான் வருகிறது. பதினெட்டு வயதில், எந்த வித படிப்பும் இல்லாமல். எந்த வித அனுபவமும் இல்லாமல், வெறும் தைரியத்தை மட்டும் துணையாக வைத்து சாதிக்கலையா? அவன் டாக்டருக்கு வேறு படித்திருக்கிறான். 'படிப்பில் புலி,' என்று பேர். எதிர்காலம் என்னவாகுமோ என்று நடுங்குகிறான்.

"அப்புறம் இப்பவே சொல்லிடறேன் இந்த சித்தப் பாக்களுக்கு ஒரு வழி பண்ணிடு. ஆளுக்கு ஒரு போர்ஷனை கொடுத்திடு அவங்க காலம் முடியற வரைக்கும் இருக்கட்டும். ஆனா ஒரு போர்ஷனோடு சரி மீதியிலே எந்த உரிமையும் இருக்கக்கூடாது. வீடு எம் பேருக்கு வரும் போது எந்த வில்லங்கமும் இல்லாம சுத்தமா வரணும் தெரிஞ்சதா?" ஒரு நிமிடம் அதிர்ந்து போய் அமர்ந்திருக்கிறாள் சொர்ணம். பேசியது தன் பிள்ளை. 'என் பங்குக்கு நான் ஏதாவது செய்ய வேண்டாமா?' வலுவில் வந்து உழைத்து கடனை அடைத்தவன். 'சித்தப்பா, சித்தப்பா' என்று உயிரை விடுபவன், தன் காதலியைக் கூட சித்தப்பாவிடம் தான் முதலில் காண்பித்தவன். அப்படி இருந்தவன் ஒரு போர்ஷன் கொடுத்து விட்டு, மற்றதில் அவர்களுக்கு உரிமை இருக்கக் கூடாது என்று இப்போது சொல்கிறான். இப்படி எல்லாம் பேச யார் கற்றுக் கொடுத்தார்கள்?

"என்ன பேசறேன்னு தெரிஞ்சு பேசறியா?"

"தெரிஞ்சு தான் பேசறேன். உனக்கு பெத்த பிள்ளையை விட மச்சினர்கள் கிட்டே தான் பாசம் அதிகம். அதுவும் தெரிஞ்சே தான் பேசறேன்."

"டேய் என்னடா இதெல்லாம்?" சற்று குரலை உயர்த்துகிறாள்.

"எம் வைப் அதான் உன் மாட்டுப் பெண் அவசரம்னு ஏதோ செய்து தரச்சொன்னா. உன் முதல் மச்சினன் முடியாதுன்னு

மறுத்து கேவலமா பேசியிருக்காள். சரி இவா தான் செய்யலையேன்னு உன் இரண்டாவது மச்சினனை கடைக்கு அனுப்பிச்சா நீ அடிக்கவே அடிச்சிருக்கே."

"ஒ இப்படி சொல்லிட்டாளா அவ. உன் பெண்டாட்டி என்ன பேசினான்னு தெரியுமா?"

"என்னம்மா பேசினா ஊர் உலகத்துலே எல்லாம் தான் பேசறாங்க. உன் சொந்தப் பொண்ணா அவ? அவளை கை நீட்டி அடிக்க உனக்கு என்ன உரிமை இருக்கு? உனக்கு மாமியார் கொடுமை பண்ணாங்கறியே. நீ பண்ணதுக்கு பேரென்ன? உன்னைச் சொன்னா கூட பொறுத்தப்பே. ஆனா அவங்களைச் சொன்னா. நீ தாள மாட்டே இப்படியே விட்டா நான்தான் அன்னியமாகி விடுவேன்."

"அன்னியன்னு சொல்லிட்டு சொந்தம் கொண்டாட எப்படி மனசு வருது?"

"என்ன சொல்றீங்க? உங்க பிராப்பர்டி என்னுது இல்லையா? உங்களது சுயார்ஜிதமாக இருப்பதுனாலே அவுங்களுக்கு எழுதி வைக்கப் போறீங்களா? எனக்கு பங்கு கிடையாதா?"

"என்ன பேத்தறே. என் சொத்தை வேணா நீ எழுதி வாங்கிக்கலாம் உனக்கு உரிமை இருக்கு. ஆனா யாரோ சொத்துக்கு நாம எப்படி உரிமை கொண்டாட முடியும்?"

"என்ன சொல்றீங்க?" கிரி ஆத்திரப்பட்டான்.

"புரியலையாப்பா. வீடு உன் இரண்டு சித்தப்பா பேர்ல தான் இருக்கு. என் பேரிலே இல்லை. நாளைக்கு அவாளே பார்த்து ஏதாலும் கொடுத்தாதான் எனக்கே.."

"ஊரு உலகத்துலே பேசறான்னு நெனச்சேன். எல்லாம் சரிதான்" பிள்ளை அலட்சியமாக சொல்ல, சொல்ல சொர்ணம் ரௌத்தகாரமாக எழுந்திருக்கிறாள்.

"என்ன சொன்னே? ஊரு உலகத்துலே என்ன சொல்றா?"



"மத்தவா சொல்றது என்ன? நானே கேக்கறேன். உங்களுக்கு என்ன அவா பேர்ல அக்கறை? புருஷனே இல்லேங்கற போது மச்சினன் உறவு எங்கிருந்து வந்தது?"

"போதும் நிறுத்து. ஒரு வார்த்தை மேலே பேசினே கொலை விழும்."

"ஏம்மா உண்மையைச் சொன்னா உடம்பு எரிகிறதா?"

"அடி செருப்பாலே. எதடா உண்மை. இந்த வீட்டுக்காக நாயா அவா உழைச்சது உண்மை. பணத்துக்கு பேயா அலைஞ்சது உண்மை. கொஞ்சமாவது மனசாட்சி இருந்தா நீயே அவா பேர்ல தான் இருக்கணும்னு சொல்லி இருப்பே. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நடுவிலே நீ சொன்ன உறவு முறை தான் இருக்கா வேறு எதுவும் இல்லையா? மனுஷத்தன்மைக்கு ஆண், பெண்ணுங்கற பேதம் கிடையாதுடா. அந்த வீட்டு கஷ்டத்துலே அந்த பிள்ளைகளை காப்பாத்தினேன். என்னைத் தாயா நினைக்கிறா? ஆனா நீ? சொந்த தாயை இதைவிட யாரும் கேவலமா பேசமுடியாதபடி பேசிட்டே. நெருஞ்சி முள்ளை ரோஜாவாக்கி காட்டலாம்னு கனவு கண்டேன். முள்ளு முள்ளு தான்னு தீர்மானம் ஆயிடுச்சு."

"என்னம்மா?"

"ஆமாம்டா உங்கப்பன் புத்தி தானே உனக்கும் இருக்கும். என்னதான் பார்த்து பார்த்து வளர்த்தாலும், நல்லதைச் சொல்லிக் கொடுத்தாலும், உனக்கு ஏர்றது தானே ஏறும். ஊட்டி வளர்த்தாலும் ஒட்டறது தானே ஒட்டும்."

"உங்களைப் பத்தி பேசினாவே ஜீரணிக்க முடியலையே உண்மை கசக்கிறதா?"

"எதுடா உண்மை? உங்கப்பன் உன்னைத் தன் பிள்ளைன்னு அங்கீகரிக்கலையே அது உண்மை. அண்ணனுக்காகவே வாழ்ந்து, வாழ்ந்து பின் உனக்காக வாழ்ந்து தனக்குன்னு தனியா வாழ்க்கையை அமைச்சிக்க தெரியாம

MITHRAVINDA 007

நிக்கறாளே அது உண்மை. எல்லா உழைப்பையும் கொடுத்திட்டு, எனக்கு அம்மாங்கற ஸ்தானத்தையும் தந்து ஒசந்த பீடத்துலே ஏத்தி உக்கார வச்சிருக்காளே அது உண்மை எல்லாத்தையும் மீறி அண்ணன்கள் கிட்டப்பட்டது போறாதுன்னு, அண்ணன் மகளையும் வளர்த்து, அவன் கையாலே அடிபடறாளே, அதுவும் பெரிய உண்மை தான்."

"உங்க டயலாக் போதும் எப்படி இந்த மாதிரி பாசம் வரும்? அதான் ஏன்னு கேக்கறேன்?"

"ஆமா பத்து மாசம் சுமந்து பெத்த உனக்கு வரலை. அவங்களுக்கு வந்தா ஆச்சரியமாத்தான் இருக்கும்."

"இதோ பாரும்மா வீணா பொலம்பறதுலேயோ, கத்துறதாலேயோ பிரயோஜனம் இல்லை. எனக்கு பதில் சொல்லு. இதுக்கு ஒரு முடிவைச் சொல்லு."

"முடிவா சொல்றேன். உன் பிராக்டிஸை வேறு ஊரிலே வச்சுக்க."

"அம்மா..."

"என்னடா முறைக்கறே? இந்த வீடு என் சுயார்ஜிதம் தான். ஆனா என்னது மட்டுமல்ல. என் பிள்ளைகளையும் சார்ந்தது. பிள்ளைன்னு யாரைச் சொல்றேன்னு உனக்கு புரிஞ்சிருக்கும்." கிரியின் முகம் சிவந்தது. கிரி விர்ரென்று வெளியேற, குலுங்கி, குலுங்கி அழுதாள் சொர்ணம்.

அடுத்த நாள் வக்கீல் வீட்டிற்குச் சென்று எல்லாவற்றையும் தனக்குப் பின் மச்சினர்கள் பேரில் எழுதினாள். அவர்கள் காலம் முடியும் வரை அவர்களால் இந்த உயிலை மாத்த முடியாதபடி செய்யணும். அவர்களுக்கு அப்புறம் என் பிள்ளை என்று சொல்லப்படுகிற கிரிக்கும் ஒரு பங்கும், மற்றது அனாதை இல்லத்திற்கும் வழங்கப்பட வேண்டும்.

மறு நாள் "அம்மா நான் என் மாமனார் வீட்டோடப் போறேன். நீ என்ன முடிவு பண்ணியிருக்கே? உன் பதிலில் தான் என் முடிவு இருக்கு."

MITHRAVINDA 007



"முடிவை ஏற்கனவே நான் சொல்லிட்டேன்."

"மன்னி என்ன இது? இப்படி பண்ணிட்டேள்?" இது வாசு.

"என்னிக்கிருந்தாலும் அவனுக்கு கிடைக்க வேண்டிய பிராப்பர்டி. அதை கடனில்லாமல் கொடுத்தா என்ன? என்ன தப்பு?" இது சீனு.

"இத பாருங்க மன்னி. இந்தக் குழந்தை கஷ்டப்படக் கூடாது. அது பாவம். சின்ன பையன் அவன் கிட்டே போய்..." இரண்டு பேரும் பேச.

"நீங்க ரெண்டு பேரும் சித்த பேசாம இருக்கீங்களா?" சொர்ணம் அதட்டலாகப் பேச ரெண்டு பேரும் மௌனமாகத் தலை குனிந்தனர்.

"இத பாருடா என் முடிவை நான் சொல்லிட்டேன். தாய்ங்கறது அற்புதமான உறவு. பெத்தா தான் அந்த உறவுங்கறது இல்ல. அதை நீ தெரிஞ்சுக்கோ. நீ சொத்தை தாம்மான்னு கேட்டிருந்தாக் கூட நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன். ஆனா நா கூசாம என்னென்ன பேசிட்டே" சட்டென்று சொர்ணத்தின் கண்கள் கலங்கின.

"மன்னி" பதறினர் இருவரும்.

"பார்த்தியாடா. இது தான்டா பாசம்ங்கறது. இப்போதாவது நீ புரிஞ்சிப்பேன்னு நினைக்கிறேன். ஏறி வந்த ஏணியை எட்டி உதைக்கிறது எத்தனை பாவமோ அத்தனை பாவம் உன் சித்தப்பாக்களை வெட்டி விடணும்னு நினைச்சியே அது பாவம்டா. அப்பாவிக் குழந்தைகள். தனக்குன்னு ஒண்ணுமே சேர்த்து வைக்கத் தெரியாத குழந்தைகள். போயேண்டா இன்னும் ஏன் நிக்கறே?" பிள்ளையை விரட்டாத குறையாக சொல்ல, பிள்ளை, பெண்டாட்டியுடன் விருட்டென்று வெளியேறினான்.

"மன்னி, மன்னி" நாத்தழுதழுக்க கூப்பிட்டவர்களை.

"எனக்கு ஒரு ஆசை நிறைவேத்துவீங்களா? நம்பளோடது. நம்பளோடதுன்னு நினைச்ச சுயநலப்பட்டதுனால தானே இந்த

மாதிரி நெருஞ்சி முள்ளும், கள்ளிச் செடியும் வளர்க்க நேர்ந்தது. இந்த சீனுவும், வாசுவும் இல்லேன்னா சொர்ணத்தோட கதி என்ன? இந்த மாதிரி அனாதையா தவிக்கிற எத்தனையோ சொர்ணங்களுக்கு ஆதரவு காட்ட சீனுவும், வாசுவும் போல நல்ல பிள்ளைகளை வளர்க்கணும். அப்படி வளர்க்கறதுக்க எனக்கு உதவி செய்வீர்களா?"

"மன்னி" பேச முடியாமல் தழுதழுக்க, மறுபடியும் கேட்டாள்.

"நான் அனாதைக் குழந்தைகளை எடுத்து வளர்க்கப் போறேன். நன்னா படிக்கணும். டாக்டரா ஆகணும், இன்ஜினியராக ஆகணும்னு வளர்க்கப் போறதில்லே. நல்ல மனுஷனா ஆகணும், நல்ல உணர்வுகள் வரணும், நல்ல நினைவுகள் ஏற்படணும். நான் எந்த பிள்ளையை எடுத்து வளர்த்தாலும் இனிமே இந்த விதையைத் தான் விதைக்கப் போறேன். இதுக்கு எனக்கு உதவி செய்வீங்களா?" சொர்ணம் கேட்க, "மன்னி நீ எப்படி சொல்றியோ அப்படியே மன்னி" ருவரும் குழந்தை போல் கோரஸாகக் கூற, "ம்... இனிமே நான் ன்னி இல்லே அம்மா." என்கிறாள் சொர்ணம்.

MITHRAVINDA 007